தமிழக அரசின் 2024-2025 ஆம் நிதியாண்டிற்கான வரவு - செலவுத் திட்டம் குறித்து

# பாட்டாளி மக்கள் கட்சி

தமிழக மக்கள் மன்றத்தில் முன்வைக்கும்

# நிழல் நிதிநிலை அறிக்கை

(பா.ம.க.வின் 22ஆவது நிழல் நிதிநிலை அறிக்கை)


## பாட்டாளி மக்கள் கட்சி

திருவள்ளுவர் ஆண்டு 2055 மாசித் திங்கள் 2 ஆம் நாள்

(14.02.2024 - புதன் கிழமை)

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | முகவுரை | 5 |
| 2. | நிதிநிலை அறிக்கை குறித்த விளக்கம் | 8 |
| 3. | அரசியல் கட்சிகளும் நிதிநிலை அறிக்கையும் | 8 |
| 4. | நிதிநிலை அறிக்கையில் பா.ம.க.வின் பங்கு | 8 |
| 5. | செயலாக்கப்பட்ட திட்ட விவர அறிக்கை மற்றும் பொருளாதார ஆய்வறிக்கை | 9 |
| 6. | கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை திட்டங்களின் விளைவுகளும் தாக்கங்களும் | 9 |
| 7. | வேளாண்மைக்கு அமைச்சரவைக் குழு | 10 |
| 8. | நிதிநிலை அறிக்கை தயாரிப்புக்கு முன் கலந்தாய்வு | 10 |
| 9. | கிராமசபையில் தொடங்கும் திட்டமிடல் | 11 |
| 10. | பாலின நிதிநிலை அறிக்கை | 11 |
| 11. | நிதிநிலை அறிக்கையில் முன்னுரிமை | 12 |
| | **தமிழ்நாட்டின் பொருளாதார நிலை** | |
| 12. | மிகப்பெரிய சரிவை நோக்கி தமிழக பொருளாதாரம் | 12 |
| 13. | வருவாய் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை அதிகரிக்கும் | 14 |
| 14. | கடன் அதிகரிக்கும் | 14 |
| 15. | 2024–25ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் பொருளாதாரநிலை வளர்ச்சியடையும் | 15 |
| 16. | தமிழ்நாட்டில் மொத்த கடன் ரூ.14.50 லட்சம் கோடியாகஅதிகரிக்கும் | 16 |
| | **நிதிநிலையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள்** | |
| 17. | தமிழக அரசின் நிர்வாக செலவுகள் 15% குறைப்பு | 17 |
| 18. | கடனை திரும்ப செலுத்துவதற்காக அரசின் வருவாயை<br>ரூ.1.80 லட்சம் கோடி அதிகரிக்கச் செய்வதற்கான சிறப்புத் திட்டம் | 18 |
| 19. | பொருளாதார மீட்சிக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் | 19 |
| 20. | 20 ஆண்டுகளில் அடைக்கவேண்டிய ரூ.4 லட்சம் கோடி<br>கடன் அடுத்த 5 ஆண்டுகளில் அடைக்கப்படும் | 20 |
| 21. | அதிக இனிப்பு, உப்பு, கொழுப்பு கொண்ட<br>உணவுப் பொருட்களுக்கு 30% கூடுதல் வரி | 21 |
| | **சமூகநீதி** | |
| 22. | 2024–25 சமூகநீதி சிறப்பாண்டு: சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும் | 21 |
| 23. | வன்னியர்கள் இடஒதுக்கீடு | 22 |
| 24. | பிற சமூகங்களுக்கும் உள் இடஒதுக்கீடு | 22 |
| 25. | இடஒதுக்கீட்டின் பயன்கள் – வெள்ளை அறிக்கை | 23 |
| 26. | பிற்படுத்தப்பட்ட சாதிகளின் முன்னேற்றத்திற்காக கார்ப்பரேஷன்கள் | 23 |
| 27. | சமையல் எரிவாயுக்கு ரூ.500 மானியம் | 24 |
| 28. | கஞ்சா உள்ளிட்ட போதை பொருட்களை ஒழிக்க<br>– டிஜிபி தலைமையில் காவல்துறையில் தனி பிரிவு | 24 |
| 29. | கோயம்பேடு பேருந்து முனையத்தில் சென்னையின் மிகப்பெரிய பூங்கா அமைக்கப்படும் | 24 |
| 30. | மதுவிலக்கு | 25 |
| 31. | குழந்தைகளுக்கு தனித் தமிழில் பெயர் வைத்தால் ரூ.5,000 பரிசு | 25 |
| 32. | ஏழைக் குடும்பங்களுக்கான மாத உரிமைத் தொகை ரூ.2,000ஆக உயர்த்தப்படும் | 26 |
| 33. | முதியோர், ஆதரவற்றோர் உதவித்தொகை ரூ.3,000ஆக உயர்த்தப்படும்:<br>70 லட்சம் பேருக்கு வழங்க நடவடிக்கை | 26 |
| | **இளைஞர்கள் – பட்டதாரிகள் நலன்** | |
| 34. | 2024–25ஆம் ஆண்டில் 2 லட்சம் பேருக்கு அரசு வேலை | 27 |
| 35. | தனியார் தொழில் வணிக நிறுவனங்களில்<br>தமிழர்களுக்கு 80% இடஒதுக்கீட்டு சட்டம் | 27 |

| | | |
|---|---|---|
| 36. | நிலம் கொடுத்தவர்களுக்கு கட்டாய வேலைவாய்ப்பு | 27 |
| 37. | டி.என்.பி.எஸ்.சி. மூலம் அரசுப் பணியாளர் தேர்வு: நிலையான தேர்வு அட்டவணை உருவாக்கப்படும் | 28 |
| 38. | வேலையில்லாத படித்த இளைஞர்களுக்கு மாதம் ரூ.5,000 வரை உதவித்தொகை | 29 |
| | **தொழில்துறை மேம்பாடு** | |
| 39. | தொழில் முதலீடுகள் குறித்து வெள்ளை அறிக்கை | 30 |
| 40. | தொழில் முதலீட்டை ஈர்க்க சிறப்புத் திட்டம் | 30 |
| 41. | தமிழகம் – 5 இடங்களில் ஒருங்கிணைந்த தொழில் மண்டலங்கள் | 31 |
| 42. | 14% ஆண்டுப் பொருளாதார வளர்ச்சி – சிறப்புத் திட்டங்கள் | 31 |
| 43. | ஒரு கோடி பேருக்கு வேலைவாய்ப்பு | 32 |
| 44. | பொதுத்துறை நிறுவனங்களுக்கு புத்துயிர்–பங்குச் சந்தையில் பட்டியலிடப்படும் | 33 |
| | **பள்ளிக்கல்வித் துறை** | |
| 45. | அரசுப் பள்ளிகளை மேம்படுத்த புதிய இயக்கம் | 34 |
| 46. | பள்ளிக் கல்வித்துறை: ரூ.1.25 லட்சம் கோடி நிதி | 34 |
| 47. | பள்ளி கல்வி வளர்ச்சிக்கு தனி நிதியம் | 35 |
| | **உயர்கல்வி** | |
| 48. | பல்கலைக் கழகங்கள் சீரமைப்பு – மேம்பாட்டுத் திட்டம் | 36 |
| 49. | உயர்கல்வி தரம் மேம்படுத்தப்படும் | 37 |
| 50. | மருத்துவத்துறை – ரூ.48,000 கோடி நிதிஒதுக்கீடு | 37 |
| 51. | ஆண்டுக்கு 100 நாட்கள் சட்டப்பேரவைக் கூட்டம் | 39 |
| 52. | பேருந்துக் கட்டணம் உயர்த்தப்படாது | 39 |
| 53. | தாலிக்கு தங்கம் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும் | 40 |
| 54. | இடைநிற்றலைத் தடுக்க ரூ.5,000 வரை நிதி | 40 |
| 55. | தமிழுக்கு முன்னுரிமை: தமிழ் வழியில் படித்தோருக்கு மட்டுமே அரசு வேலை | 41 |
| 56. | புதிய உயர்கல்வி நிறுவனங்கள் | 41 |
| 57. | நகர்ப்புற வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் | 42 |
| 58. | வலிமையான லோக் அயுக்தா: விசாரணை வரம்புக்குள் முதலமைச்சர் பதவி | 42 |
| 59. | பொதுச் சேவை பெறும் உரிமைச் சட்டம் | 43 |
| 60. | நிர்வாக சீர்திருத்த ஆணையம் | 44 |
| 61. | ஈழத் தமிழர்களுக்கு இரட்டைக் குடியுரிமை:மருத்துவக் கல்வியில் இடஒதுக்கீடு | 44 |
| 62. | பேருந்து பயணம்: சென்னையில் அனைவருக்கும் பிற பகுதிகளில் பெண்களுக்கும் இலவசம் | 45 |
| 63. | மாநில கல்விக் கொள்கை – மே மாதம் வெளியிடப்படும் | 45 |
| 64. | கல்வி, சுகாதாரம், விவசாயத்துக்கு அனைத்தும் இலவசம் | 45 |
| 65. | தமிழ்நாடு 60 மாவட்டங்களாக பிரிக்கப்படும் | 47 |
| 66. | இளைஞர் நலன் | 47 |
| 67. | சட்டம் – ஒழுங்கு: காவல்துறையில் சீர்திருத்தம் | 48 |
| 68. | அரிசி விலையைக் கட்டுப்படுத்த கிலோவுக்கு ரூ.15 மானியம் | 49 |
| 69. | காவிரியில் மேகதாது அணை கட்டும் திட்டம் முறியடிக்கப்படும் | 49 |
| 70. | முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் 152 அடியாக உயர்த்தும் பணி விரைவுபடுத்தப்படும் | 50 |
| | **முதன்மைத் துறை** | |
| 71. | வேளாண்மை | 50 |
| 72. | நீர்ப்பாசனத் திட்ட சிறப்பாண்டு – பாசன திட்டங்களை செயல்படுத்த தனி ஆணையம் | 51 |
| 73. | சாகுபடி பரப்பு 5 ஆண்டுகளில் 40 லட்சம் ஏக்கர் அதிகரிக்கப்படும் | 51 |
| 74. | வேளாண் திட்டங்களுக்கு நிதித் திரட்ட சிறப்பு வரி | 51 |

| | | |
|---|---|---|
| 75. | வேளாண்துறை முதலீட்டாளர்கள் மாநாடு | 51 |
| 76. | மாவட்டத் தலைநகரங்களில் வேளாண் தொழில்நுட்பக் கண்காட்சிகள் | 52 |
| 77. | 72 இலட்சம் டன் நெல் கொள்முதல் – ரூ.3,600 கோடி ஊக்கத்தொகை | 52 |
| 78. | தமிழ்நாடு நில ஒருங்கிணைப்புச் சட்டம் திரும்பப்பெறப்படும் | 53 |
| 79. | காவிரி பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம் 9 மாவட்டங்களுக்கு விரிவாக்கம்: என்எல்சி சுரங்கங்களுக்குத் தடை | 53 |
| 80. | சிப்காட் தொழில்பேட்டைகளுக்கு நிலங்களை கையகப்படுத்த தடை | 54 |
| 81. | தகவல் தொழில்நுட்பம் – நான்காம் தொழில் புரட்சி | 54 |
| 82. | கைத்தறி மற்றும் துணிநூல் | 55 |
| | **நெடுஞ்சாலைகள்** | |
| 83. | பறக்கும் சாலை உள்ளிட்ட கட்டமைப்பு திட்டங்களுக்கு ஜிஎஸ்டி வரிவிலக்கு | 55 |
| 84. | நெடுஞ்சாலைகள் துறைக்கு ரூ.15,000 கோடி | 55 |
| 85. | தேசிய நெடுஞ்சாலைகள் பணிகளை விரைவுபடுத்த தனிப் பிரிவு | 56 |
| 86. | தேசிய நெடுஞ்சாலைகள் – சுங்கக்கட்டணத்தை நீக்க நடவடிக்கை | 57 |
| 87. | விமான நிலையங்கள் | 57 |
| 88. | துறைமுகங்கள் | 58 |
| 89. | போக்குவரத்து – அரசுப் போக்குவரத்துக் கழகங்களை இலாபத்தில் இயக்க சிறப்புத் திட்டம் | 58 |
| 90. | கோவையில் ரூ.9,424 கோடியில் 144 கி.மீக்கு மெட்ரோ தொடர் வண்டி | 58 |
| 91. | சென்னை மெட்ரோ ரயில் – கிளாம்பாக்கம் வரை நீட்டிக்கப்படும் | 59 |
| 92. | சென்னைப் போக்குவரத்து | 59 |
| 93. | மின்சாரம் – கட்டணம் குறைக்கப்படும் | 60 |
| 94. | புதிய எரிசக்தி – புதிய அமைச்சகம் | 61 |
| 95. | மின்வாரியத்தை லாபத்தில் இயக்க சிறப்புத்திட்டம் | 62 |
| 96. | சுற்றுலாத் துறை | 62 |
| 97. | திரைத்துறை | 63 |
| 98. | தமிழ் வளர்ச்சி | 63 |
| 99. | அரசு ஊழியர்கள் நலன் – பழைய ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்படும் | 64 |
| 100. | இந்து சமய அறநிலையத்துறை | 65 |
| 101. | ஊரக வளர்ச்சி – உள்ளாட்சிகளுக்கு உண்மையான அதிகாரம் | 65 |
| 102. | நகராட்சி நிர்வாகம் | 65 |
| 103. | நகர்ப்புற வீட்டுவசதி | 66 |
| 104. | குடிநீர்– தண்ணீர் பெறும் உரிமை | 66 |
| 105. | காலநிலை செயல்திட்டம் | 67 |
| 106. | தமிழ்நாடு மரங்கள் பாதுகாப்பு சட்டம் | 67 |
| 107. | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன் | 68 |
| 108. | தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நலன் | 68 |
| 109. | மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் | 68 |
| 110. | பெண் குழந்தைகளுக்கு ரூ.5 லட்சம் நிதியுதவித் திட்டம் | 69 |
| 111. | சத்துணவுத் திட்டத்திற்கு ரூ.4,000 கோடி நிதி | 69 |
| 112. | முதியோர், ஆதரவற்றோர் மற்றும் ஒடுக்கப்பட்டோர் நலன் | 70 |
| 113. | மாற்றுத்திறனாளிகள் நலன் | 70 |
| 114. | சிறுபான்மையினர் நலன் | 70 |
| 115. | தொழிலாளர்கள் நலன் | 71 |
| 116. | ஓய்வூதியர் நலன் | 71 |
| 117. | பத்திரிகையாளர்கள் நலன் | 71 |
| 118. | வணிகர் நலன் | 71 |
| 119. | நடப்பு நிதியாண்டின் (2024 – 2025) ஒட்டுமொத்த நிதிநிலை | 72 |
| 120. | நிறைவுரை | 75 |

தமிழக அரசின் 2024–2025 ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவுத் திட்டம் குறித்து பாட்டாளி மக்கள் கட்சி தமிழக மக்கள் மன்றத்தில் முன்வைக்கும்

# நிழல் நிதிநிலை அறிக்கை (Shadow Budget)

அறிகொன் றறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன்.... (குறள் 638)

குறள் விளக்கம்: ஆலோசனை வழங்குவோரின் அறிவையும் அழித்து, தானும் எதுவும் அறியாதவராக ஒரு நாட்டின் மன்னன் இருந்தால், அவருக்கு நல்ல அறிவுரைகளை வழங்கவேண்டியது அமைச்சரின் கடமை ஆகும்.

## 1. முகவுரை

1. 2024–2025ஆம் நிதியாண்டிற்கான தமிழ்நாடு அரசின் பொது நிதிநிலை அறிக்கை 19.02.2024 திங்கட்கிழமை அன்று தமிழக சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட உள்ளது. கடந்த 2003–04 ஆம் ஆண்டு முதல் நிழல் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்து வரும் பாட்டாளி மக்கள் கட்சி, அதன் 22–ஆவது நிழல் நிதிநிலை அறிக்கையை (Shadow Budget) பொதுமக்களின் மேலான பார்வைக்கு அளிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறது. இந்தப் பணியை தமிழக மக்களுக்கு தான் ஆற்றக்கூடிய மகத்தான சமூக, பொருளாதார, அரசியல் கடமையாக ‘‘பாட்டாளி மக்கள் கட்சி’’ கருதுகிறது.

2. இந்த மாநில மக்கள் மீதும், சமூக நீதியோடு கூடிய வளர்ச்சியின் மீதும், ஏழை, எளிய, நடுத்தர அனைத்துத் தரப்பு மக்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியின் மீதும் உண்மையான, உள்ளார்ந்த, உணர்வுப்பூர்வ அக்கறைக் கொண்டுள்ள எங்கள் நிறுவனத் தலைவர் **மருத்துவர் அய்யா** அவர்களின் சிந்தனைகள், விவேகம், வழிகாட்டுதல் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த நிழல் நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. தமிழகம் வளர்கிறது..... ஆனால் தமிழர்கள், குறிப்பாக ஏழை, எளிய மக்கள் வளரவில்லை என்ற ஒரு சமூக நீதியற்ற நிலை இன்றும் தொடர்கிறது.

3. தமிழ்நாட்டின் இன்றைய மக்கள்தொகை சுமார் 7.71 கோடி ஆகும். தமிழ்நாட்டை தனிநாடாக கருத்தில் கொண்டால், மக்கள்தொகை அடிப்படையில் உலக நாடுகள் வரிசையில் ஜெர்மனிக்கு அடுத்து 20ஆவது இடத்தில் இருக்கும். உலகின் பணக்கார நாடுகளாகக் கருதப்படும் இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, தென்கொரியா, கனடா, ஸ்பெயின் உள்ளிட்ட நாடுகள் தமிழகத்தைவிட குறைந்த மக்கள்தொகை கொண்டவையாகும். இந்த நாடுகளில் இயற்கை வளங்களும் பெரிதாக இல்லை. ஆனால், இந்த நாடுகளுடன் தமிழ்நாடு எந்த வகையிலும் போட்டிப்போட முடியாத அளவுக்கு அந்த நாடுகள் மிகப்பெரிய வளர்ச்சியை அடைந்துள்ளன. அந்த நாடுகளின் வளர்ச்சிக்கு மனிதவளமும், அரசு நிர்வாகமும்தான் காரணமாகும். தமிழ்நாட்டில் சிறப்பான மனித வளம் உள்ளது. தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் உலகம் முழுவதும் 150–க்கும் கூடுதலான நாடுகளில் மென்பொருள், மனித வளம், நிதி

மேலாண்மை, தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் மிகச் சிறந்த பதவிகளில் உள்ளனர்.

ஆனால், தமிழகத்தின் ஆகச்சிறந்த மனிதவளத்தைப் பயன்படுத்தி தமிழ்நாட்டை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்வதற்கான தொலைநோக்குப் பார்வை தமிழக ஆட்சியாளர்களிடம் இல்லை என்பது வருத்தம் அளிக்கும் உண்மையாகும். இந்த நிலையை மாற்றி தமிழ்நாட்டை முன்னேற்றுவதற்கான ஆக்கபூர்வமான திட்டங்களை ஆட்சியாளர்களுக்கு வழங்குவதை முதன்மைக் கடமையாக பா.ம.க. கருதுகிறது.

4. ஆட்சியாளர்களின் வல்லமைகளில் மிகவும் முக்கியமானவை செயத்தக்க செயல்களை ஆராய்தல், அவற்றை நிறைவேற்றி முடிப்பதற்கான உத்திகளை வகுத்தல், நாட்டின் நலன் சார்ந்த விசயங்களில் கருத்துக்களை துணிச்சலாகக் கூறுதல் ஆகியவைதான் என்று திருக்குறள் கூறுகிறது. திருக்குறள் கூறும் இந்த வல்லமைகளைக் கொண்டுள்ள பாட்டாளி மக்கள் கட்சி, தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் வழிநடத்திச் செல்வதற்கான திட்டங்களை வகுத்துக் கொடுப்பதற்காகவே கடந்த 21 ஆண்டுகளாக நிழல் நிதிநிலை அறிக்கைகளை தாக்கல் செய்து வருகிறது.

5. தமிழ்நாட்டை முன்னேற்றுவது எப்படி? தமிழகத்தை வளம் கொழிக்கும் மாநிலமாக மாற்றுவது எப்படி? என்ற வினாக்களுக்கு விடை அளிக்கும் வகையில், 2024–25ஆம் ஆண்டிற்கான நிழல்நிதிநிலை அறிக்கையை பாட்டாளி மக்கள் கட்சி தயாரித்து வெளியிடுகிறது. தமிழக மக்களும், தமிழகப் பொருளாதாரமும் ஒன்றாக வளரவேண்டும்; எல்லோரும் எல்லாமும் பெற்று மனமகிழ்ச்சியோடு வாழ வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. மக்களோடு வாழும் இக்கட்சி மக்கள் பிரச்சனைகளை நன்கு உணர்ந்து, ஆராய்ந்து அவைகளுக்கு இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் எந்தவிதமான நடவடிக்கைகளை எடுக்கலாம், எப்படி வருவாயைத் திரட்டலாம் என்பன உள்ளிட்ட யோசனைகளை இந்த நிழல் நிதிநிலை அறிக்கையில் பாட்டாளி மக்கள் கட்சி வழங்கியிருக்கிறது.

6. தமிழ்நாடு இன்றைய நிலையில் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால் பொருளாதார நெருக்கடி ஆகும். இதை எவரும் மறுக்க இயலாது. ஒருபுறம் மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட வேண்டிய வரி வருவாயின் பங்கை குறைத்திருக்கிறது. தமிழ்நாட்டின் வருவாய் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்காத நிலையில், அரசின் கடன் சுமையும், செலவுகளும் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அதிகரித்துள்ளன. இதேநிலை நீடித்தால், தமிழ்நாடு அரசு வெகு விரைவில் திவால் ஆகக்கூடும்.

2024 – 25 ஆம் ஆண்டில் பிப்ரவரி 10ஆம் தேதி வரை தமிழக அரசு சுமார் ரூ.1.20 லட்சம் கோடி கடன் வாங்கியுள்ளது. மார்ச் மாத இறுதிக்குள் ரூ.1.43 லட்சம் கோடி கடன் வாங்க தமிழக அரசு இலக்கு நிர்ணயித்திருக்கிறது. சென்னை மற்றும் புறநகர் மாவட்டங்களையும், தென் மாவட்டங்களையும் மழை வெள்ளம் கடுமையாக பாதித்ததால், நடப்பு நிதியாண்டின் கடைசி 3 மாதங்களில் அரசுக்கான வருவாய் போதிய அளவில் கிடைக்காது என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதே நேரத்தில், தமிழக அரசின் செலவுகள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டதைவிட, அதிக அளவில் அதிகரித்து வருவது கவலையளிக்கிறது.

7. தமிழக அரசின் வருவாயும் குறைந்து, செலவுகளும் அதிகரித்துள்ள நிலையில், தமிழக அரசின் கடன் சுமை நடப்பாண்டில் கணிசமாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2023–24ஆம் ஆண்டில் தமிழக அரசின் நிதிப் பற்றாக்குறை ரூ.92,063.72 கோடியாக இருக்கும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால், செலவுகள் அதிகரிப்பு காரணமாக, நிதிப் பற்றாக்குறை ரூ.1 லட்சம் கோடியை நெருங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

8. இத்தகைய சூழலில், தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுத்து முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வது, தமிழ்நாட்டு மக்களுக்கு குறைந்தபட்ச வாழ்வாதார உதவிகளை வழங்குதல், தமிழகத்தின் கடன் சுமையை படிப்படியாக குறைத்தல் போன்றவற்றுக்கு இந்த நிழல் நிதிநிலை அறிக்கையில் கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

9. மக்களின் வாழ்வுரிமையைப் பெற்றுத் தந்து முன்னேற்றத்திற்கு அழைத்துச் செல்லும் ஒரு வரவு – செலவுத் திட்டம் எவ்வாறு அமைய வேண்டும் என்ற விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த இந்த நிதிநிலை அறிக்கை உதவி புரியும். அரசின் வரவு–செலவுத் திட்டம் தமிழகத்தின் எல்லாத் தரப்பினரையும், பல்வேறு அமைப்புகளையும், கலந்தாலோசித்து அந்த கருத்துக்களையும் உள்ளடக்கி தயாரிக்கும் ஓர் அணுகுமுறை காலப்போக்கில் உருவாக்கிட உதவும்; விழிப்புணர்வையும் உண்டாக்கும்.

10. இந்த அறிக்கையின் மீது தமிழகம் தழுவிய அளவில் ஒரு ஆரோக்கியமான விவாதம் நடத்தி, அதன் அடிப்படையில் தமிழக அரசு தனது திட்டங்களையும் முன்னுரிமைகளையும் மாற்றியமைத்து “கனவுகளை நனவுகளாக” மாற்றி மக்களின் வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி எதிர்பார்க்கிறது. அதே பின்னணியில் தான் இந்த நிதியாண்டிற்கான (2024–2025) இந்த நிழல் நிதிநிலை அறிக்கையை “பாட்டாளி மக்கள் கட்சி” தமிழகத்தின் அனைத்து மக்கள் அடங்கிய மாமன்றத்தில் சமர்ப்பிக்கிறது.

11. ஒரு நிதிநிலை அறிக்கை என்பது, வரும் நிதியாண்டில் அரசு தான் எதிர்பார்க்கும் மொத்த வருவாய், மொத்த செலவு, நிகர உபரி, மொத்த பற்றாக்குறை ஆகியவற்றைப் பற்றி குறிப்பிடும் ஓர் அறிக்கையாகும். அதே நேரத்தில் இந்த ஆண்டில் மாநிலத்தில் நிலவும் கடுமையான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளையும் எதிர்காலத்தில் திட்ட வளர்ச்சியை துரிதப்படுத்த தேவைப்படும் திட்டங்களையும் செயல்பாடுகளையும் ஒரு நிதிநிலை அறிக்கை உள்ளடக்கியிருக்க வேண்டும். குறிப்பாக பழங்குடியின, தாழ்த்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மை யினரின் பொருளாதார வளர்ச்சியையும், சமூக நீதியையும் அளிக்கும் எண்ணத்தோடு கூடிய திட்டங்கள் இடம்பெற வேண்டும். அத்திட்டங்கள், தெளிவானதாகவும், பிரச்சனைகளை நேரடியாக தீர்ப்பதாகவும், குறிப்பானதாகவும், இலக்கோடு கூடியதாகவும், தொலைநோக்குப் பார்வை கொண்டதாகவும் இருக்க வேண்டும். நிதிநிலை அறிக்கை என்பது, இலக்கு நிர்ணயிக்கப்படாத, வழிவகை சொல்லப்படாத நிதி ஒதுக்கீட்டால், அரசின் கனவுகளையும், விருப்பங்களையும், எதிர்பார்ப்புகளையும், நம்பிக்கைகளையும் மட்டும் உள்ளடக்கிய ஒரு அரசியல் கட்சியின் வாக்குறுதி அறிக்கையாக அமைந்துவிடக்கூடாது.

## 2. நிதிநிலை அறிக்கை குறித்த விளக்கம்

12. நிதிநிலை அறிக்கையை நிதி குறித்த தகவல்களுக்கு அப்பாற்பட்டு ஓர் ஆழ்ந்த தாக்கத்தை உருவாக்கக்கூடிய ஒரு கருவியாகக் கருத வேண்டும். சமூக நீதியோடு கூடிய பொருளாதார வளர்ச்சியை அடைய வேண்டும் என்ற நோக்குடைய ஒரு பொதுநல அரசின் நிதிநிலை அறிக்கை, சாதாரண மனிதனின் நலனை மேம்படுத்தவும், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கவும் அரசு எந்தவிதமான நடவடிக்கைகளை எடுக்க இருக்கின்றது என்பதனை பிரதிபலிக்க வேண்டும்.

13. இதற்கு அடிப்படையாக அமைவது மக்களின் பிரச்சனைகளைப் பற்றியும், பொருளாதாரத்தின் சிக்கல்களைப் பற்றியும் அறிந்துகொள்வதாகும். அரசாங்கத்தின் திட்டங்களையும், வரவு – செலவு நிதிநிலை அறிக்கையை தயார் செய்பவர்கள் மக்களின் தேவைகளையும், உணர்வுகளையும் நன்கு புரிந்து இருப்பார்களா? என்பது சந்தேகத்திற்கு உரியதே. அதனால்தான் பல ஆண்டுகளில் முன்வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் மக்களை சார்ந்தவையாக அமையவில்லை. மக்களைச் சாராத திட்டங்களும், நிதிநிலை அறிக்கைகள் மக்களின் வாழ்க்கையிலும், பொருளாதாரத்திலும் பெரிய தாக்கத்தை அல்லது முன்னேற்றத்தை ஏற்படுத்தவில்லை. இதைக் கடந்த கால அனுபவங்கள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. உண்மையில், மக்களின் தேவைகளுக்கும், அரசாங்கத்தின் திட்டங்களுக்கும் நிறைய இடைவெளி ஏற்பட்டு மக்கள் பலன் பெற முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. இந்த இடைவெளியைக் குறைப்பது ஓர் ஆரோக்கியமான சூழ்நிலையைச் சமுதாயத்தில் ஏற்படுத்தும்.

## 3. அரசியல் கட்சிகளும் நிதிநிலை அறிக்கையும்

14. இச்சூழ்நிலையை உருவாக்க வேண்டியது ஓர் அரசியல் கட்சியின் தலையாயக் கடமை. பாட்டாளி மக்கள் கட்சி வேலையின்மையிலும், ஏழ்மையிலும், அறியாமையிலும் வாடும் மக்களுக்காக பாடுபடும் துடிப்புமிக்க ஓர் அரசியல் இயக்கம். இதன் நிறுவனத்தலைவர் மருத்துவர் அய்யா அவர்கள் மக்களுடன் நெருக்கமாகப் பழகுபவர். மக்களுக்காக வாழ்பவர். மக்களின் வளர்ச்சியில்தான் மாநிலத்தின் வளர்ச்சி இருக்கிறது என்று நம்புபவர். எனவே, மக்களின் தேவைகளையும், பிரச்சனைகளையும் அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று அவற்றிற்கு தீர்வுகாண வேண்டும் என்பதில் நாட்டம் கொண்டவர். இதனைச் செய்வதற்கு இந்த நிழல் நிதிநிலை அறிக்கை ஒரு சிறந்த கருவியாக இருக்கும் என நம்புகிறோம்.

## 4. நிதிநிலை அறிக்கையில் பா.ம.க.வின் பங்கு

15. கடந்த 21 ஆண்டுகளாக தமிழக அரசு அதன் நிதிநிலை அறிக்கையை சட்டமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு முன்பாக, பாட்டாளி மக்கள் கட்சி தனது நிழல் நிதிநிலை அறிக்கையை மக்கள் மாமன்றத்தில் முன்மொழிவதை வழக்கமாகக் கொண்டுள்ளது.

16. வளர்ந்த மேற்கத்திய நாடுகளில்தான் அரசியல் கட்சிகள் அரசுக்கு நிழல் நிதிநிலை அறிக்கை அளிப்பதை வழக்கமாக கொண்டுள்ளன. இந்தியாவில் இதுவரை எந்த அரசியல் கட்சியும் இம்மாதிரியான நிழல் நிதிநிலை அறிக்கையை தயாரிக்காத நிலையில், பாட்டாளி மக்கள் கட்சி மட்டுமே மக்களுக்கான இந்த ஆரோக்கிய கடமையை தவறாமல் செய்து வருகிறது.

17. பாட்டாளி மக்கள் கட்சியின் நிழல் நிதிநிலை அறிக்கையின் நோக்கம் மக்களின் பிரச்சனைகளை விவாதிப்பதற்கு ஓர் அரங்கத்தை உருவாக்குவதும், அவர்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதும்தான். தமிழகத்தில் மக்களாட்சி தழைத்தோங்க, அரசின் செயல்பாடுகளை அறிந்தவர்களாக மக்கள் மாறவேண்டும். அரசின் நடவடிக்கைகளை மக்கள் தொடர்ந்து கண்காணித்து அதில் பங்கேற்பதுதான் உண்மையான மக்களாட்சி ஆகும். அரசின் நிதிநிலை அறிக்கை குறித்து மக்கள் அறிவதும் விவாதிப்பதும் கருத்தினை தெரிவிப்பதும் அவசியமாகும். மக்களது கருத்துகளை அறிந்து அவற்றை அரசுக்கு தெரிவிக்க வேண்டியது பாட்டாளி மக்கள் கட்சியின் கடமை என்று கருதுகிறோம். அந்தப் பிரச்சனைகளை அரசின் கவனத்திற்கு எடுத்துச் செல்வதும், இந்த அணுகுமுறையின் மூலம் மாநில அரசு ஒரு சிறந்த நிதிநிலை அறிக்கையை உருவாக்க வழிவகுப்பதும், அதன் பலன்கள் மக்களை சென்றடைவதும், அவர்கள் மகிழ்வோடு வாழ்வதும்தான் எங்களது விருப்பம். மக்களை முன்னேற்றுவதற்கான ஓர் அறிவியல் முயற்சிதான் இந்த நிழல் நிதி நிலை அறிக்கை.

## 5. செயலாக்கப்பட்ட திட்ட விவர அறிக்கை (Action Taken Report) மற்றும் பொருளாதார ஆய்வறிக்கை (Economic Survey)

18. ஒவ்வொரு ஆண்டின் நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிக்கும்போதும் சென்ற ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் எந்த அளவுக்குச் செயல்படுத்தப் பட்டிருக்கின்றன என்பதை ஆராய வேண்டியது அவசியம். அதுகுறித்த விவரங்கள் அடங்கிய நடவடிக்கை அறிக்கையை மத்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் பாராளுமன்றத்தில் முன்வைப்பதைப் போல தமிழக அரசும் தனது செயலாக்க திட்ட விவர அறிக்கையை **(Action Taken Report)** சட்டமன்றத்தில் தாக்கல் செய்யும்.

19. நிதிநிலை அறிக்கை தயாரிக்கும் முன் தற்போது நிலவும் பொருளியல் சூழ்நிலை என்ன? பொருளாதாரத்தின் பின்னணி என்ன? பொருளாதாரத்தை எதிர்நோக்கியுள்ள சவால்கள் என்ன? என்பதைப் பற்றிய புரிதல் தேவை. சூழ்நிலையை உணரும்போதுதான் நல்ல திட்டங்களை நிதிநிலை அறிக்கையில் சேர்க்க முடியும். அதேநேரத்தில், நிதிநிலை அறிக்கையை சரியான கோணத்தில் மதிப்பிடவும் முடியும். எனவே, நிதிநிலை அறிக்கையை தயார் செய்து சமர்ப்பிப்பதற்கு முன்பாக தற்போதைய பொருளாதார நிலை குறித்த ஆய்வறிக்கையை அரசு வெளியிடும். மத்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் நிதிநிலை அறிக்கை சமர்ப்பிப்பதற்கு முன்பாக பொருளாதார ஆய்வறிக்கையை நாடாளுமன்றத்தில் முன்வைக்கிறது. ஆனால் தமிழக அரசு அம்மாதிரியான பொருளாதார அறிக்கையை இதுவரை சமர்ப்பிக்கவில்லை. நிதிச்சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக இந்தப் பொருளாதார ஆய்வறிக்கையை ஒவ்வொரு ஆண்டும் நிதிநிலை அறிக்கைக்கு முன்பாக, தமிழக அரசு சமர்ப்பிப்பது ஓர் ஆரோக்கிய சூழ்நிலையை உருவாக்கும்.

## 6. கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை திட்டங்களின் விளைவுகளும் தாக்கங்களும் (Outcome Budget)

20. நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்படும் திட்டங்களும் அதற்காக ஆகும் செலவும் பல தாக்கங்களை உருவாக்கும் என்று எதிர்பார்க்கிறோம். அரசு, செலவு செய்யும்

ஒவ்வொரு ரூபாயும் பொறுப்பாக செலவிடப்பட்டால் தான் ஓர் ஆரோக்கியமான பயனை நாம் எதிர்பார்க்க முடியும். உதாரணமாக கல்வித்துறைக்காக ரூபாய் 100 கோடி செலவு செய்தால் அதன் விளைவாக பள்ளிக்கூடங்கள் கட்டப்படலாம். புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்படலாம், பள்ளிக் கூடத்திற்கு தேவையான உபகரணங்கள் வாங்கலாம். இதன் விளைவாக கல்வியின் தரம் உயரக்கூடும். மாணவர்களின் பள்ளி வருகை சதவீதம் அதிகரிக்கக்கூடும். கல்வித்துறைக்கான செலவு இந்த விளைவுகளை ஏற்படுத்தும். இதுபோல் ஒவ்வொரு துறையிலும் மேற்கொள்ளப்படும் செலவும் அத்துறையில் பல தாக்கங்களை உருவாக்கும். அந்தத் தாக்கங்களை வரிசைப்படுத்தும் அறிக்கைக்கு விளைவு அறிக்கை அல்லது தாக்க அறிக்கை (Outcome Budget) என்று சொல்லப்படுகிறது. இந்த அறிக்கையை ஒவ்வொரு நிதிநிலை அறிக்கையோடும் அரசாங்கம் ஒப்பிட்டால் அரசின் செலவுத்திட்டங்கள் எவ்வாறு அமைந்திருக்கின்றன என்பதை மதிப்பிடலாம். இம்முறையை அரசு பின்பற்றினால் தமிழகத்தில் ஆரோக்கியமான நிலையை உருவாக்க முடியும்.

## 7. வேளாண்மைக்கு அமைச்சரவைக் குழு (Cabinet Committee on Agriculture)

21. தமிழ்நாட்டில் பெரும்பான்மையானவர்களுக்கு வேலை வழங்கும் துறையாக விளங்குவது வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த தொழில்களை உள்ளடக்கிய முதன்மைத் துறைதான். தமிழ்நாட்டில் தற்போதைய நிலவரப்படி 60% பேர் தங்களின் வாழ்வாதாரத்திற்காக விவசாயத்தையும், அதை சார்ந்த தொழில்களையும் நம்பியிருக்கின்றனர். ஆனால் மாநிலத்தின் ஒட்டுமொத்த உற்பத்திக்கு வேளாண் துறையின் பங்களிப்பு 10 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளது. வேளாண்துறை வளராமல் ஒரு மாநிலத்தின் பொருளாதாரம் வளர முடியாது. வேளாண் துறையில் அதிக வளர்ச்சியை ஈட்ட வேண்டுமெனில், அத்துறை மீது அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். இதைக் கருத்தில் கொண்டு வேளாண் துறைக்காக தனி நிதிநிலை அறிக்கையை 2008 – 2009 ஆம் ஆண்டு முதல் கடந்த 17 ஆண்டுகளாக பாட்டாளி மக்கள் கட்சி தயாரித்து வெளியிட்டு வருகிறது. பாட்டாளி மக்கள் கட்சியின் வலியுறுத்தலை ஏற்று, தமிழ்நாடு அரசு 2021–22 ஆம் ஆண்டு முதல் வேளாண்மைக்கு தனி நிதிநிலை அறிக்கை வெளியிட்டு வருகிறது.

வேளாண்மைக்கு தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்வதால் மட்டும், உழவர்களின் நிலை உயர்ந்துவிடாது. வேளாண்மை சார்ந்த திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். அதுமட்டுமின்றி, வேளாண்மை சார்ந்த திட்டங்களை விரைந்து செயல்படுத்தப்படுவதை உறுதி செய்யவேண்டும். இதற்காக, முதலமைச்சர் தலைமையில் வேளாண்மை தொடர்பான துறைகளின் 7 அமைச்சர்களைக் கொண்டு தனி அமைச்சரவைக் குழுவை தமிழக அரசு அமைக்கும்.

## 8. நிதிநிலை அறிக்கை தயாரிப்புக்கு முன் கலந்தாய்வு

22. எந்த ஒரு வளர்ச்சிப் பணிகளுக்கான திட்டமிடுதல் என்பது கலந்தாய்வு அடிப்படையில் அமைய வேண்டும். இனி நிதிநிலை அறிக்கை தயாரிப்புக்கு முன் அனைத்து துறைகளின் உயர் அதிகாரிகள், தொழில் அதிபர்கள், கல்வியாளர்கள், தொண்டு நிறுவனங்கள், வணிகர் சங்கங்கள், மகளிர் அமைப்புகள், விவசாய சங்கங்கள், நெசவாளர் – மீனவர் சங்கங்கள்,

நுகர்வோர் அமைப்புகள், சமூக ஆர்வலர்கள், தொழிற்சங்கங்கள், அரசு ஊழியர்–ஆசிரியர் சங்கங்கள் போன்ற அமைப்புகளோடு அரசு கலந்தாய்வு செய்ய வேண்டும்.

## 9. கிராமசபையில் தொடங்கும் திட்டமிடல்

23. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை திட்டமிடல் என்பது மாவட்ட அளவில் உருவாக்கம் பெறுகிறது. மாவட்ட அளவில் திட்டமிடும்போது, தொலைதூர பகுதிகளில் உள்ள கிராமங்களின் தேவைகள் கணக்கில் கொள்ளப்படாமல் இருப்பதற்கு வாய்ப்பு உள்ளது. ஒவ்வொரு கிராமமும் தன்னிறைவு பெற்றால்தான், இந்தியா முழுமையான வளர்ச்சியை எட்டமுடியும். அப்போதுதான், வளர்ச்சியின் பயன்கள் அனைவருக்கும் சென்றடையும். இதைக் கருத்தில் கொண்டு, நிதிநிலை அறிக்கைக்கான திட்டமிடல் ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி, மாவட்ட ஊராட்சி, மாநகராட்சி ஆகிய நிலைகளில் மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 2 ஆம் தேதி மகாத்மா காந்தியடிகள் பிறந்த நாள் அன்று நடைபெறும் கிராமசபைக் கூட்டங்கள் அந்த கிராமத்தின் தேவைகளை அறிந்து நிதிநிலை அறிக்கையில் சேர்ப்பதற்காக பயன்படுத்திக் கொள்ளப்படும். நகர்ப்புறங்களில் உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் தேவைகள் கணக்கெடுக்கப்படும். இந்த அமைப்புகளின் தேவைகளை கருத்தில் கொண்டு நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்படும். இதன் மூலம் கிராமசபைகள் மூலம் திட்டமிடலைத் தொடங்கும் முதல் மாநிலம் என்ற பெருமையை தமிழகம் பெறும்.

## 10. பாலின நிதிநிலை அறிக்கை (Gender Budgeting)

24. அனைத்துத் துறைகளிலும் ஆண்களுக்கு இணையாக பெண்களும் வளர்ச்சி பெற வேண்டும். நாட்டின் வளர்ச்சிக்கு பெண்களின் பங்களிப்பு மிகப்பெரியது. ஆனால், கிராமப்புறங்களில் உள்ள பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட பெண்கள் வளர்ச்சியின் எந்தப் பயனையும் அடையாமல் உள்ளனர். ஒவ்வொரு திட்டத்திலும் ஒதுக்கப்படும் நிதி, ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவாக அமைவதால், பெண்களுக்கென சிறப்புத் திட்டங்களை செயல்படுத்த முடிவதில்லை. தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பழங்குடியினரின் முன்னேற்றத்திற்காக மத்திய நிதிநிலை அறிக்கையில் சிறப்புத் திட்ட நிதி ஒதுக்கப்படுகிறது. ஒவ்வொரு துறைக்கான ஒதுக்கீட்டிலும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினரின் மக்கள் தொகைக்கு ஏற்ப சிறப்புத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கப்படுகிறது.

அதேபோல், பெண்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு பாலின நிதிநிலை அறிக்கை தனியாக தாக்கல் செய்யப்பட வேண்டும் என்பதுதான் பாட்டாளி மக்கள் கட்சியின் நிலைப்பாடு ஆகும். இந்தியாவில் 17 மாநிலங்களில் பாலின அடிப்படையிலான நிதிநிலை அறிக்கைகள் தாக்கல் செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டில் 2018–19ஆம் ஆண்டில் இருந்து இத்தகைய நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு வருகிறது. ஆனால், இவை வழக்கமான நிதிநிலை அறிக்கை திட்டங்களில் இருந்து மாறுபட்டவை அல்ல.

**தனித்துவமான பாலின நிதிநிலை அறிக்கை**

25. தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களில் பெயரளவுக்கு தாக்கல் செய்யப்பட்டு வரும் பாலின நிதிநிலை அறிக்கைகள் பெண்கள் மற்றும் குழந்தைகளின் நலனுக்கு எந்த வகையிலும் பயனளிக்காது. மாறாக, பாலின நிதிநிலை அறிக்கை என்ற கருத்தாக்கத்தை முழுமையாக

பிரதிபலிக்கும் வகையில் பாலின நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி விரும்புகிறது. ஆந்திர மாநிலத்தில் 2021–22ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து பாலின நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு வருகிறது.

26. அதேபோல், தமிழ்நாட்டிலும் மகளிருக்கான திட்டங்களை மட்டும் உள்ளடக்கிய தனித்துவமான பாலின நிதிநிலை அறிக்கையை நடப்பாண்டில் தாக்கல் செய்யப்படும். நடப்பாண்டுக்கான தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை மதிப்பில் 20%, அதாவது சுமார் ரூ.55,000 கோடி மதிப்புள்ளதாக தனித்துவ பாலின நிதிநிலை அறிக்கை அமையும்.

## 11. நிதிநிலை அறிக்கையில் முன்னுரிமை

27. தமிழகத்தின் இன்றைய சூழலையும் எதிர்கால வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு 2024–25ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் கீழ்க்கண்ட 10 அம்சங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் வருமாறு:

1. தமிழ்நாட்டில் சமூக நீதியை நிலைநிறுத்த சாதிவாரி கணக்கெடுப்பு நடத்துதல்
2. இளைஞர்களின் முன்னேற்றத்திற்கான கல்வி, வேலைவாய்ப்பு நடவடிக்கைகள்
3. அரசுத் துறைகள் மூலம் 2 லட்சம் பேருக்கு அரசு வேலை வழங்குதல்
4. தனியார் நிறுவன வேலைவாய்ப்புகளில் தமிழர்களுக்கு 80% இடஒதுக்கீடு
5. தமிழ்நாட்டை போதை இல்லா மாநிலமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள்
6. தமிழக அரசின் வருவாய்க்கான புதிய ஆதாரங்களைக் கண்டறிதல்
7. கல்வி மற்றும் மருத்துவத்திற்கான நிதி ஒதுக்கீட்டை பெருமளவில் உயர்த்துதல்
8. வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களுக்கு மாதம் ரூ.2,000 நிதியுதவி
9. ரூ.1 லட்சம் கோடியில் நீர்ப்பாசனத் திட்டங்களை 5 ஆண்டுகளில் செயல்படுத்துதல்
10. தமிழ்நாட்டை அனைத்திலும் சிறந்த மாநிலமாக முன்னேற்றுதல்

மேற்கண்ட 10 அம்சங்களை அடிப்படையாகக் கொண்டே 2024–25ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது.

# தமிழ்நாட்டின் பொருளாதார நிலை

## 12. மிகப்பெரிய சரிவை நோக்கி தமிழக பொருளாதாரம்

28. உலக அளவில் பல நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக, தமிழ்நாட்டின் ஏற்றுமதி குறையும் என்பதால், 2023–24ஆம் ஆண்டில் தமிழகத்தின் பொருளாதாரம் ஓரளவு பாதிப்பைச் சந்திக்கும் என்று கருதப்பட்டது. எதிர்பார்க்கப்பட்டதைப் போலவே 2023–24ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு பெருமளவில் குறைந்தது. அத்துடன் வடமாவட்டங்களையும், தென் மாவட்டங்களையும் ஒரே நேரத்தில் தாக்கிய மழை – வெள்ளம் காரணமாக, தமிழகப் பொருளாதாரம் மேலும் பின்னடைவைச் சந்தித்துள்ளது.

29. தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பு 2023–24ஆம் ஆண்டின் நிறைவில் ரூ.28.32 லட்சம் கோடியாக அதிகரிக்கும் என்று அந்த ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் நிதிநிலை

அறிக்கையில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால், அந்த இலக்கை எட்டுவதற்கான வாய்ப்புகள் இல்லை. அதனால், தமிழ்நாட்டின் வருவாய் மற்றும் நிதிப்பற்றாக்குறை அதிகரிக்கும்.

30. **2023–24ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் பொருளாதாரம் பின்னடைவைச் சந்தித்திருப்பது பல்வேறு வழிகளில் பாதிப்புகளை ஏற்படுத்தும். நிதி சார்ந்த எந்த இலக்குகளையும் எட்டமுடியாத நிலைக்கு தமிழகம் தள்ளப்படும் என்பது கவலையளிக்கிறது.**

31. **2023–24ஆம் ஆண்டில் தமிழக அரசின் சொந்த வரி வருவாய் ரூ.1,81,182.22 கோடியாக இருக்கும் என்று அரசின் நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், நவம்பர் மாத இறுதிவரை தமிழ்நாடு அரசின் சொந்த வரி வருவாயாக ரூ.97,282.54 கோடி மட்டுமே ஈட்டப்பட்டிருக்கிறது. இது ஆண்டு முழுமைக்குமான மொத்த இலக்கில் 53.74% மட்டும் தான். நவம்பர் மாதம் வரையிலான 8 மாதங்களில் ஒட்டுமொத்த இலக்கில் 66.66% வருவாய் எட்டப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இலக்கைவிட 13% வருவாய் குறைந்துள்ளது.**

32. **அதேபோல் 2023–24ஆம் ஆண்டில் தமிழக அரசின் மொத்த வரி வருவாய் ரூ.2,22,848 கோடியாக இருக்கும் என்று நிதிநிலை அறிக்கையில் கணிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கணிப்பின்படி பார்த்தால், நவம்பர் மாதம் வரையிலான 8 மாதங்களில் தமிழக அரசுக்கு மொத்த வரி வருவாயாக, ரூ.1,47,985 கோடி கிடைத்திருக்க வேண்டும். ஆனால், ரூ.1,27,139 கோடி மட்டுமே கிடைத்திருக்கிறது. இதேநிலை தொடர்ந்தால், தமிழக அரசின் மொத்த வரி வருவாய் ரூ.1.90 லட்சம் கோடியாகவே இருக்கும். இது கணிக்கப்பட்ட வருவாயைவிட ரூ.32,000 கோடி அதாவது 14.41% குறைவு ஆகும். இது அரசால் தாங்கிக் கொள்ள முடியாத வரி வருவாய் சரிவு என்பது குறிப்பிடத்தக்கது.**

33. தமிழக அரசின் பொருளாதார பின்னடைவு இத்துடன் நின்றுவிடவில்லை, சென்னை மற்றும் புறநகர் மாவட்டங்களில் டிசம்பர் மாதத்தின் தொடக்கத்திலும், நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி உள்ளிட்ட மாவட்டங்களில் டிசம்பர் மாத இறுதியிலும் பெய்த மழை மற்றும் அதன் காரணமாக ஏற்பட்ட வெள்ளம் காரணமாக, அப்பகுதிகளில் உள்ள அனைத்துத் துறையினரும் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக, தொழில் மற்றும் வணிகத் துறையினருக்கு ஏற்பட்ட இழப்பின் மதிப்பு லட்சக்கணக்கான கோடிகள் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தங்களுக்கு ஏற்பட்ட இழப்பில் இருந்து மீண்டும் அவர்கள் வரி செலுத்த இன்னும் பல மாதங்கள் ஆகும் என்பதால், 2023–24ஆம் ஆண்டில் கடைசி 4 மாதத்தில் தமிழக அரசின் வரி வருவாய் குறிப்பிடத்தக்க அளவில் உயர வாய்ப்பில்லை.

34. 2023–24ஆம் ஆண்டில் தமிழக அரசின் மொத்த வருவாய் ரூ.2,70,059.23 கோடியாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டிருந்தது. மாநில அரசின் சொந்த வரி வருவாய் குறைந்தாலும் கூட, மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கு, மத்திய அரசின் மானிய உதவி ஆகியவை அதிகரிக்கக் கூடும் என்பதால், தமிழ்நாடு அரசின் மொத்த வரி வருவாய் பெரிய அளவில் இழப்பை சந்திக்காது. ஆனாலும் கூட, மாநில சொந்த வரி வருவாய், மொத்த வரி வருவாய் ஆகியவற்றில் ஏற்பட்ட இழப்பு காரணமாக, மாநிலத்தின் மொத்த வருவாய் இலக்கை எட்ட முடியாது என்று பொருளாதார வல்லுநர்கள் கணித்துள்ளனர். தமிழ்நாட்டின் பொருளாதாரம் சரிவுப் பாதையில் செல்வதையே இந்த புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

## 13. வருவாய் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை அதிகரிக்கும்

35. 2023–24ஆம் ஆண்டில் தமிழக அரசின் நிதி நிலை இருமுனைத் தாக்குதலை எதிர்கொண்டது. ஒருபுறம் தமிழக அரசின் வருவாய் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்தது. அதேநேரத்தில், மகளிர் உரிமைத் தொகைக்கான நிதி ஒதுக்கீடு, வெள்ள நிவாரண நிதி, வெள்ள பாதிப்பு சீரமைப்புப் பணிகள் ஆகியவற்றுக்கு தமிழ்நாடு அரசு குறிப்பிடத்தக்க அளவில் செலவிட வேண்டியிருந்ததால், அரசின் செலவும் பெருமளவில் உயர்ந்திருக்கிறது. அதனால், அரசின் வருவாய் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை ஆகியவை அதிகரிக்கும்.

36. 2023–24ஆம் ஆண்டில் தமிழக அரசின் வருவாய்ப் பற்றாக்குறை ரூ.37,540.45 கோடியாக இருக்கும் என்று கணிக்கப்பட்டிருந்தது. ஆனால், நவம்பர் மாத இறுதியில் தமிழக அரசின் நிதிப் பற்றாக்குறை ரூ.24,028.74 கோடியை தாண்டிவிட்டது. டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் தான் வெள்ள நிவாரணம், பொங்கல் பரிசுத் தொகை போன்றவற்றுக்காக தமிழக அரசு அதிகளவில் செலவு செய்ய வேண்டியுள்ளதால், அந்த மாதங்களில் வருவாய்ப் பற்றாக்குறை மேலும் அதிகரிக்க வாய்ப்பு இருக்கிறது. அதனால் 2023–24ஆம் ஆண்டில் தமிழக அரசின் வருவாய்ப் பற்றாக்குறை நிர்ணயிக்கப்பட்ட இலக்கைவிட, 10% முதல் 15% அதிகரிக்க வாய்ப்பு இருக்கிறது.

37. 2023–24ஆம் ஆண்டில் அரசின் நிதிப் பற்றாக்குறை ரூ.92,063.72 கோடியாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டிருந்தது. இயற்கை சீற்றம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் தமிழக அரசால் திட்டமிடப்பட்டிருந்த மூலதன செலவுகளை மேற்கொள்ள இயலவில்லை. அதனால் நிதிப் பற்றாக்குறையை நிர்ணயிக்கப்பட்ட இலக்குக்குள் கட்டுப்படுத்திவிட முடியும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அரசின் வருவாய் குறைந்ததால், நிதிப் பற்றாக்குறையும் அதிகரிக்கும் என்று தெரிகிறது. எனினும், நிதிப் பற்றாக்குறை அதிகரிப்பு மிகப் பெரிய அளவில் இல்லாமல், சுமார் ரூ.1 லட்சம் கோடி என்ற அளவுக்குள் இருக்கும் எனத் தெரிகிறது.

## 14. கடன் அதிகரிக்கும்

38. கடந்த காலங்களில் வாங்கப்பட்ட கடனை அடைக்க வேண்டிய தேவை 2023–24ஆம் ஆண்டில் ஏற்பட்டது. நிதிநிலையில் அறிவிக்கப்பட்டவாறு 2023–24ஆம் ஆண்டில் ரூ.51,331.79 கோடி கடன் திரும்ப செலுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், அது தமிழக அரசின் அதிகரிக்கப்பட்ட வருவாயில் இருந்து செலுத்தப்படவில்லை என்பதும், கூடுதலாக கடன் வாங்கிதான் அந்தக் கடன் செலுத்தப்பட்டிருக்கிறது என்பது கவலையளிக்கும் அம்சம் ஆகும்.

39. அரசின் செலவுகளை சமாளிப்பதற்கு மட்டுமின்றி, கடனை அடைக்கவும் வட்டி கட்டவும் கடன் வாங்க வேண்டியிருப்பதால், 2023–24ஆம் ஆண்டில் தமிழக அரசு ரூ.1,43,197.93 கோடி கடன் வாங்க இலக்கு நிர்ணயித்திருந்தது. மார்ச் மாத இறுதிக்குள் இந்த கடன் இலக்கு விஞ்சப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

40. 2024ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் தேதிப்படி, தமிழக அரசின் கடன் ரூ.7,26,028.83 கோடியாக இருக்கும் என்று நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், வரும் மார்ச் இறுதியில் தமிழக அரசின் நேரடிக்கடன் ரூ.8,34,543.50 கோடியாக அதிகரிக்கும் என்று இந்திய ரிசர்வ் வங்கியின் மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. இதில் ரூ.6,00,992.90 கோடி கடன் மாநில வளர்ச்சிக் கடன் என்ற பெயரில், பத்திரங்கள் வெளியிட்டு பெறப்படுபவை. மீதமுள்ள சுமார் 2.34 லட்சம் கோடி கடன், பிற ஆதாரங்களில் இருந்து பெறப்பட்டவை ஆகும்.

## 15. 2024–25ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் பொருளாதாரநிலை வளர்ச்சியடையும்

41. தமிழ்நாட்டின் பொருளாதாரத்தைப் பொறுத்தவரை, 2023–24ஆம் ஆண்டு ஓர் மோசமான ஆண்டு என்றால் அது மிகையல்ல. தமிழகத்தின் பொருளாதார நிலை மோசமடைந்ததற்கு அரசு நிர்வாகத்தை கடந்து, தமிழ்நாட்டின் குறுவை, சம்பா பயிர்கள் பாதிக்கப்பட்டது, மழை வெள்ளத்தால் தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள் கடுமையான இழப்பைச் சந்தித்தது, உலக அளவிலான பொருளாதாரக் காரணிகள் ஆகியவை முக்கிய காரணங்களாக இருந்தன.

42. **உலக அளவில் பல நாடுகளில் பொருளாதாரம் மீட்சி அடைவதற்கான வாய்ப்புகள் தென்படுகின்றன. அதன்படி, உலகப் பொருளாதாரம் மீட்சியடைந்தால், தமிழ்நாட்டின் ஏற்றுமதியும் அதிகரித்து தமிழகம் வளர்ச்சிப் பாதையில் நடைபோடும் என்பது குறிப்பிடத்தக்கது.**

43. **மேட்டூர் அணை உள்ளிட்ட தமிழ்நாட்டின் பெரும்பாலான அணைகளில் நீர்மட்டம் குறைவாகவே உள்ளது. 2021ஆம் ஆண்டில் தொடங்கி, தொடர்ந்து 3 ஆண்டுகளாக மேட்டூர் அணையிலிருந்து குறுவை பாசனத்திற்காக ஜூன் 12ஆம் தேதி அல்லது அதற்கு முன்பாக தண்ணீர் திறக்கப்பட்டு வந்தது. ஆனால், 2024ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12ஆம் தேதி மேட்டூர் அணை திக்கப்படுவதற்கான வாய்ப்புகள் தென்படவில்லை. தென்மேற்குப் பருவமழை வரும் மே மாத இறுதியிலே, ஜுன் மாதத் தொடக்கத்திலோ தொடங்கி இயல்பான அளவில் பெய்தால் ஆகஸ்ட் மாத்தில் குறுவை பாசனத்திற்காக தண்ணீர் திறக்க வாய்ப்பு உள்ளது. வழக்கமாக திறக்கப்படும் ஜூன் 12ஆம் தேதி மேட்டூர் அணை திறக்கப்படாவிட்டால், குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டு, தமிழகத்தின் பொருளாதாரம் பாதிக்கப்படும்.**

44. **2023–24ஆம் ஆண்டில் தமிழக அரசின் வரி வருவாய் இலக்கைவிட குறைந்துவிட்டதால், இயல்பாகவே 2024–25ஆம் ஆண்டில் வரி வருவாய் அதிகரிக்கக்கூடும். அதன் காரணமாக, தமிழகத்தின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பும் கணிசமாக அதிகரிக்கக்கூடும். எனினும், 2023–24ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார பின்னடைவு காரணமாக, 2024–25ஆம் ஆண்டுக்கு, கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நிர்ணயிக்கப்பட்ட ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பை தமிழகத்தால் எட்ட முடியாது என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.**

45. **2024–25ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த மாநில உற்பத்தி ரூ.32,00,928.38 கோடியாக இருக்கும் என்று 2023–24ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் கணிக்கப் பட்டிருந்தது. 2024–25ஆம் ஆண்டில் தமிழகப் பொருளாதாரம் வளர்ச்சிப் பாதையில் செல்லும் என்பதால், இந்த இலக்கு எட்டக்கூடிய ஒன்றுதான். ஆனால், 2023–24ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பு, ரூ.28,32,679.98 கோடி என்ற இலக்கை எட்டிப்பிடிக்க தவறிவிட்டது. அதில் ஏற்பட்ட பின்னடைவையும் சேர்த்து ரூ.32 லட்சம் கோடி என்ற ஒட்டுமொத்த மாநில உற்பத்தி இலக்கை எட்ட தமிழகத்தால் முடியாது.**

46. அதே நேரத்தில், 2024–25ஆம்ஆண்டில் வருவாய் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை ஆகியவை கட்டுக்குள் இருக்கும் என்று எதிர்பாரக்கப்படுகிறது. அரசு மதிப்பீட்டின்படி, 2024–25ஆம் ஆண்டில் வருவாய் பற்றாக்குறை ரூ.18,583.12 கோடியாகவும், நிதிப் பற்றாக்குறை 96,031.24 கோடியாகவும் இருக்கும். என்ற தமிழக அரசு கணித்திருக்கிறது.

அரசின் வருவாய் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால், பெரிய அளவில் இயற்கை சீற்றங்கள், பெருந்தொற்று நோய்கள் போன்றவை தாக்காதபட்சத்தில், இந்த இலக்குகளை எட்டிவிட முடியும் என்பதில் ஐயமில்லை.

## 16. தமிழ்நாட்டில் மொத்த கடன் ரூ.14.50 லட்சம் கோடியாக அதிகரிக்கும்

47. 2024–25ஆம் ஆண்டில் தமிழக அரசின் நிதிப் பற்றாக்குறை, ரூ.96,031.24 கோடியாக இருக்கும் என்று கணிக்கப்பட்டிருக்கிறது. 2023–24ஆம் ஆண்டின் நிறைவில், தமிழக அரசின் நேரடிக் கடன் ரூ.8.43 லட்சம் கோடியாக இருக்கும். அத்துடன் வரும் ஆண்டில் புதிதாக வாங்கப்போகும் கடனையும் சேர்த்து, 31.03.2025ஆம் நாளன்று தமிழ்நாட்டின் நேரடிக் கடன் ரூ.9.39 லட்சம் கோடியாக இருக்கும் என்று பா.ம.க. மதிப்பிட்டிருக்கிறது.

48. இது தமிழக அரசின் நேரடிக் கடன் மட்டும் தான். தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கடன்சுமை 2024–25ஆம் ஆண்டின் நிறைவில் சுமார் ரூ.2 லட்சம் கோடியாக இருக்கும். மின் கட்டணங்கள் ஆண்டுக்கு ஆண்டு உயர்த்தப்பட்டு வருவதால், மின்வாரியத்தின் கடன் சுமை பெரிய அளவில் அதிகரிப்பதற்கு வாய்ப்பில்லை. அதே நேரத்தில் போக்குவரத்துக் கழகங்கள் தொடர்ந்து இழப்பை எதிர்கொண்டு வருவதால், அவற்றின் கடன் 2024–25ஆம் ஆண்டின் நிறைவில் ரூ.65,000 கோடியாக அதிகரிக்கும்.

49. 2024–25ஆம் ஆண்டிலும் தமிழ்நாடு மின்சார வாரியம், அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்கள் தேவைக்கு ஏற்ப கடன் வாங்க வேண்டியிருக்கும். அவற்றின் கடன் மதிப்பை துல்லியமாக மதிப்பிட இயலாது என்றபோதிலும் கூட, 2024–25ஆம் ஆண்டின் முடிவில் பொதுத் துறை நிறுவனங்களின் கடன் ரூ.5.11 லட்சம் கோடியாக இருக்கும் என்று உத்தேசிக்கலாம். ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் ஒட்டுமொத்த கடன் ரூ.14.50 லட்சம் கோடியாக இருக்கும்.

ஒவ்வொரு குடும்பத்தின் பெயரிலும் ரூ.7.52 லட்சம் கடன்

50. 2024–25ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் மொத்த மக்கள்தொகை 7.71 கோடி ஆகும். தமிழ்நாடு அரசின் நேரடிக் கடன், பொதுத்துறை நிறுவனங்களின் கடன் ஆகிய இரண்டையும் சேர்த்து மொத்த கடன்சுமை ரூ.14.50 லட்சம் கோடியாக இருக்கும் என்பதால், தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொருவரின் பெயரிலும் ரூ.1,88,067 கடன் பெறப்பட்டிருக்கும். ஒரு குடும்பத்தில் 4 பேர் இருப்பதாக கணக்கில் கொண்டால், அக்குடும்பத்தின் பெயரில் அரசு வாங்கிய கடன் அளவு ரூ.7,52,270ஆக இருக்கும். இது மிகவும் அதிகம். அரசின் கடன்சுமை தாங்க முடியாத அளவுக்கு அதிகரித்து வருகிறது.

51. தமிழ்நாடு அரசு பெற்றுள்ள நேரடிக் கடனுக்காக மட்டும் நடப்பாண்டில் உத்தேசமாக ரூ.75,120 கோடி வட்டி செலுத்த வேண்டியிருக்கும். பொதுத்துறை நிறுவனங்கள் வாங்கிய கடனுக்கான வட்டிவிகிதம் 8.5% என்ற அளவுக்கு குறைக்கப்பட்டாலும் கூட, ரூ.43,435 கோடி வட்டி செலுத்த வேண்டியிருக்கும். ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு அரசு ஓராண்டிற்கு ரூ.1,18,555 கோடி வட்டியாக செலுத்த வேண்டியிருக்கும். அதாவது, ஒவ்வொரு நாளும் ரூ.324.80 கோடியை தமிழக அரசும், பொதுத்துறை நிறுவனங்களும் வட்டியாக செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஒரு மாநில அரசும், அதன் பொதுத்துறை நிறுவனங்களும் ஓராண்டுக்கு ஒரு லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிக தொகையை வட்டியாக செலுத்துவது என்பது வலிமையான பொருளாதாரத்தின் அடையாளம் அல்ல என்பது குறிப்பிடத்தக்கது.

52. தமிழக அரசு நடப்பாண்டில் செலுத்தும் வட்டியை மட்டும் மிச்சப்படுத்தினால், அந்தத் தொகையில் தமிழ்நாட்டிற்குத் தேவையான நீர்ப்பாசனத் திட்டங்கள் அனைத்தையும் செயல்படுத்தி முடித்துவிடலாம். இந்தத் தொகையைக் கொண்டு தமிழ்நாட்டில் 200 மருத்துவக் கல்லூரிகளை கட்ட முடியும். பள்ளிக் கல்வித்துறை, உயர்கல்வித்துறை, சுகாதாரத்துறை ஆகியவற்றின் ஓராண்டுகால செலவுகளை மிகவும் தாராளமாக செய்யலாம். இத்தொகையைக் கொண்டு தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.62,070 வழங்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

53. தமிழக அரசின் கடன் தொகை அனுமதிக்கப்பட்ட அளவுக்குள்தான் இருக்கிறது என்றாலும்கூட, இந்தக் கடன் தொகை கட்டுப்படுத்தப்படாவிட்டால், இனி வரும் காலங்களில் வளர்ச்சிக்காக செலவிடப்படுவதற்கு நிதி இல்லாமல் போகலாம். அரசின் பெரும்பகுதி வருவாய் கடனுக்கான வட்டியைச் செலுத்தவே செலவாகும்.

54. தமிழகத்தின் நிதிநிலையை சீரமைக்க கடனை குறைத்தல், வரியில்லாத வருவாயை அதிகரித்தல் உள்ளிட்ட பல்வேறு ஆக்கபூர்வ திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.

## நிதிநிலையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள்

### 17. தமிழக அரசின் நிர்வாக செலவுகள் 15% குறைப்பு

55. தமிழ்நாட்டின் பொருளாதார நிலைமை மிகவும் மோசமாக இருப்பதாலும், கடன் சுமை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருவதாலும் நிதிநிலைமையை சமாளிக்க பல்வேறு சிக்கன நடவடிக்கைகளை 2024–25ஆம் ஆண்டில் தமிழக அரசு மேற்கொள்ளவுள்ளது. அவற்றின் விவரங்கள்:

1. தமிழக அரசின் அனைத்துத் துறைகளுக்குமான நிர்வாகச் செலவுகள் 15% குறைக்கப்படும்.
2. தமிழ்நாட்டிற்குள் முதலமைச்சர் தவிர்த்த பிற அமைச்சர்கள் விமானப் பயணம் மேற்கொள்வது தடை செய்யப்படுகிறது.
3. அமைச்சர்கள், அதிகாரிகள், அரசுத் துறைகள் ஆகியவற்றுக்கு புதிய மகிழுந்துகள் வாங்க தடை விதிக்கப்படுகிறது.
4. அமைச்சர்கள், அதிகாரிகள் உள்ளிட்டோர் ஆடம்பர விடுதிகளில் தங்க தடை விதிக்கப்படுகிறது. அவர்கள் அரசு விருந்தினர் மாளிகைகளில் மட்டுமே தங்கவேண்டும்.
5. குடிநீர் விநியோகம், திடக்கழிவு மேலாண்மை ஆகியவற்றை கையாள்வதற்காக தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் எந்தவித இழப்பீடும் இல்லாமல் இரத்து செய்யப்படும். அப்பணிகளை அரசுத் துறைகளே மேற்கொள்ள ஊக்குவிக்கப்படும்.
6. தமிழக அரசு சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போதிலும், மூலதன செலவுகள் எந்த வகையிலும் குறைக்கப்படாது.
7. தீயவிப்புத்துறை, காவல்துறை உள்ளிட்ட மாநிலத்தின் பாதுகாப்புடன் தொடர்புடைய துறைகளில் பொதுப் பயன்பாட்டிற்காக ஊர்திகளை வாங்க எந்த தடையும் இல்லை.
8. 2025ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இந்த சிக்கன நடவடிக்கைகளை தளர்த்துவது குறித்து ஆராயப்படும்.

## 18. கடனை திரும்ப செலுத்துவதற்காக அரசின் வருவாயை ரூ.1.80 லட்சம் கோடி அதிகரிக்கச் செய்வதற்கான சிறப்புத் திட்டம்

56. உலகம் முழுவதும் கடுமையான பொருளாதார மந்தநிலை காணப்படுகிறது. அதன் விளைவாக, இந்தியா பொருளாதார பின்னடைவைச் சந்தித்து வருகிறது. இந்தியாவின் பொருளாதார பின்னடைவு தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களையும் பாதித்திருக்கிறது. மற்றொருபுறம், கடந்த காலங்களில் வாங்கப்பட்ட கடனை திரும்ப செலுத்த வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. இந்த இரு நெருக்கடிகளையும் தமிழ்நாடு எதிர்கொண்டாக வேண்டும்.

57. பொருளாதார நிலை மோசமடைவதைத் தடுப்பதுடன், அரசின் வருவாயை அதிகரிப்பதன் மூலம்தான் தமிழ்நாட்டை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்ல முடியும். பன்னாட்டுப் பொருளாதார சூழலில், தமிழக அரசின் வரி வருவாயை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு. அதனால், வரி அல்லாத வருவாயை பெருக்குவதில் கூடுதல் கவனம் செலுத்துவதற்கு தமிழக அரசு திட்டம் வகுத்திருக்கிறது.

**58. அத்திட்டத்தின்படி, தமிழக அரசின் வரி அல்லாத வருவாயை இப்போதுள்ள ஆண்டுக்கு ரூ.20,223 கோடி என்ற அளவில் இருந்து ரூ.2 லட்சம் கோடி என்ற அளவுக்கு உயர்த்த கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்படும். இத்திட்டங்களின் மூலம் ரூ.1.80 லட்சம் கோடி கூடுதல் வருவாய் ஈட்டப்படும்.**

**அ. தமிழக அரசுக்கு சொந்தமான கிரானைட் குவாரிகளுக்கு வழங்கப்பட்ட அனுமதி அனைத்தும் ரத்து செய்யப்பட்டு, குறைந்த மனித வளத்துடன் பராமரிக்க சாத்தியமான குவாரிகள் தமிழக அரசின் கனிம நிறுவனத்தின் (டாமின்) மூலம் நடத்தப்படும். மற்ற குவாரிகள் வெளிப்படையான போட்டி ஏல முறையில் தனியாருக்கு ஒதுக்கீடு செய்யப்படும். இதன் மூலம் அரசுக்கு ஆண்டுக்கு ரூ.55,000 கோடி வருவாய் கிடைக்க வகை செய்யப்படும்.**

**ஆ. 1957 ஆம் ஆண்டின் சுரங்கம் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு & ஒழுங்குமுறை) சட்டத்தின்படி தாது மணல் குவாரிகளுக்கு உரிமம் வழங்கும் அதிகாரம் மாநில அரசுகளுக்கு இல்லை. மத்திய அரசுக்கு மட்டுமே அந்த அதிகாரம் உள்ளது. அதன்படி, தமிழகத்தில் உள்ள தாது மணல் குவாரிகளை நிர்வகிக்கும் உரிமை மத்திய அரசிடம் பேச்சு நடத்தி பெறப்படும். அதன்பின்னர் தாது மணல் குவாரிகளில் 60 விழுக்காட்டை டாமின் நிறுவனம் மூலம் தமிழக அரசே நடத்தும். மீதமுள்ள குவாரிகளில் தாது மணல் அள்ளும் உரிமை வெளிப்படையான போட்டி ஏலம் மூலம் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்படும். ஏற்கனவே இந்த தொழிலில் இருந்து முறைகேடு செய்த நிறுவனங்களுக்கு மீண்டும் இந்த உரிமம் வழங்கப்படாது. இந்த வகையில் அரசுக்கு ஆண்டுக்கு ரூ.60,000 கோடி வருவாய் கிடைக்க வகை செய்யப்படும்.**

**இ. தமிழ்நாட்டில் மணல் குவாரிகள் மூடப்படப்படுவதால், மணல் மூலம் அரசுக்கு வருவாய் கிடைக்காது. அதே நேரத்தில், செயற்கை மணல் மீதான வரி, வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மணல் மீதான தீர்வை, இறக்குமதி மணல் அரசின் மூலம் விற்பனை செய்யப்படுவதால் கிடைக்கும் இலாபம்**

**ஆகியவற்றின் மூலம் அரசுக்கு ஆண்டுக்கு ரூ.40,000 கோடி வரை வருமானம் கிடைக்கும்.**

**ஈ. தமிழ்நாட்டில் மொத்தம் 71 பொதுத்துறை நிறுவனங்கள் உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை நஷ்டத்தில் இயங்குகின்றன. இந்த நிறுவனங்களின் நிர்வாகத்தை வலுப்படுத்தி, அவற்றில் பெரும்பாலானவற்றை இலாபத்தில் இயங்கச் செய்வதன் மூலம், ஆண்டுக்கு ரூ.25,000 கோடி வருவாய் ஈட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. மேற்குறிப்பிட்ட 4 வகை நடவடிக்கைகளின் மூலம் அரசுக்கு கூடுதலாக ரூ.1.80 லட்சம் கோடி வரி அல்லாத வருவாய் கிடைக்கும்.**

**உ. இவை தவிர்த்து, தமிழக அரசின் பிற ஆதாரங்களில் இருந்து கிடைத்து வரும் வரி அல்லாத வருவாயின் அளவை அதிகரிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதனால், தமிழக அரசின் வரி அல்லாத வருவாய் 2024–25ஆம் ஆண்டில் ரூ.2 லட்சம் கோடியை தாண்டவும் வாய்ப்புள்ளது.**

**ஊ. வரியல்லாத வருவாய் மூலம் கிடைக்கும் கூடுதல் நிதி, தமிழ்நாடு அரசின் கடனை செலுத்த திரும்ப செலுத்தவும், தமிழ்நாடு அரசு வாங்கும் கடனின் அளவைக் குறைக்கவும், கல்வி மற்றும் மருத்துவத்திற்கு கூடுதல் நிதி ஒதுக்கவும் பயன்படுத்தப்படும்.**

## 19. பொருளாதார மீட்சிக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள்

**59.** தமிழ்நாட்டில் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பை அடுத்த 5 ஆண்டுகளில், அதாவது 2029–30ஆம் ஆண்டிற்குள் ரூ.62.5 லட்சம் கோடியாக உயர்த்த திட்டங்கள் வகுத்து செயல்படுத்தப்பட வேண்டும். இதற்காக ஆண்டுப் பொருளாதார வளர்ச்சி சராசரியாக 14% இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

**60.** மத்திய அரசின் வரி வருவாயில் மாநிலங்களுக்கு வழங்கப்படும் பங்கு திட்டமிட்டு குறைக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசின் வரி வருவாயில் 50% மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். முன்னேறிய மாநிலங்கள், வளர்ச்சி பெறாத மாநிலங்கள் என்ற அடிப்படையில் மத்திய அரசின் வரி வருவாய் பகிர்ந்தளிக்கப்படுவது வளர்ச்சிக்கு அளிக்கப்படும் தண்டனையாக அமையும். இந்த முறையை மாற்றி, ஒவ்வொரு மாநிலத்தில் இருந்தும் மத்திய அரசுக்கு எவ்வளவு வரி வருவாய் கிடைக்கிறதோ, அதில் 50% சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு வழங்கப்படும் வகையில் மத்திய அரசின் சட்டங்கள் திருத்தப்பட வேண்டும்.

**61.** மத்திய அரசு அதன் வரி வருவாயில் மாநிலங்களுக்கு வழங்கப்படும் பங்கை குறைப்பதற்காக மேல் வரி, கூடுதல் தீர்வை என்ற பெயர்களில் பல்வேறு வரிகளை வசூலிக்கிறது. அவ்வாறு வசூலிக்கப்படும் வரிகளில் மாநிலங்களுக்கு பங்கு அளிக்கப்படாது என்பதால், மாநிலங்களுக்கான வருவாய் பங்கு குறையும். இதைத் தடுக்க மேல்வரி, கூடுதல் தீர்வை ஆகியவற்றை அடிப்படை வரிகளுடன் இணைக்க வேண்டும். மாநிலங்களின் வருவாய்ப் பங்கை அதிகரிக்கும் நோக்குடன் மேற்குறிப்பிட்ட சீர்திருத்தங்களை செய்யும்படி மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்தும்.

**62.** சரக்கு மற்றும் சேவை வரி அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு வரி விதிப்பில் மாநிலங்களின் அதிகாரம் முற்றிலுமாக பறிக்கப்பட்டுவிட்டது. பெட்ரோல், டீசல் மீதான மதிப்புக்கூட்டு

வரி, மது வகைகள் மீதான விற்பனை வரி மற்றும் ஆயத்தீர்வை, பத்திரப்பதிவுக்கான முத்திரைத்தாள் மற்றும் பதிவுக்கட்டணம், மோட்டார் வாகன வரி வசூல் ஆகியவை மூலமாகவே மாநில அரசு தன்னிச்சையாக வரி வசூலிக்க முடியும். இவற்றில் தமிழ்நாட்டில் மதுவிலக்கு நடைமுறைபடுத்தப்பட்டு பெட்ரோல், டீசல் விலைகள் சரக்கு மற்றும் சேவை வரி வரம்புக்குள் கொண்டு வரப்பட்டால், தமிழக அரசின் சொந்த வருமானம் ஆண்டுக்கு ரூ.20,000 கோடிக்கும் கீழ் வந்துவிடும். இது மாநில அரசின் நிதி சுதந்திரத்திற்கு ஆபத்தாகும்.

63. மாநில அரசு நிதி வலிமையைப் பெருக்கிக்கொள்ள வேண்டுமானால், வரி அல்லாத வருவாய் ஆதாரங்களைப் பெருக்குவதற்கான வழிமுறைகளை ஆராய வேண்டும். அதன் மூலம் தான் மாநிலத்தின் வளர்ச்சிக்கும், மக்களின் நலனுக்கும் தேவையான திட்டங்களை தமிழ்நாடு அரசு தன்னிச்சையாக செயல்படுத்த முடியும்.

## 20. 20 ஆண்டுகளில் அடைக்கவேண்டிய ரூ.4 லட்சம் கோடி கடன் அடுத்த 5 ஆண்டுகளில் அடைக்கப்படும்

64. தமிழ்நாடு அரசு கடந்த காலங்களில் வாங்கிய கடன்களின் சுமை தற்போது கழுத்தை நெறிக்கத் தொடங்கியுள்ளது. தமிழ்நாடு அரசு வாங்கும் கடன்களில் பெரும்பகுதி தமிழ்நாடு அரசின் பத்திரங்களை இந்திய ரிசர்வ் வங்கி மூலமாக வெளியிட்டு, அவற்றை விற்பதன் மூலமாகவே பெறப்படுகிறது. ஒவ்வொரு பத்திரத்திற்கும் ஓர் முதிர்வுகாலம் உண்டு. அந்தக் காலத்தில் பத்திரத்திற்கான முதிர்வுத் தொகையை பொதுமக்களுக்கு தமிழக அரசு திரும்ப செலுத்த வேண்டும். அதற்கான நேரம் இப்போது நெருங்கிவிட்டது.

**65. 2024ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் தேதி வரை தமிழ்நாடு அரசு பத்திரங்கள் விற்பனை மூலம் ரூ.6,00,992.90 கோடியை கடனாக பெற்றிருக்கும். இவற்றில் பெரும்பகுதி கடனை அடுத்த 5 ஆண்டுகளில் திரும்பிச் செலுத்த வேண்டும். அடுத்த 5 ஆண்டுகளில் மட்டும் ரூ.1,74,573.90 கோடி கடனைச் செலுத்த வேண்டும்.**

**66. பத்திரங்கள் வெளியீடு மூலம் பெற்று, திரும்ப செலுத்த வேண்டிய கடன்களின் மதிப்பும் அதற்கான காலக்கெடுவும் வருமாறு:**

1. **அடுத்த 5 ஆண்டுகளில் (2024–29) ரூ.1,53,284.40 கோடி (மொத்த கடனில் 25.54%)**
2. **அடுத்த 5–10 ஆண்டுகளில் (2029–34) ரூ.2,14,314.30 கோடி (மொத்த கடனில் 35.71%)**
3. **அடுத்த 10–20 ஆண்டுகளில் (2034–2044) ரூ.33,117 கோடி (மொத்த கடனில் 5.51%)**
4. **அடுத்த 20 ஆண்டுகளுக்குப் பிறகு (2044க்குப் பிறகு) ரூ.2,00,227 கோடி (மொத்த கடனில் 33.33%)**

**67. தமிழ்நாடு அரசு ஒவ்வொரு ஆண்டும் கடனுக்கான வட்டியாக மட்டும் ரூ.50,000 கோடிக்கும் அதிக தொகையை செலுத்தி வருகிறது. தற்போது நடப்பாண்டில் அசலாக ரூ.21,289.50 கோடியும், அதற்கடுத்த ஐந்தாண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக ரூ.30,656 கோடியும், அதற்கடுத்த ஐந்தாண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக ரூ.42,862.80 கோடியும் செலுத்த வேண்டும். இது அரசுக்கு பெரும் சுமையாக அமையும்.**

**68. எனினும், அரசின் கடன் சுமையை குறைக்கும் நோக்குடன் அடுத்த 20 ஆண்டுகளில் செலுத்தப்படவேண்டிய ரூ.4,00,715.70 கோடி கடன் அடுத்த 5 ஆண்டுகளில் செலுத்தப்படும்.**

## 21. அதிக இனிப்பு, உப்பு, கொழுப்பு கொண்ட உணவுப் பொருட்களுக்கு 30% கூடுதல் வரி

69. உடல் நலனுக்கு தீங்கை ஏற்படுத்தக்கூடிய அதிக இனிப்பு, அதிக உப்பு, அதிக கொழுப்பு கொண்ட பொருட்களின் பயன்பாடு இந்தியாவில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால், தொற்றா நோய்களின் தாக்கம் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அதிகரித்துள்ளது.

70. உலக அளவில் தனிநபர் சர்க்கரை பயன்பாடு ஆண்டுக்கு 22 கிலோவாக உள்ள நிலையில், இந்தியாவில் 25 கிலோவாக அதிகரித்துள்ளது. இது உலக சுகாதார நிறுவனம் நிர்ணயித்துள்ள அளவைவிட 500%, அதாவது 5 மடங்கு அதிகம் ஆகும்.

71. **அதிக உப்பு, அதிக கொழுப்பு கொண்ட உணவுப் பொருட்களின் பயன்பாடும் அதிகரித்துள்ளது. இதனால், உடல் பருமன், பல் சொத்தை, இதய நோய்கள், இரண்டாம் வகை நீரிழிவு நோய், சில வகையான புற்றுநோய்கள் போன்றவை ஏற்படுகின்றன. இந்த வகை உணவுகள் மீது கூடுதல் வரி விதிப்பதன் மூலம் அவற்றின் பயன்பாட்டை கட்டுப்படுத்த முடியும் என்று யுனிசெஃப் அமைப்பின் சார்பில் நடத்தப்பட்ட ஆய்வு தெரிவிக்கிறது. அதன்படி, கீழ்க்கண்ட உணவுப் பொருட்களுக்கு கீழ்க்கண்ட அளவில் சுகாதார வரி கூடுதலாக விதிக்கப்படும்.**

அ. **இனிப்பு கலந்த குளிர்பானங்களுக்கு தற்போது 28% ஜி.எஸ்.டி.யும், 12% கூடுதல் தீர்வையும் வசூலிக்கப்படுகிறது. இவற்றுடன் சேர்த்து, தமிழ்நாடு சுகாதார வரியாக 30% வசூலிக்கப்படும்.**

ஆ. **சீனி எனப்படும் வெள்ளை சர்க்கரை மீது இப்போது 18% ஜி.எஸ்.டி. வரி விதிக்கப்படுகிறது. இத்துடன் கூடுதலாக 30% தமிழ்நாடு சுகாதார வரி வசூலிக்கப்படும். வீட்டுப் பயன்பாட்டுக்காக வாங்கப்படும் சீனிக்கு கூடுதல் சுகாதார வரி விதிப்பில் இருந்து விலக்கு அளிக்கப்படும். வணிக நோக்குடன் உணவு தயாரிக்கும் நிறுவனங்கள் மொத்தமாக வாங்கும் சீனி மீது மட்டுமே இந்த வரி விதிக்கப்படும்.**

இ. **பீட்சா, பர்கர், சான்ட்விச், ஷவர்மா போன்ற அதிக கொழுப்பு கொண்ட உணவுப் பொருட்களுக்கு அனைத்து நிலைகளிலும் 30% தமிழ்நாடு சுகாதார வரி விதிக்கப்படும்.**

ஈ. **மயோனஸ் மீது 25% தமிழ்நாடு சுகாதார வரி விதிக்கப்படும்.**

72. **மேற்கண்ட நடவடிக்கையின் மூலம் மக்களுக்கு நோய் ஏற்படுவது தவிர்க்கப்படுவதுடன், அரசுக்கு கூடுதல் வருவாயும் கிடைக்கும். இந்த வகையில் கிடைக்கும் வருவாய் தமிழக அரசின் மருத்துவமனைகளை மேம்படுத்தவும், மருந்துகள் வாங்கவும் செலவிடப்படும்.**

# சமூகநீதி

## 22. 2024–25 சமூகநீதி சிறப்பாண்டு: சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும்

73. **இந்தியாவில் கர்நாடகம், பீகார், ஒதிஷா ஆகிய மாநிலங்களில் சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. கணக்கெடுப்பில் கிடைக்கப்பட்ட தரவுகளின்**

அடிப்படையில், இடஒதுக்கீட்டை 75%ஆக அதிகரித்தல், வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்கள் தொழில் தொடங்க தலா ரூ.2 லட்சம் வழங்குதல், வீடற்றவர்களுக்கு வீடு வழங்குதல் உள்ளிட்ட சமூகநீதி நடவடிக்கைகளை பீகார் அரசு மேற்கொண்டுள்ளது. ஆந்திரத்தில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், தெலுங்கானா அரசும் விரைவில் இதை செய்யப்போவதாக அறிவித்திருக்கிறது.

74. சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு முதன் முதலில் தமிழ்நாட்டில் தான் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். 3 மாநிலங்களில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தி முடிக்கப்பட்டுள்ள நிலையில், இதுவரை அதற்கான முன்னேற்பாடுகளைக் கூட செய்யாமல், பின்தங்கியிருப்பதை கடமை தவறிய செயலாக தமிழ்நாடு அரசு கருதுகிறது. இச்சூழலை மாற்றவும், தமிழ்நாட்டில் சமூகநீதியை நிலைநிறுத்தவும் 2024–25ஆம் ஆண்டை சமூகநீதி ஆண்டாக கடைபிடிக்கவும், சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தவும் அரசு முடிவு செய்துள்ளது.

75. தமிழ்நாட்டில் மக்களவைத் தேர்தல் முடிவடைந்த பிறகு, ஜூலை 25ஆம் தேதி முதல் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படும். தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் மூலம் இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்படும். இதற்காக பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு வழக்கமான ஒதுக்கீட்டுடன் கூடுதலாக ரூ.500 கோடி ஒதுக்கப்படுகிறது.

76. சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பின் முடிவுகள் 2024ஆம் ஆண்டு இறுதிக்குள் வெளியிடப்படும். அதில் தெரியவரும் தரவுகளின் அடிப்படையில் இடஒதுக்கீட்டின் அளவை அதிகரித்தல், வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு சிறப்பு வாழ்வாதாரத் திட்டங்கள் உள்ளிட்ட நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும்.

## 23. வன்னியர்கள் இடஒதுக்கீடு

77. தமிழ்நாட்டில் கல்வி மற்றும் சமூக நிலையில் மிகமிக பின்தங்கிய நிலையில் உள்ள வன்னியர்களின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான 20% இடஒதுக்கீட்டில் வன்னியர்களுக்கு உள் இடஒதுக்கீடு வழங்கத் தடையில்லை என்று 31.03.2022ஆம் நாள் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதன் அடிப்படையில், தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் மாற்றியமைக்கப்பட்டு, வன்னியர்களுக்கு உள்ஒதுக்கீடு வழங்குவது குறித்து 3 மாதங்களுக்குள் பரிந்துரை அறிக்கை தாக்கல் செய்யும்படி, 12.01.2023ஆம் நாள் தமிழக அரசு ஆணையிட்டது. ஆனால், அதன் பின் ஓராண்டுக்கு மேலாகியும் பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பரிந்துரை அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை. இடஒதுக்கீடு குறித்த பரிந்துரை அறிக்கையை தாக்கல் செய்வதற்கான காலக்கெடு 11.07.2024ஆம் நாள் வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

78. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திடமிருந்து, ஜூன் மாதத்திற்குள் பரிந்துரை அறிக்கை பெறப்பட்டு, அதன் அடிப்படையில் வன்னியர்களுக்கான இடஒதுக்கீட்டு சட்டம் தமிழக சட்டப்பேரவையில் கொண்டு வந்து நிறைவேற்றப்படும் என்று அரசு உறுதியளிக்கிறது.

## 24. பிற சமூகங்களுக்கும் உள் இடஒதுக்கீடு

79. தமிழ்நாட்டில் விரைவில் நடத்தப்படவுள்ள சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பின் மூலம் ஒவ்வொரு சமூகத்தின் மக்கள்தொகை விவரங்களும் தொகுக்கப்படும். அதன்படி,

அனைத்து சாதிகளுக்கும் அவர்களின் மக்கள்தொகை அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்கப்படும்.

80. விஸ்வகர்மாக்கள், யாதவர்கள், முத்தரையர்கள் ஆகியோருக்கு மக்கள் தொகை அடிப்படையில் உள்இடஒதுக்கீடு வழங்கப்படும்.

81. நாவிதர், வண்ணார், பருவதராசகுலம், ஒட்டர், வலையர், அம்பலக்காரர், குரும்பர், குயவர், வேட்டுவக்கவுண்டர், ஊராளி கவுண்டர் ஆகிய 10 சமுதாயங்களும் ஒரு பிரிவாக உருவாக்கப்பட்டு, அவர்களுக்கு மக்கள்தொகை அடிப்படையில் தனி இடஒதுக்கீடு வழங்கப்படும்.

82. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளில் உள்ள மற்ற இடஒதுக்கீட்டுப் பிரிவினருக்கு அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில் உள்ஒதுக்கீடு / தொகுப்பு ஒதுக்கீடு வழங்கப்படும்.

83. தமிழ்நாட்டில் நீலகிரி தவிர்த்த பிற பகுதிகளில் வாழும் குரும்பர்கள், குரும்பக் கவுண்டர்கள் ஆகியோரை பழங்குடியினர் பிரிவில் சேர்க்கும்படி மத்திய அரசை தமிழக அரச வலியுறுத்தும்.

## 25. இடஒதுக்கீட்டின் பயன்கள் – வெள்ளை அறிக்கை

84. 1989ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு இரண்டாகப் பிரிக்கப்பட்டு, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு என்ற புதிய இடஒதுக்கீட்டுப் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. அதன் பிறகு இன்று வரையிலான 35 ஆண்டுகளில் ஒவ்வொரு சமூகத்திற்கும் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் எந்த அளவுக்குப் பிரதிநிதித்துவம் கிடைத்திருக்கிறது என்பது குறித்த புள்ளி விவரங்கள் அடங்கிய வெள்ளை அறிக்கை வெளியிடப்படும்.

85. ஒவ்வொரு ஆண்டும் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில், ஒவ்வொரு சமூகத்திற்கும் கிடைத்த பிரதிநிதித்துவம் குறித்த விவரங்கள் திரட்டப்பட வேண்டும். 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை அந்தப் புள்ளி விவரங்களின் அடிப்படையில் ஒவ்வொரு சமூகமும் எட்டியுள்ள முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட வேண்டும் என்று சட்டநாதன் ஆணையம் பரிந்துரைத்திருக்கிறது. அதன்படி, இடஒதுக்கீட்டால் ஒவ்வொரு சமுதாயத்திற்கும் கிடைத்த பயன்கள் குறித்த விவரங்கள் ஒவ்வொரு ஆண்டும் திரட்டப்பட்டு, 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆய்வுக்கு உட்படுத்தப்படும்.

## 26. பிற்படுத்தப்பட்ட சாதிகளின் முன்னேற்றத்திற்காக கார்ப்பரேஷன்கள்

86. ஆந்திர மாநிலத்தைப் பின்பற்றி தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பில் உள்ள சமுதாயங்களில், 30 ஆயிரத்திற்கும் கூடுதலாக மக்கள் தொகை கொண்ட அனைத்துச் சாதிகளுக்கும், தனித்தனியாக நலவாரியங்கள் அமைக்கப்படும். 30 ஆயிரத்திற்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட சாதிகளைச் சில குறிப்பிட்ட காரணிகளின் அடிப்படையில் ஒருங்கிணைத்து கார்ப்பரேஷன்கள் உருவாக்கப்படும்.

87. ஒவ்வொரு கார்ப்பரேஷனுக்கும் தலைவர்களாக அந்தந்தச் சாதிகளைச் சேர்ந்தவர்களே நியமிக்கப்படுவார்கள். ஒவ்வொரு சாதிக்குமான நலத்திட்ட உதவிகள், முதியோர்

**ஓய்வூதியம், கல்விக்கட்டணம், தொழில் தொடங்கக் கடனுதவி, மருத்துவ உதவிகள் ஆகியவை இந்த கார்ப்பரேஷன்கள் மூலமாக மட்டுமே வழங்கப்படும். அடுத்த 5 ஆண்டுகளில் இந்த கார்ப்பரேஷன்களின் மூலமாக மொத்தம் 3 இலட்சம் கோடி ரூபாய் அளவுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும்.**

## 27. சமையல் எரிவாயுக்கு ரூ.500 மானியம்

**88.** **உலகச் சந்தையில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாக, இந்தியாவில் சமையல் எரிவாயு உருளையின் விலை கடந்த சில மாதங்களுக்கு முன்பு ரூ.1118 என்ற உச்சத்தை அடைந்தது. பின்னர், ஒரு எரிவாயு உருளைக்கு ரூ.200 வீதம் மானியம் வழங்குவதாக மத்திய அரசு அறிவித்ததைத் தொடர்ந்து, எரிவாயு உருளை விலை ரூ.918ஆக குறைந்தது.**

**89.** **சமையல் எரிவாயு உருளையின் விலை குறைக்கப்பட்டாலும் கூட, பல ஏழைக் குடும்பங்களால் அதை வாங்க முடியவில்லை. இந்தச் சூழலைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் ஒரு உருளைக்கு ரூ.500 வீதம் மானியம் வழங்கப்படும். ஒரு குடும்பத்திற்கு ஆண்டுக்கு 6 உருளைகளுக்கு இந்த மானியம் வழங்கப்படும். இதன் மூலம் ஒரு சமையல் எரிவாயு விலை ரூ.418–க்கு கிடைக்கும். அதன்பின் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் சமையல் எரிவாயு உருளை விலை மிகவும் குறைவாக இருக்கும்.**

## 28. கோயம்பேடு பேருந்து முனையத்தில் சென்னையின் மிகப்பெரிய பூங்கா அமைக்கப்படும்

**90.** **சென்னை கோயம்பேட்டில் செயல்பட்டு வரும் சென்னைப் புறநகரப் பேருந்து முனையத்தில் இருந்து இயக்கப்பட்டு வரும் பெரும்பான்மையான பேருந்துகள், கிளாம்பாக்கத்தில் புதிதாக திறக்கப்பட்டுள்ள பேருந்து முனையத்திற்கும், மாதவரம் பேருந்து முனையத்திற்கும் மாற்றப்பட்டு அங்கிருந்து இயக்கப்பட்டு வருகின்றன. பூந்தமல்லி அருகே கூத்தம்பாக்கத்தில் அமைக்கப்பட்டு வரும் புதிய பேருந்து முனையம் நடப்பாண்டு இறுதியில் செயல்பாட்டுக்கு வந்த பிறகு, பூந்தமல்லி பேருந்து முனையத்தின் தேவை முடிவுக்கு வந்துவிடும். அதன்பின்னர், கோயம்பேடு பேருந்து முனையம் மிகப்பெரிய பூங்காவாக மாற்றப்படும்.**

**91.** **கோயம்பேடு பேருந்து முனையத்தின் மொத்தப் பரப்பு 36 ஏக்கர், தனியார் பேருந்து முனையத்தின் பரப்பு 6.8 ஏக்கர், கோயம்பேடு சந்தைப் பூங்கா 7.6 ஏக்கர், கூடுதல் நிலம் 16 ஏக்கர் ஆகியவற்றை ஒருங்கிணைத்து மொத்தம் 66.4 ஏக்கர் பரப்பளவில் கோயம்பேடு பூங்கா அமைக்கப்படும். இந்தப் பூங்காதான் சென்னையின் மிகப்பெரிய பூங்காவாக இருக்கும்.**

**92.** **பூங்கா அமைக்கும் பணிகளுக்காக 2024–25ஆம் ஆண்டில் ரூ.100 கோடி ஒதுக்கப்படும்.**

## 29. கஞ்சா உள்ளிட்ட போதை பொருட்களை ஒழிக்க – டிஜிபி தலைமையில் காவல்துறையில் தனி பிரிவு

93. தமிழ்நாட்டின் மிகப்பெரிய சிக்கலாக கஞ்சா உள்ளிட்ட போதை பொருட்களின் பயன்பாடு உருவெடுத்துள்ளது. பள்ளிகளில் பயிலும் பதின்வயது சிறுவர்கள்கூட மது, குட்கா எனப்படும் போதை பாக்குகள், கஞ்சா, அபின், எல்எஸ்டி உள்ளிட்ட போதை பொருட்களுக்கு அடிமையாகி வருகின்றனர். பல பள்ளிகளில் போதையில் ஆசிரியர்களை மாணவர்கள் தாக்கும்

நிகழ்வுகள் அரங்கேறுகின்றன. போதை பழக்கம் மிக மோசமான தாக்கத்தை தமிழ்நாட்டு இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் மீது ஏற்படுத்திவிடும். இது தடுக்கப்படவேண்டும்.

**94.** **தமிழ்நாட்டில் போதைப் பொருட்களைக் கட்டுப்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசின் சார்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் கூட, அது போதுமானதாக இல்லை. போதைப்பொருள் கடத்தல், விற்பனை, பயன்பாடு ஆகியவற்றை முற்றிலும் தடுப்பதற்காக தமிழ்நாடு காவல்துறையில் தனிப் பிரிவு ஏற்படுத்தப்படும். தமிழ்நாடு காவல்துறையின் சட்டம் ஒழுங்கு பிரிவு தலைமை இயக்குநருக்கு அடுத்த நிலையில் உள்ள மூத்த காவல்துறை தலைமை இயக்குநர் (டிஜிபி) போதைப் பொருள் தடுப்புப் பிரிவுக்கு தலைமை ஏற்பார்.**

**95.** **இப்பிரிவுக்கு தமிழ்நாட்டின் 4 மண்டலங்களிலும் காவல்துறை துணைத் தலைவர் (டிஐஜி) நிலை அதிகாரி ஒருவரும், இரு மாவட்டங்களுக்கு கண்காணிப்பாளர் நிலை அதிகாரி ஒருவரும், பொறுப்பு அதிகாரிகளாக நியமிக்கப்படுவார்கள். மாவட்டங்களில் இப்பிரிவுக்கு கூடுதல் துணை கண்காணிப்பாளர் நிலை அதிகாரி தலைமை வகிப்பார்.**

**96.** **கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களை கடத்துபவர்கள், விற்பனை செய்பவர்கள் அனைவரும் ஒன்றுக்கும் மேற்பட்ட முறை அதே குற்றத்தைச் செய்தால், குண்டர் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்படுவார்கள்.**

**97.** **தமிழ்நாட்டின் ஏதேனும் ஒரு பகுதியில் போதைப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவது கண்டுபிடிக்கப்பட்டால், அதற்கு அம்மாவட்டத்தில் தனிப்பிரிவு அதிகாரிதான் பொறுப்பேற்க வேண்டும். இத்தகைய அதிரடி நடவடிக்கைகளின் மூலம் தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் அடுத்த ஓராண்டிற்குள் போதைப் பொருள் நடமாட்டம் ஒழிக்கப்படும்.**

## 30. மதுவிலக்கு

**98.** **பாட்டாளிகளின் நாளான மே 1ஆம் தேதி முதல் தமிழ்நாட்டில் அனைத்து மதுக்கடைகளும் மூடப்பட்டு முழு மதுவிலக்கு நடைமுறைப்படுத்தப்படும்.**

**99.** **தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மது, பீர் ஆலைகளுக்கு வழங்கப்பட்ட உரிமம் இரத்து செய்யப்பட்டு, மது ஆலைகள் மூடப்படும். இதன் மூலம் தமிழகத்தில் ஒரு சொட்டு மதுகூட உற்பத்தி செய்யப்படவில்லை என்ற நிலை ஏற்படுத்தப்படும்.**

100. மதுவுக்கு அடிமையான குடிநோயாள்கள் அனைவரையும் அந்நோயிலிருந்து விடுவிக்க அவர்களுக்கு மதுபோதை மீட்பு மருத்துவம் அளிக்கப்படும். இதற்காக ஒவ்வொரு வட்டத்திலும் மதுபோதை மீட்பு மையம் அமைக்கப்படும். இதில் குடிநோயாள்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்கான செலவை அரசே ஏற்கும். சிகிச்சை காலத்தில் குடி நோயாள்களின் குடும்பத்திற்கு நிதியுதவி வழங்கப்படும்.

101. டாஸ்மாக் மதுக்கடைகளில் பணியாற்றியோர்களுக்கு அரசின் பிற துறைகளில் மாற்றுப்பபணி வழங்கப்படும்.

## 31. குழந்தைகளுக்கு தனித் தமிழில் பெயர் வைத்தால் ரூ.5,000 பரிசு

**102.** **தமிழ்நாட்டில் குழந்தைகளுக்கு நாகரிகம் என்ற பெயரில் வடமொழிப் பெயர்களை சூட்டும் வழக்கம் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது. ஒலிப்பதற்கு நாகரீகமாக இருக்கும் பல வடமொழி பெயர்களின் பொருள் அருவருக்கத்தக்க பொருள் கொண்டவை ஆகும்.**

ஆனால், இவற்றை அறியாமலேயே தமிழ்நாட்டு மக்கள் அப்பெயர்களை பெருமிதத்துடன் தங்கள் குழந்தைகளுக்கு சூட்டி வருகின்றனர். இந்நிலை உடனடியாக மாற்றப்பட வேண்டும்.

103. தமிழ்நாட்டில் குழந்தைகளுக்கு தனித்தமிழில் பெயர்சூட்டும் பெற்றோருக்கு ரூ.5,000 வெகுமதி வழங்கப்படும். குழந்தைகளின் பெயருடன் கூடிய பிறப்புச்சான்றிதழை வருவாய் ஆய்வாளரிடம் தாக்கல் செய்து இந்த வெகுமதியைப் பெற்றுக்கொள்ளலாம்.

104. குழந்தைகளுக்கு சூட்டுவதற்காக இருபாலினத்தவருக்குமான தனித்தமிழ் பெயர்கள் கொண்ட பட்டியலை தமிழக அரசு விரைவில் வெளியிடும்.

## 32. ஏழைக் குடும்பங்களுக்கான மாத உரிமைத் தொகை ரூ.2,000ஆக உயர்த்தப்படும்

105. வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மக்களை வறுமையிலிருந்து மீட்டெடுக்க தலைசிறந்த வழி அவர்களுக்கு நேரடி பண உதவி வழங்கும் திட்டத்தை செயல்படுத்துவது தான் என்று பொருளாதார வல்லுநர்கள் பரிந்துரைத்துள்ளனர். அதைப்பின்பற்றி, சுவிட்சர்லாந்து, பின்லாந்து, ஸ்பெயின் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளிலும், கனடா உள்ளிட்ட நாடுகளிலும் ஏழைக் குடும்பங்களுக்கு அடிப்படை மாத வருமானத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

106. இதைப் பின்பற்றி, தமிழ்நாட்டில் ஏழை குடும்பங்களின் தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000 உரிமைத் தொகை வழங்கும் திட்டம் கடந்த செப்டம்பர் 15ஆம் தேதி முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் தொகை போதுமானது அல்ல என்பதால், வரும் செப்டம்பர் 15ஆம் தேதி முதல் இந்த உரிமைத் தொகை ரூ.2,000ஆக உயர்த்தி வழங்கப்படும்.

## 33. முதியோர், ஆதரவற்றோர் உதவித்தொகை ரூ.3,000ஆக உயர்த்தப்படும்: 70 லட்சம் பேருக்கு வழங்க நடவடிக்கை

107. தமிழ்நாட்டில் முதியோர் மற்றும் ஆதரவற்றோருக்கு மாத உதவித் தொகை வழங்க நடைமுறைக்கு பொருந்தாத கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்படுவதால், எண்ணற்ற முதியோருக்கும், ஆதரவற்றோருக்கும் தமிழ்நாடு அரசின் உதவித் தொகை கிடைப்பதில்லை.

108. இந்த நிலையை மாற்றும் வகையில், 60 வயதைக் கடந்த அனைவருக்கும் முதியோர் உதவித் தொகை வழங்கப்படும். அரசுப் பணியில் இருந்து ஓய்வுபெற்று ஓய்வூதியம் பெறுபவர்கள், தனியார்நிறுவனங்களில் பணியாற்றி தொழிலாளர் வருங்கால வைப்புநிதி வாயிலாக உதவித் தொகை பெறுபவர்களுக்கு மட்டும் இதில் இருந்து விலக்களிக்கப்படும்.

109. அதேபோல் ஆதரவற்றவர்கள் அதற்கான சான்றுகளுடன் விண்ணப்பித்தால், உரிய ஆய்வுகளை மேற்கொண்டு அடுத்த மாதத்தில் இருந்து உதவித்தொகை வழங்கப்படும்.

110. தமிழ்நாட்டில் 70 லட்சம் பேருக்கு, மாதம் ரூ.3,000 வீதம் இந்த உதவித் தொகை வழங்கப்படும். இதற்காக ஆண்டுக்கு ரூ.25,200 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

# இளைஞர்கள் – பட்டதாரிகள் நலன்

## 34. 2024–25ஆம் ஆண்டில் 2 லட்சம் பேருக்கு அரசு வேலை

111. இளைஞர் சக்தியை பயன்படுத்திக் கொள்வதில் தமிழ்நாடு இரு வகையான பாதிப்புகளை எதிர்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டின் அரசுத் துறைகளில் 5 லட்சம் காலிப் பணி யிடங்கள் பல ஆண்டுகளாக நிரப்பப்படாமல் உள்ளன. அடுத்த 3 ஆண்டுகளில் மேலும் ஒரு லட்சம் காலிப் பணியிடங்கள் ஏற்படக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றை நிரப்பாததன் மூலம், ஒருபுறம் அரசு நிர்வாகத்தில் பெரும் தொய்வு ஏற்படுகிறது; மறுபுறம் படித்த இளைஞர்களுக்கு தகுதிக்கேற்ற வேலைகள் கிடைப்பதில்லை. இந்த நிலை மாற்றப்படும்.

**112. தமிழ்நாடு அரசுத் துறைகளில் உள்ள அனைத்து காலிப் பணியிடங்களையும் அடுத்த 3 ஆண்டுகளில் நிரப்ப அரசு முடிவு செய்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் 2 லட்சம் பேர் வீதம், அடுத்த 3 ஆண்டுகளில் 6 லட்சம் பேருக்கு அரசு வேலைவாய்ப்பு வழங்கப்படும்.**

**113. தமிழக அரசின் பல்வேறு துறைகளில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக ஒப்பந்த அடிப்படையிலும், தற்காலிக அடிப்படையிலும், தினக்கூலி அடிப்படையிலும் பணியாற்றி வரும் அனைவருக்கும் பணிநிலைப்பு வழங்கப்பட்டு, காலமுறை ஊதியம் வழங்கப்படும்.**

## 35. தனியார் தொழில் வணிக நிறுவனங்களில் தமிழர்களுக்கு 80% இடஒதுக்கீட்டு சட்டம்

114. தமிழ்நாட்டில் தொழில் மற்றும் வணிகத்தில் முன்னேறிய மாநிலங்கள் அனைத்தும் உள்ளூர் மக்களுக்கு மட்டும் வேலை வழங்கும் சட்டத்தை இயற்றி வருகின்றன. ஹரியானா, ஆந்திரா, கர்நாடகா, ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், மராட்டியம், குஜராத் ஆகிய மாநிலங்களில் இத்தகைய சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதனால், அந்த மாநிலங்களில் தமிழர்களுக்கு வேலை கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது.

**115. வெளிமாநிலங்களில் தமிழர்களுக்கு வேலை கிடைக்காத நிலையில், தமிழ்நாட்டில் தமிழர்களுக்கான வேலைவாய்ப்பை அதிகரிக்க வேண்டிய கடமை தமிழக அரசுக்கு உள்ளது. அந்தக் கடமையை நிறைவேற்றும் நோக்குடன், தமிழ்நாட்டில் உள்ள தொழில் வணிக நிறுவனங்களில் மாத வருவாய் ரூ.40,000 வரை உள்ள பணிகளில் 80% பணியிடங்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்படுவதை கட்டாயமாக்கி சட்டம் இயற்றப்படும். தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிதிநிலை அறிக்கை கூட்டத்தொடரிலேயே இதற்கான சட்டம் நிறைவேற்றப்படும்.**

**116. தமிழ்நாட்டு இளைஞர்களை வேலைவாய்ப்புக்கு தகுதியானவர்களாக மாற்றும் வகையில், அவர்களுக்கு தேவையான தொழில் திறன் பயிற்சிகள் அரசால் இலவசமாக வழங்கப்படும்.**

## 36. நிலம் கொடுத்தவர்களுக்கு கட்டாய வேலைவாய்ப்பு

117. தமிழ்நாட்டை தொழில் வளர்ச்சி மிகுந்த மாநிலமாக மாற்ற வேண்டுமானால், அதிக எண்ணிக்கையிலான தொழிற்சாலைகளையும், வணிக நிறுவனங்களையும் உருவாக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. தமிழ்நாடு வேளாண்மை சார்ந்த மாநிலம்

என்பதால், தொழிற்சாலைகள் மற்றும் வணிக நிறுவனங்களை தொடங்குவதற்கு வேளாண் நிலங்களைத்தான் கையகப்படுத்தி வழங்க வேண்டி உள்ளது.

118. தொழில் வளர்ச்சி என்ற பெயரில் வேளாண் விளை நிலங்களை கையகப்படுத்துவதில் பாட்டாளி மக்கள் கட்சிக்கு உடன்பாடு இல்லை. ஆனாலும், தொழில் வளர்ச்சியை புறக்கணிக்க முடியாது என்பதால், வேளாண்மைக்கு அதிக பாதிப்பு ஏற்படாத வகையில், பயன்படுத்தப்படாத நிலங்களையும், மானாவரி நிலங்களையும் தொழிற்சாலைகளுக்காக கையகப்படுத்தலாம்; அதன் மூலம் உழவர்களின் வாழ்வாதாரம் பறிக்கப்படாமல் தடுக்கலாம் என்று பாமக கருதுகிறது.

**119. தொழில் திட்டங்களுக்காக நிலங்கள் கையகப்படுத்தப்படும் போது, அதற்காக வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை சில மாதங்களில் கரைந்துவிடும். அதன் பின்னர், நிலம் வழங்கியவர்கள் வறுமையில் வாட நேரிடும். இந்தநிலையை மாற்ற, தொழிற்சாலைகளுக்கு நிலம் அளித்த மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதை கட்டாயமாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.**

**120. தொழிற்சாலைகளை அமைப்பதற்கான நிலங்கள் கையகப்படுத்தப்படும் போது, நிலம் கொடுத்தவர்களின் குடும்பங்களில் உள்ள வேலைவாய்ப்புக்கு தகுதியுள்ளவர்களின் விவரங்கள் பெறப்பட்டு, முதலில் நிலம் கொடுத்தவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் பட்டியல் தயாரிக்கப்படும். புதிய தொழிற்சாலைகள் அமைக்கப்படும் போது, இந்தப் பட்டியலில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வரிசை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்படுவது உறுதி செய்யப்படும். இதற்காக தொழில்துறையில் தனிப்பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படும்.**

## 37. டி.என்.பி.எஸ்.சி. மூலம் அரசுப் பணியாளர் தேர்வு: நிலையான தேர்வு அட்டவணை உருவாக்கப்படும்

121. தமிழ்நாடு அரசுத் துறைகளுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் டிஎன்பிஎஸ்சி மூலமாக பணியாளர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள். கடந்த காலங்களில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதால், எப்போதாவது ஒருமுறை தான் அரசுப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் நடத்தப்பட்டு வந்தன.

122. நடப்பாண்டில் அரசுப் பணிகளுக்கு 2 லட்சம் பேர் தேர்ந்தெடுக்கப்பட இருப்பதாலும், இனிவரும் காலங்களில் காலிப் பணியிடங்கள் உடனுக்குடன் நிரப்பப்படவிருப்பதாலும், ஒவ்வொரு ஆண்டும், ஒவ்வொரு குறிப்பிட்ட மாதத்தில், ஒரு குறிப்பிட்ட பணிகளுக்கான தேர்வுகளை டிஎன்பிஎஸ்சி மூலமாக நடத்த தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

**123. அதன்படி, ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மற்றும் ஜூலை மாதங்கள் என ஆண்டுக்கு இரண்டுமுறை தொகுதி – 4 பணிகளுக்கான அறிவிக்கைகள் வெளியிடப்பட்டு, அடுத்த இரு மாதங்களில் தேர்வுகள் நடத்தப்படும். இதற்கான முடிவுகள் முறையே மே, நவம்பர் மாதங்களில் வெளியிடப்படும்.**

**124. முதல் தொகுதி பணிகளுக்கான அறிவிக்கை பிப்ரவரி மாதம் வெளியிடப்பட்டு, ஏப்ரல் மாதத்தில் முதல்நிலைத் தேர்வு, ஜூலை மாதத்தில் முதன்மைத் தேர்வு நவம்பர் மாதத்தில் நேர்காணல் நடத்தப்படும். திசம்பர் மாதத்தில் இறுதி முடிவுகள் வெளியிடப்படும்.**

**125.** **இரண்டாம் தொகுதி பணிகளுக்கான அறிவிக்கை மார்ச் மாதம் வெளியிடப்பட்டு, மே மாதத்தில் முதல்நிலைத் தேர்வு, ஆகஸ்ட் மாதத்தில் முதன்மைத் தேர்வு நடத்தப்படும்.**

**126.** **பொறியியல் பணிகள், வேளாண் பணிகள், புள்ளியியல் பணிகள் உள்ளிட்ட முதல் 4 தொகுதிகளுக்குள் வராத பணிகளுக்கான அறிவிக்கைகள் ஆகஸ்ட் மாதத்தில் வெளியிடப்பட்டு, அடுத்த 5 மாதங்களில் தேர்வுகள் நடத்தி, முடிவுகள் வெளியிடப்படும்.**

**127.** **முதல் தொகுதி பணிகள் தவிர்த்து, பிற பணிகளுக்கு எழுத்துத் தேர்வு மட்டுமே நடத்தப்படும். நேர்காணல் முறை இரத்து செய்யப்படும்.**

## 38. வேலையில்லாத படித்த இளைஞர்களுக்கு மாதம் ரூ.5,000 வரை உதவித்தொகை

**128.** தமிழக அரசின் சார்பில் படித்து வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்களுக்கு மாதாந்திர உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர்களுக்கு ரூ.200, தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.300, 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.400, பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு முடித்தவர்களுக்கு ரூ.600 உதவித்தொகை வழங்கப்படுகிறது.

**129.** படித்து முடித்த இளைஞர்கள் அரசு வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து 5 ஆண்டுகள் நிறைவடைந்த பிறகே இந்த உதவித்தொகை பெற தகுதியானவர்களாவர். ஆண்டுக்கு ரூ.50,000–க்கும் குறைவான குடும்ப வருமானம் கொண்டவர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு மட்டும் இந்த உதவித்தொகை தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

**130.** **படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை உயர்த்தவும், அதற்கான நிபந்தனைகளை தளர்த்தவும் தமிழக அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வழங்கப்படவுள்ள உதவித்தொகை விவரம்:**

| | | |
|---|---|---|
| **1.** | **பத்தாம் வகுப்பில் தோல்வி** | **ரூ.1,000** |
| **2.** | **பத்தாம் வகுப்பில் தேர்ச்சி** | **ரூ.2,000** |
| **3.** | **12ஆம் வகுப்பு தேர்ச்சி** | **ரூ.3,000** |
| **4.** | **பட்டப்படிப்பு முடித்தவர்கள்** | **ரூ.4,000** |
| **5.** | **பட்டமேற்படிப்பு முடித்தவர்கள்** | **ரூ.5,000** |

**131.** **படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை பெறுவதற்கான நிபந்தனைகள் தளர்த்தப்படும். அதன்படி, படித்து முடித்து வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து 3 ஆண்டுகள் நிறைவடைந்த இளைஞர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படும். ஏற்கெனவே 3 ஆண்டுகள் மட்டும் வழங்கப்பட்ட இந்த உதவித்தொகை, இனி 5 ஆண்டுகளுக்கு வழங்கப்படும். இந்த உதவித்தொகை பெறுவதற்கான குடும்ப வருமான வரம்பு ரூ.50 ஆயிரத்திலிருந்து, ரூ.2 லட்சமாக உயர்த்தப்படும்.**

# தொழில்துறை மேம்பாடு

## 39. தொழில் முதலீடுகள் குறித்து வெள்ளை அறிக்கை

132. தமிழ்நாட்டில் 2015, 2024 ஆகிய ஆண்டுகளில் உலக முதலீட்டாளர் மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளன. இவை தவிர்த்து, ஒவ்வொரு ஆண்டும் இயல்பாகவே பல்லாயிரக் கணக்கில் தொழில் முதலீடுகள் குவிவதாகவும், அவற்றைக் கொண்டு தொடங்கப்பட்ட தொழில் நிறுவனங்களில் லட்சக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படுவதாகவும் அறிவிப்புகள் வெளியிடப்படுகின்றன. ஆனால், உண்மை நிலை யாருக்கும் தெரியாது.

133. தமிழ்நாட்டிற்கு வந்த தொழில் முதலீடுகள், அதனால் ஏற்பட்ட பயன்கள் குறித்து மக்கள் அறிந்துகொள்ள வசதியாக ஆண்டுதோறும் வெள்ளையறிக்கை வெளியிட தமிழக அரசு முடிவு செய்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் தொழில் முதலீட்டுக்காக செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின் எண்ணிக்கை, தொழில் முதலீட்டின் மதிப்பு, அவற்றில் எந்த அளவுக்கு முதலீடு செய்யப்பட்டிருக்கிறது? எந்தெந்த நிறுவனங்களில் எத்தனை பேருக்கு வேலை வழங்கப்பட்டுள்ளது? அவர்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு பேர்? பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு பேர்? என்பது குறித்த விவரங்கள் இடம்பெறும்.

## 40. தொழில் முதலீட்டை ஈர்க்க சிறப்புத் திட்டம்

134. பாட்டாளி மக்கள் கட்சி ஆட்சிக்கு வந்தால், தமிழ்நாடு 5 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலமும் தனித் தனி பொருளாதார ஆணையரகங்களாக அறிவிக்கப்படும் என்றும், அதன் மூலம் தமிழ்நாட்டிற்கு அதிக முதலீட்டை ஈர்க்கமுடியும் என்றும், சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பா.ம.க. தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது.

135. தமிழ்நாட்டில் தொழில்முதலீட்டை ஈர்க்கும் வகையில், தமிழகம் 5 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலமும் தனித்தனிப் பொருளாதார ஆணையரகங்களாக அறிவிக்கப்படும். ஒவ்வொரு மண்டலத்திலும் தலைமைச் செயலாளர் நிலையில் உள்ள அதிகாரி ஒருவர் பொருளாதார ஆணையர்களாக நியமிக்கப்படுவர். மண்டல அளவில் பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்வதுதான் இந்த ஆணையரகங்களின் பணிகளாகும்.

136. ஒவ்வொரு மண்டலத்திலும் உள்ள இயற்கை வளங்கள், தொழில் முதலீட்டு வாய்ப்புகள் ஆகியவற்றைக் கண்டறிந்து, அதற்கேற்ற வகையில் புதிய தொழில்களைத் தொடங்குதல், அதற்கான முதலீட்டை வெளிநாடுகளில் இருந்தும், வெளி மாநிலங்களில் இருந்தும் ஈர்த்தல் ஆகிய பணிகளில் இந்த அமைப்பு ஈடுபடும்.

137. இந்தப் பணிகளில் மண்டலப் பொருளாதார ஆணையர்களுக்கு உதவுவதற்காக, அரசு அதிகாரிகள் மற்றும் அந்த மண்டலத்தைச் சேர்ந்த தொழிலதிபர்கள் உள்ளடக்கிய ஆலோசனை அமைப்பு உருவாக்கப்படும். உலக அளவில் ஏற்படும் தொழில்முறை முன்னேற்றங்கள் குறித்து ஆய்வு செய்து அவற்றை தமிழ்நாட்டில் செயல்படுத்துவதற்கான வாய்ப்புகள் பற்றி அரசுக்கு இந்த அமைப்பு பரிந்துரைக்கும்.

## 41. தமிழகம் – 5 இடங்களில் ஒருங்கிணைந்த தொழில் மண்டலங்கள்

138. இந்தியாவின் தொழில்வளர்ச்சி பெற்ற மாநிலங்களில் ஒன்றாக தமிழகம் திகழும் போதிலும், தொழில் நிறுவனங்கள் சென்னை மற்றும் அதையொட்டிய பகுதிகளில் மட்டுமே உள்ளன. தமிழகத்தின் பரவலான வளர்ச்சியை உறுதி செய்ய அனைத்துப் பகுதிகளிலும் தொழில் மண்டலங்கள் உருவாக்கப்படவேண்டியது மிகவும் அவசியமாகும். இதற்காக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் 5 ஒருங்கிணைந்த தொழில் மண்டலங்கள் அமைக்கப்படும்.

**139. தமிழ்நாட்டில் திருபெரும்பதூர் முதல் கும்மிடிப்பூண்டி வரையிலான பகுதிகள் சிறப்புப் பொருளாதார மண்டலங்களாக உருவெடுத்துள்ளன. இப்பகுதியையொட்டிய ஆந்திர மாநிலத்தின் ஸ்ரீசிட்டியும் சிறப்புப் பொருளாதார மண்டலமாக உருவெடுத்துள்ளது. அதேபோல், வேலூர் மாவட்டத்தையொட்டிய இருமாநில எல்லைகளிலும் புதிய தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இரு மாநில எல்லைகளிலும் உள்ள தொழில் பகுதிகளை இணைத்து ஒருங்கிணைந்த தொழில்மண்டலம் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.**

**140. இதுதவிர, தமிழகத்தின் கிழக்கு மேற்கு, வடக்கு, தெற்கு மண்டலங்களில் தலா ஒரு ஒருங்கிணைந்த தொழில் மண்டலம் அமைக்கப்படும். ஒவ்வொரு மண்டலமும் 5,000 ஏக்கர் முதல் 8,000 ஏக்கர் வரை பரந்து விரிந்திருக்கும். இதற்காக உழவர்களிடமிருந்து ஒரு ஏக்கர் நிலம் கூட கையகப்படுத்தப்படாது. ஏற்கெனவே உள்ள அரசுக்குச் சொந்தமான நிலங்களை மேம்படுத்தி ஒருங்கிணைந்த தொழில் மண்டலங்கள் அமைக்கப்படும்.**

**141. புதிய தொழிற்சாலைகள் அதிக அளவில் ஏற்படுத்தப்படும் பகுதிகளையொட்டி துறைமுகங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.**

**142. சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்சாலைகள்தான் பொருளாதார வளர்ச்சிக்கும், வேலைவாய்ப்புக்கும் அதிக அளவில் பங்களிக்கின்றன. எனவே, இத்தகைய தொழிற்சாலைகளுக்கும், குடிசைத் தொழிலுக்கும் மானியம் உள்ளிட்ட அனைத்து சலுகைகளும் வழங்கப்படும்.**

## 42. 14% ஆண்டுப் பொருளாதார வளர்ச்சி – சிறப்புத் திட்டங்கள்

143. தமிழ்நாட்டில் அடுத்த 5 ஆண்டுகளுக்கு குறைந்தபட்சம் 14% பொருளாதார வளர்ச்சியை எட்டினால் மட்டும் தான் தமிழ்நாட்டில் அடித்தட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும், உள்ளடக்கிய வளர்ச்சியை ஏற்படுத்தவும் முடியும். ஓராண்டோ அல்லது இரு ஆண்டுகளோ ஆண்டுக்கு 14% வளர்ச்சியை எட்டுவது கடினமானதாக இருக்காது. ஆனால், அடுத்தடுத்து தொடர்ந்து 5 ஆண்டுகள் 14% பொருளாதார வளர்ச்சியை அடைவது மிகவும் கடினமான இலக்குதான். அந்த இலக்கை அடைய பல்வேறு புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

**144. தமிழ்நாட்டில் ஆண்டுக்கு குறைந்தது 1 லட்சம் கோடி என்ற அளவில் அடுத்த 5 ஆண்டுகளில் 5 லட்சம் கோடி ரூபாய் தொழில் முதலீடு ஈர்க்கப்படும். இதற்காக தனி ஆணையம் உருவாக்கப்படும்.**

**145.** **தமிழ்நாட்டில் மொத்தம் 5 இடங்களில் ஆயத்த ஆடை பூங்காக்கள் அமைக்கப்படும்.**

**146.** **திருப்பூர் உட்பட தமிழ்நாடு முழுவதும் உள்ள ஆயத்த ஆடை தயாரிப்பு மண்டலங்களில் இருந்து வெளிநாடுகளுக்கு செய்யப்படும் ஏற்றுமதி அளவை அடுத்த 5 ஆண்டுகளில் இரட்டிப்பாக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக ஆயத்த ஆடை நிறுவனங்களுக்கு பல்வேறு ஊக்குவிப்பு சலுகைகள் வழங்கப்படும்.**

**147.** **நான்காம் தொழில் புரட்சியை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு தமிழ்நாட்டில் இண்டர்நெட் ஆஃப் திங்ஸ்** (Internet of Things), **செயற்கை அறிவுத் திறன்** (Artificial Intelligence), **மெய்நிகர் மற்றும் ஆகுமெண்டட் ரியாலிட்டி** (Virtual Augmented Reality) **உள்ளிட்ட மேம்பட்ட தொழில்நுட்பங்களின் பயன்பாடும், அவற்றின் சேவை ஏற்றுமதியும் ஊக்குவிக்கப்படும். இதன் மூலம் ஏற்றுமதி பெருகுவதுடன் தமிழ்நாட்டிற்கு மிகப் பெரிய அளவில் அந்நிய செலாவணியும் கிடைக்கும்.**

## 43. ஒரு கோடி பேருக்கு வேலைவாய்ப்பு

**148.** தமிழ்நாட்டில் 31.12.2023 அன்றைய நிலவரப்படி 64,13,675 பேர் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துவிட்டு வேலைக்காக காத்திருக்கிறார்கள். இவர்கள் தவிர, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்யாமல், 50 லட்சத்திற்கும் மேற்பட்டோர் வேலைவாய்ப்புக்காக காத்திருக்கின்றனர். படித்த இளைஞர்களுக்கு வேலை வழங்க வேண்டியது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் கடமை என்று இந்த அரசு கருதுகிறது. அவர்களுக்கு வேலைவழங்கும் நோக்குடன் அடுத்த 5 ஆண்டுகளில் ஒரு கோடி வேலைவாய்ப்புகளை உருவாக்க தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது. அதற்காக, கீழ்க்கண்டவாறு சிறப்புத்திட்டம் ஒன்றை தமிழக அரசு செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1. **சர்வதேச தளவாடக் கிடங்கு மையம்** (International Warehousing Hub): **தமிழ்நாட்டில் உள்ள 6 பெரிய துறைமுகங்கள் மற்றும் 20 சிறிய துறைமுகங்களை இணைத்து தமிழகம் உலகின் தளவாடக் கிடங்கு மையமாக மாற்றப்படும். துறைமுக நகரங்கள் அனைத்திலும் அனைத்து வசதிகளும் கொண்ட கிடங்குகள் ஆயிரக்கணக்கில் உருவாக்கப்படும். இதனால், இந்தியாவிலிருந்து ஏற்றுமதி அதிகரிக்கும். இத்தகைய நடவடிக்கைகள் மூலம் நேரடியாகவும் மறைமுகமாகவும் 10 லட்சம் பேருக்கு வேலை கிடைப்பது உறுதிசெய்யப்படும்.**

2. **வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்து சென்னையில் புதிய தொழிற்சாலைகள் அமைக்கப்படும். கோவை மற்றும் திருப்பூரில் ஆடை சார்ந்த தொழில்களும், நீலகிரி, கன்னியாகுமரி, திண்டுக்கல், நாமக்கல், தஞ்சாவூர் உள்ளிட்ட மாவட்டங்களில் சுற்றுலா சார்ந்த தொழில்களும் ஏற்படுத்தப்படும். இதன் மூலம் 2 லட்சம் பேருக்கு வேலை கிடைக்கும்.**

3. **உலக மருத்துவ கவனிப்பு மையமாக தமிழகத்தை மாற்றுதல், சென்னை, கோவை உள்ளிட்ட நகரங்களை மருத்துவச் சுற்றுலா நகரங்களாக மாற்றுதல், மருத்துவம் சார்ந்த அயல்பணி வணிக மையமாக** (Health Care BPO) **தமிழகத்தை மாற்றுதல், தமிழகத்தில் அதிக எண்ணிக்கையில் செவிலியர் பயிற்சிக் கல்லூரிகளை அமைத்து**

**பயிற்சிபெற்ற செவிலியர்களை வெளிநாடுகளுக்கு வேலைக்கு அனுப்புதல் ஆகியவற்றின் மூலம் ஐந்து ஆண்டுகளில் நேரடியாகவும், மறைமுகமாகவும் 20 லட்சம் பேருக்கு வேலைவழங்கப்படும்.**

4. **தமிழ்நாட்டில் இருந்து பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியை இரட்டிப்பாக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதன்மூலம் தகவல்தொழில்நுட்பம், சுற்றுலா, ஆடை தயாரிப்பு உள்ளிட்ட பொருட்கள் மற்றும் சேவைத்துறை மூலம் பல லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கமுடியும்.**

5. **படித்த இளைஞர்களில் சுயதொழில் தொடங்க விருப்பம் உள்ளவர்கள் தாங்கள் தொடங்கவுள்ள தொழிலுக்கான திட்ட அறிக்கை மற்றும் அதற்குத் தேவைப்படும் முதலீடுகள் குறித்த விவரங்களுடன் விண்ணப்பித்தால், அவர்களுக்கு பொதுத்துறை வங்கிகள் மூலம் ரூ.5 லட்சம் வரை கடன் பெற்றுத் தர வழிவகை செய்யப்படும்.**

6. **இவை தவிர, வேளாண் துறையில் சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் 5 ஆண்டுகளில் 50 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படவுள்ளன.**

**ஒரு கோடி பேருக்கு வேலைவாய்ப்பு உருவாக்கித் தருவதற்கான இந்தப் பணிகளை மேற்கொள்ள தனி துறை உருவாக்கப்படும். இத்துறை முதலமைச்சரின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கும். இத்துறைக்கான அலுவலகங்கள் மற்றும் கட்டமைப்புகளை ஏற்படுத்துவதற்காக தொடரா செலவினமாக** (Non Recurring Expenditure) **ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.**

## 44. பொதுத்துறை நிறுவனங்களுக்கு புத்துயிர் – பங்குச் சந்தையில் பட்டியலிடப்படும்

149. வரிகள் மீதான மாநில அரசின் அதிகாரம் தளர்ந்து வரும் சூழலில், வரிகள் அல்லாத வருவாயை அதிகரிக்கவும், வலுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. மாநில அரசைப் பொறுத்தவரை வரி அல்லாத வருவாய் ஆதாரங்களாக திகழ்பவை பொதுத்துறை நிறுவனங்கள்தான். ஆனால், தமிழகத்தில் உள்ள பொதுத்துறை நிறுவனங்களில் 90% நஷ்டத்தில் இயங்குகின்றன.

150. பொதுத்துறை நிறுவனங்களை வலுப்படுத்தி, இலாபத்தில் இயங்கச் செய்வதன் மூலமாக மட்டுமே மாநில அரசின் வரி வருவாயைப் பெருக்க முடியும். இதைக் கருத்தில் கொண்டு, பொதுத்துறை நிறுவனங்கள் வலுப்படுத்தப்படும். அந்த நிறுவனங்களின் செயல்பாடுகள் வெளிப்படையாக அமைவதை உறுதி செய்யும் வகையில், பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகள் பங்குச் சந்தையில் பட்டியல் இடப்படும். இதனால், பொதுத்துறை நிறுவனங்களின் மீதான கண்காணிப்பு அதிகரிக்கும். காலப்போக்கில் பொதுத்துறை நிறுவனங்கள் குறிப்பிடத்தக்க வகையில் இலாபம் ஈட்டத்தொடங்கும். அது தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவியாக இருக்கும்.

# பள்ளிக்கல்வித் துறை

## 45. அரசுப் பள்ளிகளை மேம்படுத்த புதிய இயக்கம்

151. அம்பானி போன்ற மிகப்பெரிய பணக்காரர்களின் குழந்தைகளுக்கு கிடைக்கும் அதே தரத்திலான கல்வி, அடித்தட்டு மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதுதான் பா.ம.க. நிறுவனர் மருத்துவர் அய்யா அவர்களின் குறிக்கோளாகும். இந்த குறிக்கோளை நிறைவேற்றும் வகையில், அனைவருக்கும் கட்டாயக் கல்வி, கட்டணமில்லாக் கல்வி, தரமான கல்வி, சுகமான, சுமையற்ற கல்வி, விளையாட்டுடன் கூடிய கல்வி வழங்கப்படும்.

**152. அதற்கேற்ற வகையில், அரசுப் பள்ளிகளின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக புதிய சிறப்பு இயக்கம் ஒன்று ஏற்படுத்தப்படும். அதன் தலைவராக, செயலாளர் நிலையிலான அதிகாரி ஒருவர் அமர்த்தப்படுவார். கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக மாநிலத்தின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பில் 1% நிதி ஒதுக்கீடு செய்யப்படும். 2024–25ஆம் ஆண்டில் அரசுப் பள்ளிகளை மேம்படுத்த ரூ.32,000 கோடி ஒதுக்கப்படும்.**

**மாதிரிப் பள்ளிகள்**

153. தமிழ்நாட்டில் மாவட்டத்திற்கு குறைந்தபட்சம் 25 பள்ளிகள் வீதம் தமிழகம் முழுவதும் 1,000 பள்ளிகள் மாதிரிப் பள்ளிகளாக மாற்றப்படும். இந்தப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை இருக்கும். அதிநவீன வசதிகளுடன் இப்பள்ளிகளில் பாடம் நடத்தப்படும். கற்றல் என்பது சுகமான அனுபவமாக அமைய இப்பள்ளிகள் உதவும்.

**154. மத்திய இடைநிலைக் கல்வி வாரிய (சி.பி.எஸ்.இ.) பாடத்திட்டத்தைவிட சிறப்பானதாக தமிழ்நாடு மாநிலப் பாடத்திட்டம் வலுப்படுத்தப்படும். அதற்காக வல்லுநர் குழு அமைக்கப்படும்.**

**155. தமிழகத்தில் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகளும் மத்திய அரசின் கேந்திரிய வித்யாலயா பள்ளிகளுக்கு இணையாக தரம் உயர்த்தப்படும். ஒவ்வொரு மாணவருக்கும் கல்வி வழங்க ஆண்டுக்கு ரூ.37,500 செலவிடப்படும்.**

156. தமிழ்நாட்டில் ஆசிரியர்கள், கடைநிலைப் பணியாளர்கள் முதல் மாவட்ட ஆட்சியர்கள், அரசுத்துறை செயலாளர்கள் வரையிலான அனைத்து அரசு ஊழியர்களும் அவர்களின் குழந்தைகளை அரசுப் பள்ளியில் சேர்த்து படிக்க வைப்பது ஊக்குவிக்கப்படும்.

## 46. பள்ளிக் கல்வித்துறை: ரூ.1.25 லட்சம் கோடி நிதி

157. இந்தியாவில் அனைவருக்கும் தரமான கல்வி வழங்குவது குறித்து பரிந்துரைப்பதற்காக அமைக்கப்பட்ட கோத்தாரி ஆணையம் கல்விக்காக நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பில் 6% செலவிடப்பட வேண்டும் என்று 1966 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29ஆம் தேதி தாக்கல் செய்த அறிக்கையில் பரிந்துரைத்திருந்தது. அதன்படி, தமிழ்நாட்டில் கல்விக்காக நடப்பாண்டில் ரூ.1.92 லட்சம் கோடி செலவிடப்பட வேண்டும். ஆனால், 2023 – 24 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் தமிழக அரசு பள்ளிக் கல்வித்துறைக்காக ரூ.40,299 கோடி ஒதுக்கீடு செய்தது. நடப்பாண்டில் தமிழக அரசு ரூ.45,000 கோடி ஒதுக்குவதாக வைத்துக் கொண்டாலும்கூட, அது மாநிலத்தின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பில் 1.5 விழுக்காட்டுக்கும் குறைவாகவே இருக்கும். இது போதுமானது அல்ல.

இதன் மூலம் அனைவருக்கும் தரமான கல்வி என்ற இலக்கை இன்னும் பல ஆண்டுகள் ஆனாலும் எட்ட முடியாது.

158. கல்வி சிறந்த தமிழ்நாடு என்பது தான் தேசியகவி பாரதியாரின் கனவு ஆகும். ஆனால், கல்விக்கு போதிய நிதி ஒதுக்கப்படாத சூழலில், பாரதியின் கனவு, கனவாகவே முடிந்துவிடுமோ என்ற கவலை பிறக்கிறது. இதைப் போக்க பள்ளிக் கல்விக்காக ஒதுக்கப்படும் நிதியின் அளவு கணிசமாக உயர்த்தப்பட வேண்டும் என பா.ம.க. விரும்புகிறது.

159. **கோத்தாரி ஆணையத்தின்படி, கல்விக்காக 6% என்றால், பள்ளிக் கல்விக்காக மட்டும் குறைந்தது 5%, அதாவது ரூ.1.60 லட்சம் கோடி நிதி ஒதுக்கப்பட வேண்டும். இன்றைய நிதிச்சூழலில் அது சாத்தியமல்ல என்பதை பா.ம.க. உணர்ந்திருக்கிறது. எனினும், கோத்தாரி ஆணையத்தின் பரிந்துரைகளை செயல்படுத்தும் இலக்கை நோக்கி பயணிப்பதற்காக 2024–25ஆம் ஆண்டில் பள்ளிக் கல்விக்கு மட்டும் ரூ.1.25 லட்சம் கோடி நிதி ஒதுக்கப்படுகிறது. இது கடந்த ஆண்டின் நிதி ஒதுக்கீட்டைவிட, ஏறக்குறைய 3 மடங்கு ஆகும்.**

160. **தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கான கல்விக் கட்டணத்தையும் அரசே செலுத்தும். இதற்கு வசதியாக பள்ளிக் கல்வித்துறைக்கான நிதிஒதுக்கீடு இருமடங்காக உயர்த்தப்படும்.**

**அருகமைப் பள்ளிகள் – மாணவர் சேர்க்கை**

161. கோத்தாரி ஆணையத்தின் பரிந்துரைகளில் முக்கியமானது அருகமைப் பள்ளி முறையாகும். தமிழ்நாட்டில் அருகமைப் பள்ளி முறை அறிமுகப்படுத்தப்படும். அதன்படி, மாநில பாடத்திட்ட பள்ளிகளில் பயில விரும்பும் மாணவர்கள், தங்களின் விருப்பத்தை அதற்கென பள்ளிக் கல்வித்துறை சார்பில் உருவாக்கப்படவிருக்கும் இணையதளத்தில் பதிவு செய்து கொண்டால், அவர்களின் குழந்தைகளுக்கு வீட்டிற்கு அருகில் உள்ள பள்ளியில் தானாக மாணவர் சேர்க்கை வழங்கப்படும். இதற்காக, எந்தப் பெற்றோரும் எந்தப் பள்ளியிலும் தனியாக விண்ணப்பிக்கத் தேவையில்லை.

162. மாணவர்கள் பள்ளிகளுக்கு எளிதாகச் சென்றுவர வசதியாக, ‘‘மாணவர்கள் மட்டும்’’ பேருந்துகள் இயக்கப்படும்.

163. தேசிய அளவிலான நுழைவுத் தேர்வுகளை எதிர்கொள்ள வசதியாக 9ஆம் வகுப்பிலிருந்தே சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும்.

164. அனைத்து வகுப்புகளிலும் வாரத்திற்கு இரண்டு பாடவேளை நீதிபோதனை வகுப்புகள் நடத்தப்படுவது கட்டாயமாக்கப்படும். பெண் குழந்தைகளின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு தமிழர்களின் மரபு சார்ந்த தற்காப்புக் கலைகள் கற்றுத்தரப்படும்.

## 47. பள்ளி கல்வி வளர்ச்சிக்கு தனி நிதியம்

165. **தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வி கட்டமைப்புகளை வலுப்படுத்துவதற்கும், அடிப்படை தேவைகளை நிறைவேற்றுவதற்கும் தேவையான நிதியை முழுக்க முழுக்க அரசே ஒதுக்கீடு செய்வது இன்றைய சூழலில் சாத்தியமானது அல்ல. பள்ளிக் கல்விக்கு ஒதுக்கப்படும் நிதியைக்கொண்டு பள்ளிகளின் தேவைகளை நிறைவேற்ற முடியாது.**

**166. எனவே, பள்ளிக் கல்வித்துறை வளர்ச்சிக்காக சமூக அக்கறை கொண்ட தொழில் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களிடம் இருந்து நிதிதிரட்ட தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக முதலமைச்சரின் பொதுநிவாரண நிதியைப் போன்று, தனி நிதியம் ஏற்படுத்தப்படும். இதற்கு "தமிழ்நாடு முதலமைச்சரின் கல்வி வளர்ச்சி நிதி" என பெயரிடப்படும். விருப்பம் உள்ளவர்கள் இந்த நிதிக்கு நன்கொடை வழங்கலாம். பள்ளிகள் சீரமைப்பு, தரம் உயர்த்துதல் உள்ளிட்ட கல்வி வளர்ச்சிப் பணிகளுக்காக இந்த நிதி செலவிடப்படும்.**

# உயர்கல்வி

## 48. பல்கலைக் கழகங்கள் சீரமைப்பு – மேம்பாட்டுத் திட்டம்

167. தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக் கழகங்களை சீரமைக்கும் வகையிலும், ஊழல் குற்றச்சாட்டுகளை தவிர்க்கும் வகையிலும் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

1. பல்கலைக் கழக பணியாளர் நியமனங்கள், கட்டுமான மற்றும் கொள்முதல் ஒப்பந்தங்களை வழங்கும் அதிகாரம் ஆகியவை துணை வேந்தர்களிடம் இருந்து பறிக்கப்படும்.
2. உயர் கல்வி வளர்ச்சிக்கான திட்டங்களை வகுத்து செயல்படுத்துவது மட்டும்தான் துணை வேந்தர்களின் முதன்மைப் பணியாக இருக்கும்.
3. பல்கலைக் கழக ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்களை தேர்வு செய்து நியமிக்க அப்பழுக்கற்ற கல்வியாளர்களைக் கொண்ட ஆணையம் அமைக்கப்படும்.
4. பல்கலைக்கழக கட்டுமானங்கள் தமிழக அரசின் பொதுப்பணித்துறை மூலம் நேரடியாக மேற்கொள்ளப்படும். இதற்காக பொதுப்பணித்துறையில் பல்கலைக்கழக கட்டுமானங்கள் என்ற தனிப்பிரிவு ஏற்படுத்தப்படும்.
5. பல்கலைக் கழகங்களுக்கான தளவாடங்கள், எழுதுபொருட்கள் உள்ளிட்ட அனைத்தும் தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து திறந்தநிலை ஒப்பந்தப் புள்ளிகள் மூலமாக மட்டுமே கொள்முதல் செய்யப்படவேண்டும்.

**பல்கலைக் கழக மேம்பாடு**

168. உயர்கல்வி மாணவர் சேர்க்கை விகிதத்தில் தமிழகம் முதலிடத்தில் இருந்தாலும், தமிழகத்தில் உள்ள பல்கலைக் கழகங்களில் வழங்கப்படும் கல்வி தரமானதாக இல்லை. இந்நிலையை மாற்றி, அனைத்துப் பல்கலைக் கழகங்களும் உலகத் தரம் கொண்டவையாக மாற்றப்படும். இதன் மூலம் தமிழக மாணவர்கள் வெளிநாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் சேர்ந்து படித்த நிலைமை மாறி, வெளிநாடுகளைச் சேர்ந்த மாணவர்கள், தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களில் சேர்ந்து பயிலும் நிலை உருவாக்கப்படும்.

169. பல்கலைக் கழகங்களில் நடந்த ஊழல்கள் காரணமாக அவற்றின் நிதிநிலை மிகவும் மோசமடைந்துள்ளது. 10 ஆண்டுகளுக்கு முன் அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் பல நூறு கோடி ரூபாய் தொகுப்பு நிதியாக இருந்த நிலை மாறி, இன்று பல பல்கலைக் கழகங்கள் கடனில் சிக்கித் தவிக்கின்றன. வேறுசில பல்கலைக் கழகங்களில் சில லட்சங்களில்தான் நிதி உள்ளது. பல்கலைக் கழகங்களுக்கான நிதியுதவியை பல்கலைக்

கழக மானியக் குழு படிப்படியாக குறைத்து வருகிறது. இதே நிலை நீடித்தால் அடுத்த சில ஆண்டுகளில் தமிழக பல்கலைக் கழகங்களில் ஊதியம் வழங்கக்கூட நிதி இருக்காது.

170. **பல்கலைக் கழகங்களின் வருவாயைப் பெருக்குவதற்காக கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள தமிழக அரசு முடிவு செய்துள்ளது. அவற்றின் விவரம் வருமாறு:**

1. **தொலைநிலை கல்விமுறை சீரமைக்கப்பட்டு வலுப்படுத்தப்படும்.**
2. **பல்கலைக் கழகங்களில் சமூகத்திற்கு பயனுள்ள ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு அவற்றிற்கான காப்புரிமை பெறுவதன் மூலம் பல்கலைக் கழகங்களுக்கு வருவாய் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.**
3. **அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் வெளிநாடு வாழ் இந்தியப் பிரிவு உருவாக்கப்படும். பல்கலைக் கழகங்களில் கூடுதலாக 20% இடங்கள் ஏற்படுத்தப்பட்டு அது வெளிநாடு வாழ் இந்தியர் பிரிவுக்கு ஒதுக்கப்படும். இப்பிரிவில் சேரும் மாணவர்களிடம் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படும்.**

## 49. உயர்கல்வி தரம் மேம்படுத்தப்படும்

171. உயர்கல்வி மாணவர் சேர்க்கை விகிதத்தில் தமிழ்நாடு இந்தியாவின் முதன்மை மாநிலமாகத் திகழும்போதிலும், கல்வித்தரம் என்பது கவலையளிப்பதாக உள்ளது. குறிப்பாக பொறியியல் படிப்பு பயிலும் மாணவர்களில் 70 விழுக்காட்டிற்கும் அதிகமானோர் வேலை பெறும் தகுதியற்றவர்களாக உள்ளனர் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பொறியியல் மாணவர்களின் வேலைவாய்ப்புக்காக நடத்தப்படும் பொறியியல் பட்டதாரிகளின் தகுதிகாண் தேர்வின் (Graduate Aptitude Test in Engineering - GATE) தேர்ச்சி விகிதத்தில் தமிழகம் தான் கடைசி இடத்தில் உள்ளது. இந்த நிலையை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

172. உயர் கல்வியின் தரத்தை உயர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். அனைத்து கல்லூரிகளிலும் இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட தகுதி உள்ளவர்கள் மட்டுமே ஆசிரியர்களாக நியமிக்கப்படுவதை, தமிழக அரசின் தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகம் உறுதி செய்யும்.

173. தமிழ்நாட்டில் உயர் கல்வியில் சேரும் மாணவர்கள் விகிதம் 51.4 விழுக்காடாக அதிகரித்துள்ளது. இதன் மூலம், பெரிய மாநிலங்களில் உயர்கல்வி கற்போர் விழுக்காட்டில் தமிழ்நாடு முதலிடத்தைப் பிடித்துள்ளது. அடுத்தக்கட்டமாக 2025–க்குள் தமிழ்நாட்டின் உயர்கல்வி மாணவர் சேர்க்கை விகிதத்தை 55% ஆக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

174. அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் தமிழ் ஆராய்ச்சிக்கான இருக்கைகள் தொடங்கப்படும்.

175. கடுமையான நிதிநெருக்கடியில் சிக்கித்தவிக்கும் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக் கழகத்திற்கு உதவும் வகையில் ஒருமுறை நிதி உதவியாக ரூ.1,000 கோடி வழங்கப்படுகிறது.

## 50. மருத்துவத்துறை – ரூ.48,000 கோடி நிதிஒதுக்கீடு

176. **குடியரசுத் தலைவருக்கும், பிரதமருக்கும் கிடைக்கும் அதே தரத்திலான மருத்துவம், தமிழகத்தின் கடைசி குடிமகனுக்கும் கிடைக்கவேண்டும் என்பதுதான் பாட்டாளி மக்கள்**

**கட்சியின் நிறுவனர் மருத்துவர் அய்யா அவர்களின் நோக்கமாகும். இந்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையில், அரசு மருத்துவக் கட்டமைப்புகள் மேம்படுத்தப்படும்.**

**177. தமிழ்நாட்டில் அனைத்து மருத்துவமனைகளிலும் உலகத் தரம் வாய்ந்த மருத்துவ சிகிச்சை இலவசமாக வழங்கப்படும். இதற்கு வசதியாக, தமிழகத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், மாவட்ட மருத்துவமனைகள் தரம் உயர்த்தப்படும்.**

**மருத்துவ ஸ்மார்ட் அட்டை**

**178. தமிழ்நாட்டில் நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலம் அந்தந்தப் பகுதிகளில் உள்ளவர்களுக்கு முழுமையான மருத்துவ ஆய்வு மேற்கொள்ளப்படும். ஒவ்வொருவரின் உடல்நிலை குறித்த விவரங்கள் மருத்துவ ஸ்மார்ட் அட்டையில்** (Health Smart Card) **பதிவு செய்யப்பட்டு அவர்களுக்கு வழங்கப்படும்.**

**179. தமிழ்நாட்டு மக்களின் உடல்நிலை குறித்த விவரங்களை பதிவு செய்ய மருத்துவ தகவல் மேலாண்மை அமைப்பு** (Health Management Information System - HMIS) **என்ற புதிய கட்டமைப்பு உருவாக்கப்படும். பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள மருத்துவ ஸ்மார்ட் அட்டையை தமிழ்நாட்டில் உள்ள எந்த மருத்துவரிடம் காட்டினாலும், அவர் அதன் மூலம் சம்பந்தப்பட்டோரின் உடல்நிலை குறித்த வரலாற்றை அறிந்துகொண்டு அவருக்கு தேவையான மருத்துவம் அளிக்க முடியும்.**

**180. மருத்துவர் அன்புமணி இராமதாசு அவர்களின் சீரிய முயற்சியால், தேசிய அளவில் தொடங்கப்பட்ட 108 அவசர ஊர்தித் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 31.12.2022 அன்றைய நிலவரப்படி, 1353 அவசர ஊர்திகள் செயல்படுகின்றன. இவற்றுக்கான தேவை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, இவற்றின் எண்ணிக்கை 2024–2025 ஆம் ஆண்டில் 2,000ஆக உயர்த்தப்படும்.**

**181. குடியரசுத் தலைவருக்கு இணையான மருத்துவம், அனைத்துக் குடிமக்களுக்கு வழங்கப்படுவதை உறுதி செய்யும் வகையில், மருத்துவ கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்காக, சுகாதாரத்துறைக்கான நிதி ஒதுக்கீடு 2024–25ஆம் ஆண்டில் ரூ.48,000 கோடியாக உயர்த்தப்படும். இது தமிழகத்தின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பில் 1.5 விழுக்காடு ஆகும். இது கடந்த ஆண்டில் மருத்துவத் துறைக்கு ஒதுக்கப்பட்ட ரூ.18,661 கோடியைவிட, கிட்டத்தட்ட மும்மடங்கு ஆகும்.**

**6 மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள்:**
**11 மாவட்டங்களில் புதிய செவிலியர் கல்லூரிகள்**

**182.** புதிய மருத்துவக் கல்லூரியும் சேர்த்து தமிழகத்தில் மொத்தம் உள்ள 38 மாவட்டங்களில் 32 மாவட்டங்களில் 36 மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. இதன் மூலம், இந்தியாவிலேயே அதிக மருத்துவக் கல்லூரிகளைக் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு உருவெடுத்துள்ளது.

**183. தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், பெரம்பலூர், மயிலாடுதுறை, தென்காசி ஆகிய 6 மாவட்டங்களில் தான் மருத்துவக் கல்லூரிகள் இல்லை. இந்த மாவட்டங்களிலும் அடுத்த 3 ஆண்டுகளில் மருத்துவக் கல்லூரிகள் அமைக்க ஆணைகள் பிறப்பிக்கப்படும். முதல்கட்டமாக நடப்பாண்டில் மயிலாடுதுறை, திருப்பத்தூர் மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரிகள் அமைக்கப்படும். இதற்காக ரூ.600 கோடி நிதி ஒதுக்கப்படுகிறது.**

**184.** **மத்திய அரசின் நிதியுதவியுடன் கடந்த 2021–22ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 11 புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. புதிதாக தொடங்கப்பட்ட மருத்துவக் கல்லூரிகளில் செவிலியர் கல்லூரிகள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது. அதன்படி, மத்திய அரசின் உதவியைப் பெற்று, 11 புதிய மருத்துவக் கல்லூரிகளிலும் செவிலியர்கள் கல்லூரிகள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.**

**185.** **விழுப்புரத்தில் சித்த மருத்துவக் கல்லூரி தொடங்கப்படும்.**

## 51. ஆண்டுக்கு 100 நாட்கள் சட்டப்பேரவைக் கூட்டம்

186. ஜனநாயகம் தழைக்கும் தொட்டில் என்பது நாடாளுமன்றமும், சட்டமன்றங்களும் தான். இந்திய ஜனநாயகத்தின் 3 தூண்களில் முதலாவது தூணாக கருதப்படுவதும் இவைதான். சட்டப்பேரவைகளும், நாடாளுமன்ற அவைகளும் அதிக நாட்கள் செயல்படும் போதுதான் மக்கள் நலன் குறித்த சிக்கல்கள் அதிகளவில் விவாதிக்கப்பட்டு தீர்வு காணப்படும். ஆனால், நாடாளுமன்றம் ஒவ்வொரு ஆண்டும் நிதிநிலை அறிக்கை தாக்கல் மற்றும் விவாதத்திற்காக இருமுறை, மழைக்காலக் கூட்டத்தொடர், குளிர்காலக் கூட்டத்தொடர் என 4 முறை கூடுகிறது. ஆனால், சட்டப்பேரவை ஆண்டுக்கு இருமுறை மட்டுமே கூடுகிறது. அதிலும், 2வது கூட்டம் என்பது 6 மாதங்களுக்கு ஒருமுறை சட்டப்பேரவை கூட வேண்டும் என்ற கட்டாயத்தின் பேரிலேயே நடைபெறுகிறது. அதிகபட்சமாக 5 நாட்கள் நடைபெறும் அக்கூட்டத் தொடரில் பெரிய அளவில் எந்த விவாதமும் நடத்தப்படுவதில்லை.

**187.** **தமிழ்நாடு சட்டப்பேரவை 100 ஆண்டு வரலாறு கொண்டது. இந்தியா விடுதலை அடைந்த பிறகு, 1952ஆம் ஆண்டில் தொடங்கி, 1991 வரையிலான 40 ஆண்டுகளில் தமிழக சட்டப்பேரவை ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 50 முதல் 68 நாட்களுக்கு நடைபெற்றுள்ளன. ஆனால், அதன்பின் 1991ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட 10வது சட்டப்பேரவையில் தொடங்கி, கடந்த ஆண்டில் நிறைவடைந்த 15வது சட்டப்பேரவை வரை ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக அவை கூடும் நாட்கள் முறையே 44.8, 52.8, 37.6, 45.2, 39.4 என குறைந்துவிட்டது. கடைசியாக கடந்த 2020ஆம் ஆண்டில் 23 நாட்களும், 2021ஆம் ஆண்டில் 25 நாட்களும், 2022ஆம் ஆண்டில் 34 நாட்களும், 2023ஆம் ஆண்டில் 29 நாட்களும் மட்டும்தான் தமிழக சட்டப்பேரவை கூடியிருக்கிறது.**

**188.** **70 உறுப்பினர்களுக்கும் மேல் உள்ள சட்டப்பேரவைகள் ஆண்டுக்கு குறைந்தது 90 நாட்கள் கூடவேண்டும் என்று, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை மறுஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட உச்சநீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி எம்.என். வெங்கடாச்சலையா ஆணையம் அறிவுறுத்தி இருக்கிறது. அதன்படி, தமிழக சட்டப்பேரவை குறைந்தது ஆண்டுக்கு 3 முறையும், 100 நாட்களும் கூடி மக்கள் பிரச்சனைகள் குறித்து ஆக்கபூர்வ விவாதம் நடத்துவதை தமிழக அரசு உறுதி செய்யும்.**

## 52. பேருந்துக் கட்டணம் உயர்த்தப்படாது

189. தமிழ்நாட்டில் உள்ள சுமார் 70 பொதுத்துறை நிறுவனங்களில் பாதிக்கும் மேற்பட்டவை நஷ்டத்தில் இயங்கி வருகின்றன. அதன் காரணமாக, அவற்றின் கடன் சுமை ரூ.5 லட்சம் கோடிக்கும் அதிகமாக உயர்ந்திருக்கிறது. குறிப்பாக மின்சார வாரியம், அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் கடன் சுமை மட்டும் ரூ.2 லட்சம் கோடிக்கும் அதிகமாகும். இதிலிருந்து அந்நிறுவனங்களை மீட்க மின்சாரக் கட்டணம், பேருந்துக் கட்டணம்

ஆகியவற்றை உயர்த்த வேண்டும் என்று தமிழக அரசுக்கு பல்வேறு தரப்பிலிருந்து பரிந்துரைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

190. **ஆனால், அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் நிர்வாகத்தை மேம்படுத்துவதன் மூலமாகவோ, முறைகேடுகளை தடுப்பதன் மூலமாகவும் அவற்றை இலாபத்தில் இயக்க முடியும் என்று அரசு நம்புகிறது. எனவே, பேருந்துக் கட்டணம் உயர்த்தப்படாது.**

## 53. தாலிக்கு தங்கம் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும்

191. தமிழ்நாட்டில் ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு உதவும் வகையிலும், ஏழைப் பெண்கள் கல்வி கற்பதை ஊக்குவிக்கும் வகையிலும் செயல்படுத்தப்பட்டு வந்த தாலிக்குத் தங்கம் திட்டம் எனப்படும் மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம் கடந்த ஆண்டு ரத்து செய்யப்பட்டது. இதனால், ஏழைப் பெண்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

192. **ஏழைப் பெண்களின் பாதிப்பைப் போக்கும் வகையில், தாலிக்குத் தங்கம் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்படி, 21 வயதைக் கடந்து திருமணம் செய்துகொள்ளும் அனைத்துப் பெண்களுக்கும் 8 கிராம் தங்கம் வழங்கப்படும். அத்துடன், பட்டப்படிப்பு படித்த பெண்களுக்கு ரூ.50,000 வீதமும், மற்ற பெண்களுக்கு ரூ.25,000 வீதமும் நிதியுதவி வழங்கப்படும்.**

193. **கடந்த ஆண்டு தாலிக்குத் தங்கம் திட்டத்திற்கு மாற்றாக அறிவிக்கப்பட்ட, பட்டப்படிப்பு பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.**

## 54. இடைநிற்றலைத் தடுக்க ரூ.5,000 வரை நிதி

194. தமிழ்நாட்டில் இடைநிற்றல் விகிதம் கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்து வருகிறது. கடந்த ஆண்டு நிலவரப்படி இடைநிற்றல் விகிதம் தொடக்கக் கல்வியில் 0.70%, நடுநிலைக் கல்வியில் 1.30%, உயர்நிலை வகுப்புகளில் 3.30%ஆக உள்ளது. 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்கள் மேல்நிலை வகுப்புகளில் சேர்வது குறைவாகவே உள்ளது. பட்டப்படிப்பில் சேர்ந்து பட்டம் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 51% என்ற அளவிலேயே உள்ளது.

195. **இந்த நிலையை மாற்றி, 12ஆம் வகுப்புவரை இடைநிற்றல் என்பதே இல்லாத நிலையை உருவாக்க வேண்டும் என்று அரசு கருதுகிறது. 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களில் குறைந்தது 60 விழுக்காட்டினராவது உயர் கல்வி கற்பது உறுதி செய்யப்பட வேண்டும். அதற்கு வசதியாக, இடைநிற்றல் தடுப்பு சிறப்பு உதவித் தொகை அறிமுகம் செய்யப்படுகிறது.**

196. **அதன்படி, அரசுப் பள்ளிகளில் படித்து 5ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று ஆறாம் வகுப்பில் சேரும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் ரூ.2,000 இடைநிற்றல் தடுப்பு சிறப்பு உதவித் தொகையாக வழங்கப்படும்.**

197. அதேபோல், 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று 11ஆம் வகுப்பில் சேரும் அனைவருக்கும் ரூ.3 ஆயிரமும், 12ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்று உயர்கல்வியில் சேருவோருக்கு ரூ.5 ஆயிரமும் சிறப்பு உதவித் தொகையாக வழங்கப்படும்.

## 55. தமிழுக்கு முன்னுரிமை: தமிழ் வழியில் படித்தோருக்கு மட்டுமே அரசு வேலை

198. தமிழ்நாட்டில் தமிழ் வழியில் கல்வி கற்பது மரியாதை குறைவான செயலாக பார்க்கப்படுகிறது. பெரும்பான்மையான குழந்தைகள் ஆங்கில வழியிலேயே கல்வி கற்பதால், அவர்களின் சிந்திக்கும் திறன் குறைகிறது. அதனால், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு தடைபடுகிறது.

199. **இந்த நிலையை மாற்றவும், தமிழ் வழியில் கல்வி கற்பதை ஊக்குவிக்கவும் வசதியாக, தமிழ்நாட்டில் இனி தமிழ் வழியில் படித்தவர்களுக்கு மட்டுமே அரசு வேலை வழங்கப்படும். இதன் மூலம் தமிழ்மொழி கற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பது ஒருபுறம் இருக்க, பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் அரசுப் பணியில் சேர்வது தடுக்கப்படும். இதற்கான சட்டம் நடப்பு சட்டப்பேரவை கூட்டத்தொடரில் கொண்டுவந்து நிறைவேற்றப்படும்.**

**தமிழ்வழியில் உயர்கல்வியில் 30% இடஒதுக்கீடு**

200. **தமிழ் வழிக் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் தமிழ் வழியில் படித்தவர்களுக்கு மருத்துவம், பொறியியல், கலை அறிவியல் உள்ளிட்ட அனைத்து உயர் கல்வி மாணவர் சேர்க்கையிலும் 30% தனி இடஒதுக்கீடு வழங்கப்படும். இதற்கான சட்டம் நடப்பு சட்டப்பேரவைக் கூட்டத்தொடரில் நிறைவேற்றப்படும்.**

## 56. புதிய உயர்கல்வி நிறுவனங்கள்

201. சென்னை அண்ணா பல்கலைக் கழகம் உயர் சிறப்பு கல்வி நிறுவனமாக தரம் உயர்த்தப்படும். இதுவரை இணைப்புப் பல்கலைக் கழகமாக செயல்பட்ட அண்ணா பல்கலைக் கழகம், இனி ஒருமை பல்கலைக் கழகமாக செயல்படும். அதே நேரத்தில், மாணவர் சேர்க்கையில் இதுவரை கடைபிடிக்கப்பட்டு வந்த இடஒதுக்கீடு உள்ளிட்ட அனைத்து அம்சங்களும் தொடரும். அண்ணா பல்கலைக் கழகம் – உயர் சிறப்பு கல்வி நிறுவனம் (Anna University - Institute of Eminence) என்ற பெயரிலேயே தொடர்ந்து செயல்படும்.

202. **தமிழ்நாட்டில் உள்ள பொறியியல் கல்லூரிகளை நிர்வகிக்க புதிய அண்ணா பல்கலைக் கழகம் தொடங்கப்படும். அப்பல்கலைக் கழகம் அண்ணா பல்கலைக் கழகம் – இணைப்பு** (Anna University - Affiliation) **என்று அழைக்கப்படும்.**

203. **சென்னைப் பல்கலைக் கழகமும் உயர் சிறப்பு கல்வி நிறுவனமாக தரம் உயர்த்தப்படும்.**

204. **தமிழகத்தில் 6 ஒருமைப் பல்கலைக்கழகங்கள்** (Unitary Universities) **அமைக்கப்படும். ஆராய்ச்சிகளைச் செய்வது மட்டுமே இவற்றின் முதன்மை நோக்கமாக இருக்கும்.**

205. **தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களும் 5 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலத்திலும் ஐஐடிக்கு இணையான ஓர் உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் அமைக்கப்படும். அந்நிறுவனம் தமிழ்நாடு தொழில்நுட்ப நிறுவனம்** (Tamilnadu Institute of Technology - TIT) **என்று அழைக்கப்படும்.**

206. **ஒவ்வொரு மண்டலத்திலும் ஒரு சட்டக்கல்லூரியும், ஒரு வேளாண் கல்லூரியும் அமைக்கப்படும்.**

207. **சென்னையில் இந்திய அறிவியல் கல்வி நிறுவனம்** (IISc) **அமைக்கப்படும்.**

**208.** **கோவையில் இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்** (Indian Institute of Science Education and Research - IISER) **அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். மத்திய அரசிடம் வலியுறுத்தி, ஓராண்டிற்குள் இந்த இரு அறிவியல் உயர் கல்வி நிறுவனங்களும் தொடங்கப்படும்.**

**209.** **அனைத்து மாவட்டங்களிலும் மகளிர் அரசு கலை அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும். முதல்கட்டமாக 2023–24ஆம் ஆண்டில் 10 மாவட்டங்களில் மகளிர் கல்லூரிகள் தொடங்கப்படும்.**

## 57. நகர்ப்புற வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்

**210.** இந்தியாவில் மிக அதிக அளவில் நகரமயமாக்கப்பட்ட மாநிலமாகத் திகழ்வது தமிழகம் தான். தமிழக மக்களின் 54% மக்கள் நகர்ப்புறங்களில் வாழ்கின்றனர். இதற்குக் காரணம் கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பு இல்லாததால் அங்குள்ள மக்கள் வேலைதேடி நகர்ப்புறங்களில் குடியேறியது தான். அவ்வாறு குடியேறியவர்களில் பலர் அடிப்படை வசதிகள் கூட இல்லாத சூழலில்தான் வாழ்ந்து வருகின்றனர்.

**211.** **நகர்ப்புறங்களில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துவிட்டதாக தேசிய மாதிரி கணக்கெடுப்பு அமைப்பு சேகரித்துள்ள தகவல்கள் தமிழ்நாட்டுக்கும் பொருந்தும். நகர்ப்புறங்களில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்தால், வருவாய்க்கு வழியற்ற மக்கள் குற்றச்செயல்களில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. இதைத் தடுக்க வேலைவாய்ப்புகளை அதிகரிக்கவேண்டியது மிகவும் அவசியம் ஆகும்.**

**212.** **இந்தியாவில் கேரளம், ஜார்க்கண்ட், ஹிமாச்சலப்பிரதேசம், ஒதிசா, மத்தியப்பிரதேசம் உள்ளிட்ட பல மாநிலங்களில் நகர்ப்புற வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதைப் பின்பற்றி, தமிழ்நாட்டிலும் நகர்ப்புற வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்படி, நகர்ப்புற ஏழைக் குடும்பங்களுக்கு, முதல்கட்டமாக ஆண்டுக்கு 100 நாட்கள் வேலை வழங்கப்படும்.**

## 58. வலிமையான லோக் அயுக்தா (Lokayukta): விசாரணை வரம்புக்குள் முதலமைச்சர் பதவி

**213.** தமிழ்நாட்டில் 2019ஆம் ஆண்டின் தொடக்கத்தில் லோக் அயுக்தா அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. ஆனால் அந்த அமைப்புக்கு போதிய அதிகாரங்கள் வழங்கப்படாததாலும், அந்த அமைப்புக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டதை எதிர்த்து வழக்குகள் தொடரப்பட்டதாலும் லோக் அயுக்தா அமைப்பு செயல்படாமல் முடங்கிக் கிடக்கிறது. அந்த அமைப்புக்கு புத்துயிரூட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**214.** லோக் அயுக்தா சட்டத்தில் போதிய திருத்தங்கள் செய்யப்பட்டு, லோக் அயுக்தாவை அதிகார வலிமை நிரம்பிய அமைப்பாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கான சட்டதிருத்த முன்வரைவு நடப்பு நிதிநிலை அறிக்கை கூட்டத்தொடரில் கொண்டு வந்து நிறைவேற்றப்படும்.

**215.** லோக் அயுக்தா கீழ்க்கண்ட அதிகாரங்களைக் கொண்டதாக இருக்கும்.

- அ. **லோக் அயுக்தா அமைப்பு, மாநில அரசின் தலையீடு இல்லாத தன்னாட்சி அதிகாரம் கொண்ட அமைப்பாக இருக்கும்.**

ஆ. முதலமைச்சர், அமைச்சர்கள், பிரிவு 1 மற்றும் பிரிவு 2 அதிகாரிகள் ஆகியோர் லோக்அயுக்தா அமைப்பின் அதிகார வரம்பிற்குள் கொண்டுவரப்படுவார்கள்.

இ. தமிழக அரசின் கையூட்டுத் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, லோக் அயுக்தா அமைப்பின் கட்டுப்பாட்டில் செயல்படும்.

ஈ. ஏதேனும் ஒரு துறையில் ஊழல் நடப்பதாக தெரியவந்தால், அதுதொடர்பாக தாமாக முன்வந்து வழக்குப் பதிவு செய்து, விசாரிக்கும் அதிகாரம் லோக் அயுக்தாவுக்கு வழங்கப்படும்.

உ. ஓர் அதிகாரி மீதான ஊழல் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால், அவர் மீது ஊழல் தடுப்புச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

ஊ. லோக்அயுக்தா அமைப்பால் விசாரிக்கப்படும் ஊழல் வழக்குகளில், குறைந்தபட்சம் ஓராண்டு முதல், அதிகபட்சம் வாழ்நாள் சிறைத் தண்டனை வரை விதிக்கப்படும்.

## 59. பொதுச் சேவை பெறும் உரிமைச் சட்டம் (Right to Public Services Act)

216. குடிமக்களுக்கு சேவை வழங்குவதுதான் அரசின் முதல் கடமையாகும். இதை கட்டாயமாக்கும் நோக்குடனும், தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையிலும் பொது சேவைபெறும் உரிமைச் சட்ட முன்வரைவு நடப்புக்கூட்டத் தொடரில் கொண்டு வந்து நிறைவேற்றப்படும். இச்சட்டம் கீழ்க்கண்ட அம்சங்களைக் கொண்டதாக இருக்கும்.

அ. சாதிச்சான்று, பிறப்புச் சான்று, இறப்புச் சான்று, திருமண பதிவுச் சான்று, வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை, நில ஆவணங்களின் நகல்கள், மின்இணைப்பு வழங்குதல், குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு வழங்குதல் ஆகிய சேவைகளை இந்த சட்டத்தின் மூலம் பெறமுடியும்.

ஆ. பொதுமக்கள் கோரும் ஒவ்வொரு சேவையும் எவ்வளவு நாட்களுக்குள் வழங்கப்படவேண்டும் என்பது வரையறுக்கப்படும்.

இ. குறிப்பிட்ட நாட்களுக்குள் சேவை வழங்கப்படாவிட்டால், அதனால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள், முதல்நிலை மேல்முறையீட்டு அமைப்பிடம் புகார் அளிக்கலாம். அப்புகாரை விசாரிக்கும் முதல்நிலை மேல்முறையீட்டு அமைப்பு, சம்பந்தப்பட்டவர்களிடம் விசாரித்து உரிய ஆணை பிறப்பிக்கும்.

ஈ. முதல்நிலை மேல்முறையீட்டு அமைப்பு பிறப்பிக்கும் உத்தரவு மனநிறைவளிக்கவில்லை என்றால், இரண்டாம்நிலை மேல்முறையீட்டு அமைப்பிடம் மேல்முறையீடு செய்யலாம்.

உ. முதல்நிலை மற்றும் இரண்டாம்நிலை மேல்முறையீட்டு அமைப்புகளுக்கு 1908 ஆம் ஆண்டின் சிவில் நடைமுறை விதிகளின்படி, சிவில் நீதிமன்றத்திற்கான அதிகாரம் வழங்கப்படும். இந்த அமைப்புகள் லோக்அயுக்தா அமைப்புடன் இணைக்கப்பட்டிருக்கும்.

ஊ. பொதுமக்களுக்கு வழங்கவேண்டிய சேவையை குறிப்பிட்ட நாட்களுக்குள் ஓர் அதிகாரி வழங்காவிட்டால், அவருக்கு ரூ.500 முதல் ரூ.5000 வரை அபராதம் விதிக்கப்படும். அத்துடன் துறை ரீதியான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்.

**அதிகாரிகளிடம் இருந்து வசூலிக்கப்படும் அபராதம், பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு இழப்பீடாக வழங்கப்படும்.**

## 60. நிர்வாக சீர்திருத்த ஆணையம் (Administrative Reforms Commission)

217. ஒரு மாநிலத்தின் நிர்வாகக் கட்டமைப்பு முறையாக அமைக்கப்பட்டிருந்தால்தான் அரசின் திட்டங்களும் நலத்திட்ட உதவிகளும் மக்களை முறையாக சென்றடையும். இல்லாவிட்டால், அரசின் திட்டங்களால் யாருக்கும் பயன்கிடைக்காத நிலை ஏற்படும்.

218. தமிழகத்தின் நிர்வாகக் கட்டமைப்பு மிக மோசமாக சிதைந்திருக்கிறது. மக்களின் தேவைகள் குறித்த கோரிக்கைகள் நிர்வாகத்தின் அடிமட்டத்திலிருந்து ஆட்சியாளர்களுக்கு சென்றடைந்து, அவர்கள் அதுகுறித்து முடிவு எடுக்க பல மாதங்கள் ஆகின்றன. இத்தகைய நிர்வாகக் கட்டமைப்பை வைத்துக்கொண்டு தமிழகத்தை முன்னேற்றுவது என்பது சாத்தியமற்ற ஒன்றாகும்.

219. தமிழக அரசு நிர்வாகங்களில் நிலவும் ஊழல்கள், முடிவு எடுப்பதில் தாமதம் உள்ளிட்ட அனைத்திற்கும் நிர்வாகக் கட்டமைப்பு சரியாக இல்லாததே காரணமாகும். நிர்வாகக் கட்டமைப்பில் ஒரு சில குறைகள் இருந்தால் அதை சரிசெய்யலாம். ஆனால், கட்டமைப்பு முழுமையாக சீர்குலைந்துள்ள நிலையில், அதை முற்றிலும் புதிதாக கட்டி எழுப்பவேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. இதற்காக, நிர்வாக சீர்திருத்த ஆணையம் ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. தமிழகத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி ஒருவர் தலைமையில் இந்த ஆணையம் அமைக்கப்படும். இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகள், இந்திய காவல்பணி அதிகாரிகள் உள்ளிட்டோர் இந்த ஆணையத்தின் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

## 61. ஈழத் தமிழர்களுக்கு இரட்டைக் குடியுரிமை: மருத்துவக் கல்வியில் இடஒதுக்கீடு

220. இலங்கையில் நடைபெற்ற போர் காரணமாக தமிழ்நாட்டிற்கு வந்த ஈழத் தமிழர்கள், தமிழ்நாட்டில் கல்வி, வேலைவாய்ப்பு உரிமைகளைப் பெறுவதற்கு வசதியாகவும், அதே நேரத்தில் இலங்கையில் நிலைமை சீரடைந்தவுடன் தாயகம் திரும்புவதற்கு வசதியாகவும் தங்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கவேண்டும் என கோருகின்றனர்.

221. **இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலும், இந்தியக் குடியுரிமைச் சட்டத்திலும் உரிய திருத்தங்களை செய்வதன் மூலம் ஈழத் தமிழர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்க நடவடிக்கை எடுக்கும்படி, மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்தும்.**

222. **தமிழ்நாட்டில் உள்ள ஈழத் தமிழ் அகதிகளின் வாரிசுகள் மருத்துவம் படிப்பதற்கு வசதியாக அரசு ஒதுக்கீட்டு இடங்களில் 10 இடங்கள் ஈழத் தமிழ் அகதிகளின் வாரிசுகளுக்கு வழங்கப்படும். அவர்களுக்கு முழு கட்டணச் சலுகை வழங்கப்படும்.**

## 62. பேருந்து பயணம்: சென்னையில் அனைவருக்கும் பிற பகுதிகளில் பெண்களுக்கும் இலவசம்

223. சென்னையில் பொதுப் போக்குவரத்து வலுப்படுத்தப்படும். அனைத்து நகரப் பேருந்துகளிலும் அனைவரும் இலவசமாக பயணம் செய்யலாம் என்று கடந்த ஆண்டே அறிவிக்கப்பட்டு, இலவசப் பேருந்துப் பயணத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

224. **சென்னையில் இயக்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கை 2024–25ஆம் ஆண்டில் 6 ஆயிரமாக உயர்த்தப்படும். 2025–26ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 8,000ஆக உயர்த்தப்படும்.**

225. **சென்னை தவிர, தமிழகத்தின் பிற 37 மாவட்டங்களில் நகரப் பேருந்துகளில் பெண்களும், 12 வயதுக்குட்பட்ட குழந்தைகளும் இலவசமாக பயணிக்க அனுமதிக்கப்படுவார்கள். இதனால், அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்படும் செலவை அரசே வழங்கும்.**

## 63. மாநில கல்விக் கொள்கை – மே மாதம் வெளியிடப்படும்

226. இந்தியா பன்முகத் தன்மை கொண்ட நாடு, இந்தியா வேற்றுமையில் ஒற்றுமை காணும் நாடு என்பதில் பாட்டாளி மக்கள் கட்சி உறுதியாக நம்புகிறது. அனைத்து மாநிலங்களிலும் ஒரே மாதிரியான தரம் கொண்ட கல்வி வழங்கலாம்; ஆனால் ஒரே மாதிரியான கல்வி வழங்குவது தேவையற்றது; சாத்தியமற்றது என்பதே பாட்டாளி மக்கள் கட்சியின் நிலைப்பாடு.

227. மத்திய அரசால் உருவாக்கப்பட்டுள்ள புதிய கல்விக் கொள்கை அனைத்து மாநிலங்களுக்கும் பொதுவானதாக இல்லை. புதிய கல்விக் கொள்கையை திரும்பப்பெறவேண்டும் என்று பல்வேறு தரப்பினரும் விடுத்த வேண்டுகோள்களை மத்திய அரசு நிராகரித்துவிட்டது. புதிய கல்விக் கொள்கைக்கு ஒப்புதல் அளித்து நடைமுறைக்கும் கொண்டுவந்துவிட்டது.

228. **புதிய கல்விக் கொள்கையை முழுமையாக தமிழ்நாட்டில் செயல்படுத்த இயலாது என்பதால், தமிழ்நாட்டின் கலை, பண்பாடு, வாழ்க்கை முறை ஆகியவற்றுக்கு இயைந்த வகையில், மாநிலக் கல்விக் கொள்கையை உருவாக்க வல்லுநர் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.**

229. **வல்லுநர் குழுவின் முழுமையான அறிக்கை இம்மாத இறுதிக்குள் பெறப்படும். அதை கல்வித்துறை அமைச்சர் தலைமையிலான அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் குழு ஆய்வு செய்து முதலமைச்சரிடம் ஒப்படைக்கும். அதன் அடிப்படையில், தமிழ்நாட்டிற்கான புதிய கல்விக் கொள்கையை வரும் மே மாதம் தமிழ்நாடு முதலமைச்சர் வெளியிடுவார். 2024–25ஆம் கல்வியாண்டில் தமிழ்நாடு மாநில கல்விக் கொள்கை நடைமுறைக்கு வரும்.**

230. **தமிழகத்தில் மும்மொழிக் கொள்கை அறிமுகப்படுத்தப்படாது. அதனால், இந்தி மற்றும் சமஸ்கிருதம் திணிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை.**

## 64. கல்வி, சுகாதாரம், விவசாயத்துக்கு அனைத்தும் இலவசம்

231. **அரசின் வருவாயில் பெரும் பகுதி மக்களிடமிருந்து வரி மூலமே வசூலிக்கப்படுகிறது. அவ்வாறு வசூலிக்கப்பட்ட ஒவ்வொரு பைசாவும் பயனுள்ள வகையில்தான் செலவிடப்படவேண்டும். உதாரணமாக 2023–24ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின்**

**நிதிநிலை அறிக்கையில் மானியங்கள் மற்றும் இலவசங்களுக்காக மட்டும் ரூ.1,22,088 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அதைவிட கூடுதலாக 1 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமாக இலவசம் மற்றும் மானியங்களுக்கு செலவிடப்பட்டது.**

**232. 2023–24ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசின் சொந்த வரி வருவாய் ரூ.1.81 லட்சம் கோடி ஆகும். இதில் 67.45% இலவசங்களுக்கும், மானியங்களுக்காகவும் மட்டுமே செலவிடப்படுகிறது. மக்களின் நலனுக்காக இலவசங்கள் மற்றும் மானியங்கள் வழங்கப்படுவதை குறைகூற முடியாது. ஆனால், ஒரு மாநிலத்தின் சொந்த வரி வருவாய் முழுவதும் இலவசம் மற்றும் மானியத்திற்காக செலவிடப்படும் போது, அது பயனுள்ளதாக அமையவேண்டும். அவ்வாறு அமையாவிட்டால், அது மாநில நலனுக்கு பங்களிக்காது.**

**233. பயனுள்ள இலவசங்களை பாட்டாளி மக்கள் கட்சி எப்போதும் ஆதரிக்கிறது. அதே நேரத்தில், பயனில்லாத, மக்களை சோம்பேறிகளாக்கக்கூடிய இலவசங்கள் ஒழிக்கப்படவேண்டும் என்பது தான் பாட்டாளி மக்கள் கட்சியின் கொள்கையாகும். பாட்டாளி மக்கள் கட்சி கடைபிடித்து வரும் சமூக ஜனநாயகக் கொள்கையின்படி, அனைத்து மக்களுக்கும் வாழும் உரிமை மட்டுமின்றி, சமூகப் பொருளாதார உரிமைகளும் வழங்கப்படவேண்டும். அதன்படி, மக்களின் சமூகப் பொருளாதார நிலைகளை உறுதி செய்யும் வகையிலான இலவசங்களை பா.ம.க. ஆதரிக்கிறது.**

234. சமூக ஜனநாயகக் கொள்கையை கடைபிடித்து வரும் பிரேசில் உள்ளிட்ட தென் அமெரிக்க நாடுகளில் இலவசத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. ஆனால் அந்தத் திட்டங்கள் அனைத்தும் பொதுமக்களை அடுத்த நிலைக்கு முன்னேற்றும் வகையிலேயே அமைந்திருக்கின்றன. இத்தகைய இலவசங்கள்தான் பயனுள்ள இலவசங்களாகும்.

235. மாறாக, வாக்கு வங்கியை இலக்காக வைத்து வழங்கப்படும் இத்தகைய இலவசங்களால் வறுமை ஒழியாது; மக்களின் வாழ்வில் முன்னேற்றமும் ஏற்படாது. மாறாக மக்களை சோம்பேறிகளாக்கிவிடும். இதனால், நாட்டின் உற்பத்தியும், பொருளாதார வளர்ச்சியும் குறையும். இத்தகைய இலவசங்களை பாட்டாளி மக்கள் கட்சி எதிர்க்கிறது.

**236. மாறாக, மக்கள் உயிர்வாழ்வதற்குத் தேவையான, முன்னேற்றத்திற்கு வழிவகுக்கக்கூடிய, அத்தியாவசிய தேவைகளான கல்வி, சுகாதாரம், விவசாயம் ஆகிய மூன்றுக்கும் தேவையான அனைத்தும் மற்றும் குடிநீரும் இலவசமாக வழங்கப்படவேண்டும் என்பது தான் பாட்டாளி மக்கள் கட்சியின் கொள்கையாகும். அதன்படி, அனைவருக்கும் தரமான, சுகமான, சுமையற்ற, விளையாட்டுடன் கூடிய கட்டாயக் கல்வி இலவசமாக வழங்கப்படும். கல்வி கற்பதற்குத் தேவையான பென்சில் முதல் மடிக்கணினி, ஐ பேட் வரை அனைத்தும் இலவசமாக வழங்கப்படும். கல்விக்காக ஒரு ரூபாய் செலவு செய்ய வேண்டிய தேவையில்லை என்ற நிலை ஏற்படுத்தப்படும்.**

**237. அதேபோல், அனைவருக்கும் அனைத்து வகையான மருத்துவச் சேவைகளும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும். இந்தியாவின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு அடிப்படையான விவசாயத்திற்கு தேவைப்படும், விதைகள், உரம், பூச்சிக்கொல்லி மருந்து, தண்ணீர், மின்சாரம் உள்ளிட்ட அனைத்துத் தேவைகளும் இலவசமாக வழங்கப்பட வேண்டும் என்பதே பா.ம.க.வின் நிலைப்பாடு. இவற்றில் இலவசமாக வழங்கப்படும் மின்சாரம், தண்ணீர் தவிர்த்து மீதமுள்ள இடுபொருட்களை உழவர்கள் வாங்கிக் கொள்வதற்காகவே**

**அதிகபட்சமாக ஆண்டுக்கு ரூ.36,000 மூலதன மானியம் வழங்கப்படுகிறது. இத்தகைய பயனுள்ள இலவசங்களை மட்டும் பா.ம.க. வழங்கும்.**

## 65. தமிழ்நாடு 60 மாவட்டங்களாக பிரிக்கப்படும்

238. ‘சிறியதே அழகு’ (Small is Beautiful) என்பது அனைவரும் ஏற்றுக்கொண்ட உண்மையாகும். அதை உணர்ந்து 2019–2020ஆம் ஆண்டில் மட்டும் 6 புதிய மாவட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கள்ளக்குறிச்சி (விழுப்புரம்), ராணிப்பேட்டை, திருப்பத்தூர் (வேலூர்), செங்கல்பட்டு (காஞ்சிபுரம்), மயிலாடுதுறை (நாகப்பட்டினம்), தென்காசி (நெல்லை) ஆகியவையே புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்கள் ஆகும். புதிய மாவட்டங்கள் பிரிக்கப்பட்ட பிறகு, அந்த மாவட்டங்களில் நிர்வாகம் எளிமையானதாக மாறியிருக்கிறது.

239. **அதேபோல், தஞ்சாவூர் மாவட்டத்தில் இருந்து கும்பகோணம், திருவண்ணாமலை மாவட்டத்தில் இருந்து செய்யாறு, சேலம் மாவட்டத்தில் இருந்து ஆத்தூர், கோவை மாவட்டத்தில் இருந்து பொள்ளாச்சி உள்ளிட்ட பல்வேறு புதிய மாவட்டங்களை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் எழுந்துள்ளன. கடலூர் மாவட்டத்தைப் பிரிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது. அவை அனைத்தும் கண்டிப்பாக பரிசீலிக்கப்படும்.**

240. **நிர்வாக வசதிக்காகவும், மக்கள் தங்களின் சேவைகளை விரைவாக பெறுவதை உறுதி செய்யவும், அதிக தொலைவுக்கு அலைவதைத் தடுக்கவும், ஒவ்வொரு மாவட்டத்திலும் 12 லட்சம் பேர் இருக்கும் வகையில் மாவட்டங்களின் எல்லைகள் பிரிக்கப்பட்டு புதிய மாவட்டங்கள் உருவாக்கப்படும். தமிழக மாவட்டங்களின் எண்ணிக்கை 60ஆக உயர்த்தப்படும். இதற்காக, வருவாய் நிர்வாக ஆணையர் தலைமையில் வல்லுநர் குழு அமைக்கப்படுகிறது. அதன் பரிந்துரை அடிப்படையில் ஓராண்டுக்குள் புதிய மாவட்டங்கள் உருவாக்கப்படும்.**

## 66. இளைஞர் நலன்

241. தமிழக மக்கள் தொகையில் 35 வயதிற்குட்பட்ட இளைஞர்களின் எண்ணிக்கை மூன்றரை கோடி அதாவது, 45 விழுக்காடாகும். மக்கள் தொகையில் இளைஞர்கள் பெரும்பகுதியாக இருப்பது மக்கள் தொகையின் லாபப் பங்கு என்று அழைக்கப்படுகிறது. இந்த மனித வளத்தை சிறப்பாக பயன்படுத்திக் கொள்வதன் மூலமாகவே தமிழகம் அதிவேக வளர்ச்சியை எட்டமுடியும். இதற்காக, கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அ. இளைஞர்களுக்கு முதல் முன்னுரிமையாக தரமான கல்வி வழங்கப்படும். பட்டப்படிப்புகளும் பட்டமேற்படிப்புகளும் பட்டம் என்ற காகிதத்தை வழங்கும் கல்வியாக இல்லாமல், வேலைவாய்ப்பை வழங்கும் கல்வியாக மாற்றப்படும்.

ஆ. பொறியியல் உள்ளிட்ட தொழில்நுட்பக் கல்வி பயிலும் இளைஞர்களில் 20 விழுக்காட்டினர் கூட வேலைபெறும் தகுதி உள்ளவர்களாக இல்லை. இவர்களை வேலைவாய்ப்புக்கு ஏற்றவர்களாக மாற்றும்நோக்குடன் திறன்மேம்பாட்டுப் பயிற்சிகள் அளிக்கப்படும். இதற்காக, 2024–25 ஆம் ஆண்டில் ரூ.600 கோடி நிதி ஒதுக்கப்படும்.

இ. இளைஞர்களுக்கு அளிக்கப்படும் கல்வி, விரைவாக முன்னேறிவரும் பொருளாதாரத்தின் பரந்துபட்ட தேவைகளை நிறைவேற்றக் கூடியதாகவும்,

அதேவேளையில் தமிழ்ப் பண்பாட்டையும் உழைப்பின் மேன்மையையும் போற்றுவதில் ஆர்வம் கொண்டதாகவும், எதிர்காலக் கண்ணோட்டம் உடையதாகவும் இருக்கும் வகையில் மாற்றப்படும்.

ஈ. அரசாங்கத்திலோ அரசுக்கு வெளியிலோ இளைஞர்களுக்குக் கூலி வேலைவாய்ப்புகள் அளிக்கப்படுவதை நம்பி மட்டுமே எந்த நாடும் முன்னேறியதில்லை. இளைஞர்கள் இடையிலான தொழில்முனைவுச் செயல்பாடு என்பதுதான் பொருளாதார வளர்ச்சிக்கும், செல்வச் செழிப்புக்கும் அடிப்படை இந்த ஆற்றலைக் கட்டவிழ்த்துவிட நடவடிக்கை எடுக்கப்படும்.

உ. பசுமைத் தொழிலில், சிறுதொழில்களுக்கும் குறுந்தொழில்களுக்கும் வாய்ப்புகள் கண்டறியப்படும்.

## 67. சட்டம் – ஒழுங்கு: காவல்துறையில் சீர்திருத்தம்

242. மாநிலத்தின் வளர்ச்சிக்கு அமைதியான சூழலும், சட்டம் – ஒழுங்கு பராமரிப்பும்தான் முதல் தேவை என்பதை தமிழக அரசு உணர்ந்திருக்கிறது. சட்டம் – ஒழுங்கு முழுமையாக பாதுகாக்கப்படும். புலனாய்வுத் துறையை நவீனப்படுத்துவதன் மூலம் கொலைகள், கொள்ளைகள், வழிப்பறிகள், திருட்டுக்கள் போன்றவை கட்டுப்படுத்தப்படும். அனைவரும் வாழ விரும்பும் மாநிலமாக தமிழ்நாடு மாற்றப்படும்.

**243. காவல்துறை தலைமை இயக்குநர்களின் திறமையைப் பயன்படுத்திக்கொள்ளும் நோக்குடன் தலைநகர் சென்னை தவிர்த்த தமிழகத்தின் மற்ற பகுதிகள் 4 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு காவல்துறை தலைமை இயக்குநர் நியமிக்கப்படுவார். சென்னை மாநகர காவல்துறை ஆணையர் பதவி நிரந்தரமாக தலைமை இயக்குநர் நிலைக்கு தரம் உயர்த்தப்படும். அதேபோல், காவல்துறையின் ஒவ்வொரு பிரிவிற்கும் தலைமை அதிகாரி பணியிடம் தலைமை இயக்குநர் நிலைக்கு உயர்த்தப்படும். இதற்கு வசதியாக காவல்துறை தலைமை இயக்குநர் பணியிடங்களின் எண்ணிக்கை 15ஆக உயர்த்தப்படும். இதனால், தலைமை இயக்குநர் நிலை அதிகாரிகள் அனைவரும் அவர்களுக்குரிய அதிகாரம் கொண்ட பதவிகளில் அமர்த்தப்படுவார்கள். இதன் மூலம், காவல்துறையின் செயல் திறன் அதிகரிக்கும்.**

**244. தமிழகத்தை அமைதிப் பூங்காவாக மாற்ற காவல்துறையின் அனைத்து பதவிகளிலும் தகுதியும், திறமையும் உள்ளவர்கள் மட்டுமே நியமிக்கப்படுவார்கள். காவல்துறை அதிகாரிகள் நியமனம், பணியிட மாற்றம் ஆகியவற்றில் எந்தவிதமான அரசியல் குறுக்கீடும் இருக்காது. காவல்துறை சுதந்திரமாக செயல்பட அனுமதிக்கப்படும்.**

### குண்டர் தடுப்புச் சட்டம் – அரிதாகப் பயன்படுத்தப்படும்

245. குற்றங்களை செய்பவர்களை தண்டிப்பதற்காக இந்திய தண்டனைச் சட்டம் உள்ளது. அந்தச் சட்டத்தின் மூலமாகவே குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள். குண்டர் தடுப்புச் சட்டம், தேசியப் பாதுகாப்புச் சட்டம் போன்றவை அரிதிலும் அரிதாக தவிர்க்க முடியாத சூழல்களில் மட்டுமே பயன்படுத்தப்படும். தடுப்புக் காவல் சட்டங்களின் கீழ் ஒருவரை கைது செய்வதற்கான அதிகாரம் உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையிலான குழுவுக்கு அளிக்கப்படும். அக்குழுவின் அனுமதி பெற்றுதான் தடுப்புக் காவல் சட்டத்தில் எவரையும்

கைது செய்யமுடியும் என்பதால், இந்தச் சட்டங்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவது தடுக்கப்படும்.

246. காவல்துறை மோதல் கொலைகள் (**Encounters**) முற்றிலுமாக தடுக்கப்படும்.

247. காவல்துறையினரின் பணி சிறக்க 8 மணிநேர பணிவரம்பு நிர்ணயிக்கப்படும். காவல்துறையின் அனைத்து நிலைகளிலும் உள்ளவர்களுக்கு 8 ஆண்டுகளுக்கு ஒரு படி பதவி உயர்வு வழங்கப்படும்.

248. காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, சிறைத்துறை ஆகியவற்றுக்கு தேவையான கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தித் தருவதுடன், கூடுதல் காவலர்களும் நியமிக்கப்படுவார்கள். இந்தத் துறைகளுக்கு நடப்பாண்டிற்கான வரவு–செலவுத்திட்டத்தில் ரூ.11,000 கோடி நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

## 68. அரிசி விலையைக் கட்டுப்படுத்த கிலோவுக்கு ரூ.15 மானியம்

**249. தமிழ்நாட்டில் வறட்சி, பாசனத்திற்கு நீர் திறந்துவிடப்படாதது உள்ளிட்ட காரணங்களால் நெல் விளைச்சல் குறைந்திருக்கிறது. தமிழ்நாட்டிற்கு உயர் வகை அரிசி வழங்கும் ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களிலும் இதேநிலை காணப்படுகிறது. அதனால், தமிழகத்தில் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் கிலோவுக்கு ரூ.9 உயர்ந்து, ஒரு கிலோ ரூ.65 என்ற விலையில் விற்பனை செய்யப்படுகிறது. இதை நடுத்தர மக்களால் சமாளிக்க முடியாது.**

**250. இரண்டாம் தரவகை பொன்னி அரிசியின் விலை ரூ.45–லிருந்து ரூ.60ஆக உயர்ந்துள்ளது. இனிவரும் நாட்களில் அரிசி விலை மேலும் உயரும் என்று கணிக்கப்பட்டிருக்கிறது.**

**251. இதைக் கருத்தில் கொண்டு, உயர்வகை அரிசி, இரண்டாம் தரவகை பொன்னி அரிசி ஆகியவற்றை முறையே கிலோ ரூ.50, ரூ.45 என்ற விலையில் நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப்படும். இந்த இருவகை அரிசிகளுக்கும் கிலோவுக்கு ரூ.15 வீதம் தமிழகஅரசு மானியம் வழங்கும்.**

## 69. காவிரியில் மேகதாது அணை கட்டும் திட்டம் முறியடிக்கப்படும்

**252. காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது என்ற இடத்தில் அணை கட்டுவதற்கான விரிவான திட்ட அறிக்கையை ஆய்வு செய்து, அணை கட்ட அனுமதி அளிக்கும் பொறுப்பை மத்திய நீர்வள ஆணையத்திடம் காவிரி நீர் மேலாண்மை ஆணையம் திருப்பியளித்துள்ளது. மேகதாது அணை குறித்து விவாதிக்க, காவிரி மேலாண்மை ஆணையத்திற்கு உச்சநீதிமன்றம் தடை விதித்துள்ள நிலையில், ஆணையத்தின் இந்த நடவடிக்கை நீதிமன்ற அவமதிப்பு ஆகும். நீர்வள ஆணையத்தில் மேகதாது அணை குறித்து விவாதிக்க எந்தத் தடையும் இல்லை என்பதைப் பயன்படுத்தி, மேகதாது விவகாரத்தில் கர்நாடகத்திற்கு ஆதரவாக மத்திய அரசு ஏதேனும் முடிவெடுத்துவிடுமோ என்று தமிழக அரசு அஞ்சுகிறது.**

**253. உச்சநீதிமன்றத்தை அணுகி காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் நடவடிக்கையை ரத்து செய்யவேண்டும்; மேகதாது அணை குறித்து மத்திய நீர்வள ஆணையம் முடிவெடுக்க தடைவிதிக்க வேண்டும் என்று கோருவதற்கு தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.**

**அதுமட்டுமின்றி, மேகதாது அணைக்கான வரைவு திட்ட அறிக்கையை தயாரிக்க 2018ஆம் ஆண்டில் மத்திய அரசு அளித்த அனுமதியை ரத்து செய்யவேண்டும் என்று கோரி ஏற்கெனவே தொடரப்பட்ட வழக்கு விசாரணையை விரைவுபடுத்தவும் தமிழக அரசு கோரும். இந்த நடவடிக்கைகளின் மூலம் மேகதாது அணை கட்டும் திட்டம் முறியடிக்கப்படும்.**

## 70. முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் 152 அடியாக உயர்த்தும் பணி விரைவுபடுத்தப்படும்

**254. முல்லைப்பெரியாறு அணை வலிமையாக உள்ளது; அதன் ஓர் அங்கமான பேபி அணையை வலுப்படுத்தி, அதன் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்திக்கொள்ளலாம் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்து 10 ஆண்டுகள் நிறைவடைய உள்ள நிலையில், அதற்கான பணிகளை தமிழக அரசால் இன்னும் முடிக்க முடியவில்லை. இதற்குக் காரணம், முல்லைப் பெரியாறு அணை வலுவிழந்துவிட்டதாகக் கூறி, புதிய அணையை கட்ட வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் கேரள அரசு மீண்டும் மீண்டும் வழக்குத் தொடர்வதும், பேபி அணைப் பகுதியில் உள்ள 10க்கும் மேற்பட்ட மரங்களை வெட்ட அனுமதி மறுப்பதும் தான்.**

**255. முல்லைப்பெரியாறு அணை குறித்து உச்சநீதிமன்றத்தில் சில தனி நபர்கள் தொடர்ந்துள்ள வழக்குகளை விரைந்து முடிப்பதற்கும், பேபி அணைப் பகுதியில் உள்ள மரங்களை வெட்ட உச்சநீதிமன்றத்தின் மூலம் அனுமதி பெறுவதற்கும் தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அடுத்த ஓரிரு மாதங்களில் இந்த அனுமதி கிடைத்தவுடன், மரங்கள் வெட்டப்பட்டு, பேபி அணையை வலுப்படுத்தும் பணிகள் விரைவுபடுத்தப்படும்.**

**256. அடுத்த ஓராண்டிற்குள் அணையை வலுப்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டு, முல்லைப் பெரியாற்று அணையில் 152 அடி வரை தண்ணீரை தமிழக அரசு தேக்கி வைக்கும்.**

# முதன்மைத் துறை

## 71. வேளாண்மை

257. வேளாண் துறையை மேம்படுத்தும் நோக்குடனும், உழவர்களுக்கு நலம் பயக்கும் நோக்குடனும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதற்காக வேளாண் துறைக்கு 2024–25 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.60,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இது 2023–24ஆம் ஆண்டுக்கான தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.14,233 கோடியுடன் ஒப்பிடும் போது, 4 மடங்குக்கும் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. வேளாண் துறைக்கான நிதி ஒதுக்கீட்டை இந்த அளவுக்கு உயர்த்துவதில் பாட்டாளி மக்கள் கட்சி பெருமை கொள்கிறது.

258. வேளாண் துறைக்கான நிதி ஒதுக்கீட்டில் ரூ.12,500 கோடி உழவர்கள் மூலதன மானியத்திற்கு செலவிடப்படும்.

259. வேளாண் கட்டமைப்பு, வேளாண் கல்வி மற்றும் ஆராய்ச்சி கட்டமைப்புகளை மேம்படுத்தும் திட்டங்களுக்கு ரூ.20,000 கோடி செலவிடப்படும்.

260. பயிர்க் காப்பீடு உள்ளிட்ட பிற திட்டங்களுக்கு ரூ.27,500 கோடி செலவிடப்படும்.

261. நீர்ப்பாசனத் திட்டங்களை செயல்படுத்துவதற்காக நீர்வளத்துறை சார்பில் ரூ.20,000 கோடி செலவிடப்படும். இதையும் சேர்த்தால், வேளாண் நிழல் நிதிநிலை அறிக்கையின் மொத்த மதிப்பு ரூ.80,000 கோடி ஆகும். இது இரு துறைகள் மூலமாக மட்டுமே செலவிடப்படும். இது கடந்த ஆண்டின் வேளாண் நிதிநிலை அறிக்கையின் மொத்த மதிப்பான ரூ.38,904 கோடியைவிட, இரு மடங்கிற்கும் கூடுதல் என்பது குறிப்பிடத்தக்கது.

## 72. நீர்ப்பாசனத் திட்ட சிறப்பாண்டு – பாசன திட்டங்களை செயல்படுத்த தனி ஆணையம்

262. தமிழ்நாட்டில் பாசனப் பரப்பை அதிகரிக்கும் நோக்குடன் நீர்ப்பாசனத் திட்டங்களை முழுவீச்சில் செயல்படுத்துவதற்காக 2024–25ஆம் ஆண்டு நீர்ப்பாசனத் திட்ட சிறப்பாண்டாக அறிவிக்கப்படுகிறது.

263. நீர்ப்பாசனத் திட்டங்களை புத்தெழுச்சியுடன் செயல்படுத்த தமிழ்நாடு நீர்ப்பாசனத் திட்ட செயலாக்க ஆணையம் என்ற புதிய அமைப்பு உருவாக்கப்படும்.

264. நிலுவையில் உள்ள அனைத்து நீர்ப்பாசனத் திட்டங்களும் 10 ஆண்டுகளில் முடிக்கப்படும்.

## 73. சாகுபடி பரப்பு 5 ஆண்டுகளில் 40 லட்சம் ஏக்கர் அதிகரிக்கப்படும்

265. தமிழ்நாட்டின் சாகுபடி பரப்பு அடுத்த 5 ஆண்டுகளில் 40 லட்சம் ஏக்கர் அதிகரிக்கப்படும்.

266. தமிழ்நாட்டில் கடந்த சில பத்தாண்டுகளில் 15,000 ஏரிகள் காணாமல் போய்விட்டன. 27,000 ஏரிகளின் கொள்ளளவு ஆக்கிரமிப்பால் குறைந்துவிட்டது. காணாமல்போன ஏரிகளில் சாத்தியமானவற்றை மீட்டெடுக்கவும், ஆக்கிரமிக்கப்பட்ட ஏரிகளை மீட்டெடுக்கவும் ஏரிகள் மேலாண்மை வாரியம் என்ற அமைப்பு உருவாக்கப்படும்.

## 74. வேளாண் திட்டங்களுக்கு நிதித் திரட்ட சிறப்பு வரி

267. வேளாண் பாசனத் திட்டங்களுக்கு நிதி திரட்டுவதற்காக பெட்ரோலியப் பொருட்களின் மதிப்புக் கூட்டுவரி மீது 10%, முத்திரைத்தாள் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணங்கள் மீது 20%, மோட்டார் வாகன வரிகள் மீது 30% சிறப்புத் தீர்வை வசூலிக்கப்படும். இதன் மூலம் ஆண்டுக்கு ரூ.10,000 கோடி நிதி திரட்டப்படும்.

268. தமிழ்நாட்டில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களின் எண்ணிக்கை 3,600இல் இருந்து 4,000ஆக உயர்த்தப்படும். நெல் சேமிப்புக் கிடங்குகளின் எண்ணிக்கை 400ஆக உயர்த்தப்படும்.

269. ஒவ்வொரு நெல்கொள்முதல் நிலையத்திலும் குறைந்தது 5,000 மூட்டைகளை சேமித்து வைக்கும் வகையில் வசதிகள் செய்யப்படும்.

## 75. வேளாண்துறை முதலீட்டாளர்கள் மாநாடு

**270. வேளாண்மை சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், காவிரி பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம் ஆகியவற்றில் வேளாண் சார்ந்த தொழிற்சாலைகளை அமைக்க முதலீடு**

திரட்டும் நோக்குடன், வேளாண்துறை முதலீட்டாளர்கள் மாநாடு 06.04.2025ஆம் தேதி தஞ்சாவூரில் நடத்தப்படும்.

271. வேளாண்துறை முதலீட்டாளர்கள் மாநாட்டின் மூலம் ஆண்டுக்கு ரூ.1 லட்சம் கோடி திரட்டப்படும்.

272. வேளாண் தொழிலில் இலாபத்தை அதிகரிக்கச் செய்யும் நோக்கத்துடன், வேளாண் உற்பத்தியைப் பெருக்குதல், மதிப்புக் கூட்டுதல், சந்தைப் படுத்துதல் ஆகிய 3 துறை சார்ந்த 250 வேளாண் புத்தொழில் நிறுவனங்கள் தொடங்க ஊக்குவிக்கப்படும்.

273. சிறப்பாக செயல்படும் வேளாண் புத்தொழில் நிறுவனங்களுக்கு ரூ.25 லட்சம் வரை மானியம்.

274. மிகச் சிறப்பாக செயல்படும் 250 புத்தொழில் நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டு, அவற்றில் அரசின் சார்பில் ரூ.1 கோடி வரை முதலீடு செய்யப்படும்.

## 76. மாவட்டத் தலைநகரங்களில் வேளாண் தொழில்நுட்பக் கண்காட்சிகள்

275. வேளாண் துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், சந்தை வாய்ப்புகள், புதிய தொழில்நுட்பங்கள் குறித்து உழவர்களுக்கு விளக்கும் வகையில், ஆண்டுதோறும் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் வேளாண் தொழில்நுட்பக் கண்காட்சிகள் 3 நாட்களுக்கு நடத்தப்படும்.

276. காவிரி – தருமபுரி உபரிநீர்த் திட்டம், அரியலூர்: சோழர் பாசனத் திட்டம் ஆகியவற்றுக்கு வரும் ஜூன் மாதம் அடிக்கல் நாட்டப்படும்.

277. தாமிரபரணி – நம்பியாறு இணைப்புத் திட்டம், அத்திக்கடவு – அவிநாசித் திட்டம், கொள்ளிடம் தடுப்பணைத் திட்டம் ஆகிய முப்பெரும் திட்டங்களுக்கு ஜூலையில் திறப்புவிழா நடத்தப்படும்.

278. மதுராந்தகம் ஏரியை ரூ.120 கோடியில் தூர்வாரி சீரமைக்கும் திட்டம் ஜூலையில் நிறைவடையும்.

## 77. 72 இலட்சம் டன் நெல் கொள்முதல் – ரூ.3,600 கோடி ஊக்கத்தொகை

279. தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படும் நெல்லில் சுமார் 33% மட்டுமே தற்போது அரசால் கொள்முதல் செய்யப்படுகிறது. இதை படிப்படியாக 80 விழுக்காடாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

280. 2023–24இல் நெல்கொள்முதல் 40 லட்சம் டன்னுக்கும் கீழ் குறையும் என்று கணக்கிடப்பட்டுள்ள நிலையில், 2024–25ஆம் ஆண்டில் 72 இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்படும்.

281. நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.500 வீதம் ஊக்கத்தொகை வழங்கப்படும். இதற்காக ரூ.3,600 கோடி நிதி ஒதுக்கப்படுகிறது. இதன் மூலம் ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ.2,800 விலை வழங்கப்படும்.

282. 2024–25 ஆண்டில் ஒரு டன் கரும்புக்கான கொள்முதல் விலை ரூ.5,000ஆக நிர்ணயிக்கப்படும்.

283. அனைத்து காய்கறிகள் மற்றும் பழங்களுக்கு அரசே கொள்முதல் விலை நிர்ணயிக்கும்.

284. நியாய விலைக்கடைகளில் நாட்டு சர்க்கரை வழங்கப்படும். ரூ.60க்கு கொள்முதல் செய்யப்படும்.

## 78. தமிழ்நாடு நில ஒருங்கிணைப்புச் சட்டம் திரும்பப்பெறப்படும்

285. தமிழ்நாட்டில் உள்ள நீர்நிலைகளை தனியார் நிறுவனங்களுக்கு தாரைவார்க்கும் வகையில் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு நில ஒருங்கிணைப்பு சிறப்புத் திட்டங்களுக்கான சட்டமசோதா (Tamil Nadu Land Consolidation (for Special Projects) Act, 2023) திரும்பப்பெறப்படும்.

286. திருவள்ளூர் வட்டத்தில் 1,703 ஏக்கர் பரப்பில் அறிவு நகரம் அமைக்கும் திட்டம் கைவிடப்படும்.

287. கிழக்குக் கடற்கரை சாலைப்பகுதி பாதுகாக்கப்பட்ட பறவைகள் வாழிடமாக அறிவிக்கப்படும்.

288. கோவளம் பகுதியில் செயல்படுத்தப்படும் ஹெலிகாப்டர் சுற்றுலா திட்டம் இரத்து செய்யப்படும்.

## 79. காவிரி பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம் 9 மாவட்டங்களுக்கு விரிவாக்கம்: என்எல்சி சுரங்கங்களுக்குத் தடை

289. காவிரி பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், அரியலூர், மயிலாடுதுறை, கடலூர், திருச்சி, கரூர், புதுக்கோட்டை ஆகிய 9 மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக விரிவாக்கப்படும். இதற்கான சட்டத்திருத்தம் நடப்பு தொடரில் நிறைவேற்றப்படும்.

290. என்.எல்.சி. 3ஆவது சுரங்கம் திட்டம், முதல் இரு சுரங்கங்களை விரிவாக்கும் திட்டம் ஆகியவற்றுக்கு தடைவிதிக்கப்படும். இதற்காக 25,000 ஏக்கர் நிலம் எடுக்க அனுமதிக்கப்படாது.

291. 66,000 ஏக்கர் பரப்பளவில் வீராணம் – பாளையங்கோட்டை சுரங்கத் திட்டம், சேத்தியாத்தோப்பு சுரங்கத் திட்டம் ஆகியவற்றுக்கு நிரந்தரத் தடை விதிக்கப்படும்.

292. அரியலூர் மாவட்டத்தில் புதிய சிமெண்ட் ஆலைகள் அமைக்க தடை விதிக்கப்படும்.

293. பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தில் அனைத்து வகை தொழில் திட்டங்களுக்கும் தடை விதிக்கப்படும்.

294. பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தில் ஹைட்ரோ கார்பன் திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்படாது. இதன் மூலம் தமிழ்நாடு ஹைட்ரோ கார்பன் திட்டம் இல்லாத மாநிலமாக திகழும்.

## 80. சிப்காட் தொழில்பேட்டைகளுக்கு நிலங்களை கையகப்படுத்த தடை

**295. செய்யாறு சிப்காட் விரிவாக்கத்திற்காக மேல்மா உள்ளிட்ட கிராமங்களில் 3,000 ஏக்கர் நிலம் கையகப்படுத்தும் திட்டம் கைவிடப்படும். அரசு நிலங்களில் இந்த விரிவாக்கம் செய்யப்படும்.**

**296. சிப்காட் உள்ளிட்ட எந்த தொழில் திட்டத்திற்கும் வேளாண் விளை நிலங்கள் கையகப்படுத்தப்படாது.**

## 81. தகவல் தொழில்நுட்பம் – நான்காம் தொழில் புரட்சி

297. நான்காம் தொழில் புரட்சி என்று அழைக்கப்படும் அதிநவீன தொழில்நுட்பங்கள் உலகம் முழுவதும் வேகமாக வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளன. இது தகவல் தொழில்நுட்பத்தின் அடுத்தக்கட்ட வளர்ச்சியே ஆகும். இண்டர்நெட் ஆஃப் திங்ஸ் (Internet of Things), செயற்கை அறிவுத் திறன் (Artificial Intelligence), மெய்நிகர் மற்றும் ஆகுமெண்டட் ரியாலிட்டி (Virtual & Augmented Reality) உள்ளிட்ட மேம்பட்ட தொழில்நுட்பங்களின் கல்வி, பயிற்சி, பயன்பாடு, சேவை ஏற்றுமதி ஆகியவை ஊக்குவிக்கப்படும்.

298. தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதுசார்ந்த சேவைகளில் தமிழ்நாடு சிறந்து விளங்குவதற்கு, தமிழகத்தில் திறமையான தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் ஒரு காரணம் என்றால், உலக அளவில் ஒப்பிடும்போது, தமிழகத்தில் இந்தச் சேவை மிகக்குறைந்த செலவில் கிடைப்பதுதான் மற்றொரு காரணமாகும். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதுசார்ந்த சேவைகளைப் பெருக்க திட்டங்கள் வகுத்து செயல்படுத்தப்படும்.

299. ஓசூரில் தொடங்கி கிருஷ்ணகிரி, தருமபுரி வரையுள்ள பகுதி தகவல் தொழில்நுட்ப தாழ்வாரமாக மாற்றப்படும். பெங்களூரு நகரத்தின் நீட்சியாக இப்பகுதிகளில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்கப்படுவதால், வேலைவாய்ப்பு அதிகரிக்கும்.

300. தகவல் தொழில்நுட்பம் மற்றும் அது சார்ந்த சேவை வழங்கும் நிறுவனங்கள், அயல்பணி வணிக (BPO) நிறுவனங்கள் ஆகியவற்றை வட்டத் தலைநகரங்களுக்குக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படும். வட்டத் தலைநகரங்களிலும், ஊரகப் பகுதிகளிலும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களைத் தொடங்க முன்வருவோருக்கு மானிய விலையில் மின்சாரம் வழங்கப்படும்.

301. கிராமப்புறங்களில் தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட பொது சேவை மையங்கள் அமைக்கப்படும்.

302. சென்னை, மதுரை, கோவை, திருச்சி, திருநெல்வேலி, சேலம், ஓசூர் ஆகிய நகரங்களில் மட்டுமே தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கு அடுத்தக்கட்டமாக, வேறு எந்தெந்த நகரங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை அமைக்கலாம் என்பது குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

## 82. கைத்தறி மற்றும் துணிநூல்

303. கூட்டுறவுச் சங்கங்களிலும், பொதுத்துறை வங்கிகளிலும் நெசவாளர்களுக்கு வங்கிகள் வழக்கம்போல் கடன் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

304. காஞ்சிபுரம் நகரில் அரைகுறையாக அமைக்கப்பட்டு 2021ஆம் ஆண்டு நிறைவில் திறக்கப்பட்ட பட்டுப்பூங்காவால் காஞ்சிபுரம் பகுதி நெசவாளர்களுக்கு எந்தப் பயனும் இல்லை. அப்பகுதி நெசவாளர்களின் தேவைகளை இந்தப் பூங்கா நிறைவேற்றாது. இதைக் கருத்தில் கொண்டு காஞ்சிபுரம் பட்டுப்பூங்கா நெசவாளர்களின் அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றும் வகையில் விரிவாக்கம் செய்யப்படும்.

305. தஞ்சாவூர் மாவட்டம் திருபுவனம் – கும்பகோணத்தில் புதிய பட்டுப்பூங்கா அமைக்கப்படும்.

306. உலகச் சந்தையில் தமிழ்நாட்டு பட்டுப் புடவைகளின் சிறப்புகள் குறித்து விளக்குவதன் மூலம் பட்டுப் புடவைகளின் ஏற்றுமதியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

307. பட்டு நெசவாளர்களுக்கு நடப்பாண்டில் 10 விழுக்காடு கூலி உயர்வு வழங்கப்படும். ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் முதல் 10 விழுக்காடு கூலி உயர்வு வழங்குவது வாடிக்கையாக்கப்படும்.

# நெடுஞ்சாலைகள்

## 83. பறக்கும் சாலை உள்ளிட்ட கட்டமைப்பு திட்டங்களுக்கு ஜிஎஸ்டி வரிவிலக்கு

**308. மக்கள்தொகை பெருக்கம், தொழில் வளர்ச்சி ஆகியவற்றுக்கு ஏற்ற வகையில், அதிகரித்து வரும் போக்குவரத்து தடையின்றி இயங்குவதற்காக கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டியது கட்டாயமாகிறது. இத்தகைய கட்டமைப்பு வசதிகள் மத்திய அரசின் சார்பிலும், மாநில அரசின் சார்பிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகைய கட்டமைப்புப் பணிகளுக்கு ஜிஎஸ்டி வரி செலுத்த வேண்டியது மிகப்பெரிய சுமையாக மாறுகிறது.**

**309. சென்னை தாம்பரம் முதல் செங்கல்பட்டு வரை ரூ.3,500 கோடி செலவில் 6 வழி உயர்மட்ட சாலை அமைக்கும் திட்டத்தை தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் அறிவித்துள்ளது. இத்திட்டத்திற்கு ஜிஎஸ்டி வரிவிலக்கு வழங்கும்படி மத்திய அரசு கோரியுள்ளது. இந்தக் கோரிக்கையை ஏற்று இத்திட்டத்திற்கு ஜிஎஸ்டி வரி விலக்கு வழங்கப்படும். அதற்கேற்ற வகையிலும் சுங்கக் கட்டணங்கள் குறைக்கப்பட வேண்டும் என்று அரசு நிபந்தனை விதித்தது.**

**310. மதுரவாயல் – திரும்பெரும்புதூர் (23.2 கிமீ) உயர்மட்ட சாலை, மாதவரம் சந்திப்பு – வெளிவட்டச் சாலை (10.4 கி.மீ), திருச்சி – துவாக்குடி உயர்மட்ட சாலை ஆகியவற்றுக்கும் ஜிஎஸ்டி வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும். இந்த உயர்மட்ட சாலைகள் செயல்பாட்டுக்கு வரும்போது, ஜிஎஸ்டி வரிவிலக்கிற்கு ஏற்ற வகையில் சுங்கக் கட்டணம் குறைக்கப்படும்.**

## 84. நெடுஞ்சாலைகள் துறைக்கு ரூ.15,000 கோடி

**311. தொழில் வளர்ச்சிக்கு மிகவும் அவசியமானவை நெடுஞ்சாலைகளாகும். மாநில நெடுஞ் சாலைகள் மற்றும் மாவட்ட சாலைகளை புதுப்பிக்கவும், தேவையான இடத்தில் புதிய**

**சாலைகளை அமைக்கவும் வசதியாக, நெடுஞ்சாலைத் துறைக்கு நடப்பு ஆண்டில் ரூ.15,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

312. **சென்னை – கன்னியாகுமரி இடையிலான கிழக்குக் கடற்கரை சாலையை 6 வழிப் பாதையாக மாற்றும் பணிகள் விரைவுபடுத்தப்படும். 2025ஆம் ஆண்டிற்குள் இந்தப் பணிகளை முடிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.**

313. **மாமல்லபுரம் – புதுச்சேரி வரையிலான கிழக்குக் கடற்கரை சாலையை 6 வழிச் சாலையாக மாற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் விரைவுபடுத்தப்படும்.**

314. சென்னையில் இருந்து பாண்டிச்சேரி வரையிலான கிழக்குக் கடற்கரை சாலையை சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு மையமாக மாற்ற அரசு முடிவு செய்துள்ளது. அதற்கு வசதியாக, சென்னை – புதுச்சேரி இடையே கிழக்குக் கடற்கரை சாலை 8 வழிச் சாலையாக மாற்றப்படும். அதற்கான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அடுத்த இரு ஆண்டுகளில் இதற்கான பணிகள் தொடங்கப்படும்.

315. அனைத்து ஒருவழிச் சாலைகளும் அடுத்த 5 ஆண்டுகளில் இருவழிச் சாலைகளாக மாற்றப்படும். நடப்பாண்டில் 2,000 கிலோ மீட்டர் நீள சாலைகள் தரம் உயர்த்தப்படும்.

## 85. தேசிய நெடுஞ்சாலைகள் பணிகளை விரைவுபடுத்த தனிப் பிரிவு

316. **தமிழ்நாட்டில் கடந்த 2023 டிசம்பர் மாத நிலவரப்படி, 1,149 கிலோ மீட்டர் தொலைவுக்கு 123 தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்கள் செயல்படுத்தப்படாமல் முடங்கிக்கிடக்கின்றன. இத்திட்டங்கள் அறிவிக்கப்பட்ட போது, அவற்றின் மொத்த மதிப்பு ரூ.17,112 கோடி ஆகும். திட்டப் பணிகள் தாமதமானதால் அவற்றுக்கான செலவு ரூ.1,504 கோடி அதிகரித்து ரூ.18,616 கோடியாக அதிகரித்திருக்கிறது. இந்தப் பணிகள் விரைவுபடுத்தப்படாவிட்டால் அவற்றுக்கான மதிப்பு இனிவரும் காலங்களில் மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.**

317. நெடுஞ்சாலைத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்குத் தேவையான மண் உள்ளிட்ட மூலப் பொருட்களின் தட்டுப்பாடுதான் இதற்குக் காரணம் என்றும், இந்த விஷயத்தில் தமிழக அரசு போதிய ஒத்துழைப்பு அளிக்கவில்லை என்றும் மத்திய நெடுஞ்சாலை அமைச்சகம் தெரிவித்திருக்கிறது. இந்த குறை போக்கப்படும்.

318. தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களுக்கு தேவையான அனுமதிகள், மூலப் பொருட்கள் உள்ளிட்டவற்றை உடனடியாக வழங்குவது தொடர்பாக தமிழக அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்காக தமிழக நெடுஞ் சாலைத் துறையில் கண்காணிப்புப் பொறியாளர் (**Superintending Engineer**) தலைமையில் தனிப்பிரிவு ஏற்படுத்தப்படும்.

319. தமிழ்நாட்டில் உள்ள திருவண்ணாமலை – கள்ளக்குறிச்சி, வள்ளியூர் – திருச்செந்தூர் உள்ளிட்ட 8 மாநில நெடுஞ்சாலைகளை தேசிய நெடுஞ்சாலைகளாக அறிவிக்கும் திட்டம் கடந்த 3 ஆண்டுகளுக்கும் மேலாக மத்திய அரசின் ஆய்வில் உள்ளது. இத்திட்டத்திற்கு உடனடியாக ஒப்புதல் அளிக்கும்படி மத்திய அரசை தமிழ்நாடு அரசு வலியுறுத்தும்.

## 86. தேசிய நெடுஞ்சாலைகள் – சுங்கக்கட்டணத்தை நீக்க நடவடிக்கை

320. இந்தியாவில் 60 கிலோ மீட்டருக்கு ஒரு சுங்கச்சாவடி மட்டுமே இருக்க வேண்டும் என்ற விதியின்படி, அனைத்து மாநிலங்களிலும் சுங்கச் சாவடிகள் மாற்றியமைக்கப்படும் என்று மத்திய நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் நிதின் கட்கரி, 22.03.2022 அன்று நாடாளுமன்ற மக்களவையில் அறிவித்திருந்தார். 3 மாதங்களுக்குள் இந்தப் பணிகள் முடிவடையும் என்று அவர் அறிவித்திருந்த நிலையில், அதன்பின் 2 ஆண்டுகள் நிறைவடைய உள்ள நிலையில், இன்றுவரை அதற்கான பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

**321. சுங்கக் கட்டணம் வசூலிப்பதில் இந்தியாவிலேயே தமிழகம்தான் முதலிடம் வகிக்கிறது. இந்தியாவில் ஒட்டுமொத்தமாக வசூலிக்கப்படும் சுங்கக் கட்டணத்தில் 13% முதல் 16% சுங்கக் கட்டணம் தமிழகத்தில் வசூலிக்கப்படுகிறது. அதே நேரத்தில், சுங்கக் கட்டண சாலைகள் சரியாக பராமரிக்கப்படுவதில்லை. சுங்கக் கட்டணம் தொடர்பான விதிகளின்படி, தமிழ்நாட்டில் தற்போதுள்ள 55 சுங்கச் சாவடிகளில் 38 சுங்கச் சாவடிகள் மூடப்படவேண்டும். இதில் தாமதம் செய்யப்படுவதை தமிழ்நாடு அரசு அனுமதிக்காது.**

**322. சுங்கக் கட்டண விதிகளின்படி, தமிழ்நாட்டில் உள்ள சுங்கச் சாவடிகளின் எண்ணிக்கையை 16ஆக குறைப்பது, தமிழ்நாட்டில் முதலீடு எடுக்கப்பட்ட தேசிய நெடுஞ்சாலைகளில் சுங்கக் கட்டணத்தை இரத்து செய்வது குறித்து மத்திய அரசுடன் தமிழக அமைச்சர்கள் குழு பேச்சு நடத்தும்.**

## 87. விமான நிலையங்கள்

பரந்தூர் விமான நிலையப் பணிகள் விரைவுபடுத்தப்படும்

**323. தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி மற்றும் பொருளாதார வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, சென்னையில் இருந்து 60 கிலோ மீட்டர் தொலைவில் பரந்தூரில் சென்னைக்கான 2வது விமான நிலையத்தை அமைப்பதற்கான அனைத்து நிலைப் பணிகளும் விரைவுபடுத்தப்படும்.**

**324. பரந்தூரில் விமான நிலையம் அமைப்பதற்கான தல ஒப்புதலை மத்திய பாதுகாப்பு அமைச்சகம் வழங்கியுள்ளது. விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் அதற்கென தேர்ந்தெடுக்கப்படும் அமைப்பால் மேற்கொள்ளப்படும்.**

**325. மொத்தம் 5,746 ஏக்கர் பரப்பளவில் விமான நிலையம் அமையும். இதில், 1,917 ஏக்கர் நிலம் அரசுக்குச் சொந்தமானது. மீதமுள்ள 3,774 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்துவதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்படும். இதனால், உழவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அவர்களுக்கான இழப்பீடு மற்றும் மறுவாழ்வு உதவிகள் அரசால் வழங்கப்படும்.**

326. தமிழ்நாட்டில் எங்கிருந்து எங்கு வேண்டுமானாலும் ஒரு மணி நேரத்திற்குள் செல்லும் அளவுக்கு விமானப் போக்குவரத்தை விரிவுபடுத்த அரசு திட்டமிட்டுள்ளது. இதற்காக தமிழ்நாட்டில் ஏற்கெனவே உள்ள விமான நிலையங்கள் தவிர, வேலூர், தஞ்சாவூர், நெல்லை, கடலூர், நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் உடான் திட்டத்தின் (UDAN) கீழ் விமான நிலையங்கள் அமைத்து போக்குவரத்தை தொடங்கும்படி மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்தும்.

## 88. துறைமுகங்கள்

327. சென்னை துறைமுகத்தின் வளர்ச்சி நாளுக்குநாள் குறைந்துவரும் சூழலில், வளர்ச்சிக்குத் தடையாக உள்ள முட்டுக்கட்டைகளை அகற்ற மாநில அரசு நடவடிக்கை எடுக்கும். மதுரவாயல் – சென்னை துறைமுகம் சாலைத் திட்டத்தைச் செயல்படுத்த விதிக்கப்பட்ட தடை அகற்றப்பட்டுள்ளநிலையில், அத்திட்டப்பணிகளை விரைவுபடுத்த தமிழக அரசு உதவும்.

328. கடலூர் துறைமுகத்தை ரூ.500 கோடி செலவில் விரிவாக்கம் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2024–25 ஆம் ஆண்டில் நாகப்பட்டினம் துறைமுகம் ரூ.500 கோடியில் விரிவுபடுத்தப்படும்.

## 89. போக்குவரத்து – அரசுப் போக்குவரத்துக் கழகங்களை இலாபத்தில் இயக்க சிறப்புத் திட்டம்

329. தமிழ்நாட்டில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் இழப்பு ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது. போக்குவரத்துக் கழகங்களின் மொத்த கடன் சுமை ரூ.65,000 கோடியைத் தாண்டிவிட்டது. அரசுப் போக்குவரத்துக் கழகங்களை சீரமைக்காவிட்டால், இன்னும் சில ஆண்டுகளில் அவற்றை மூடவேண்டிய நிலை ஏற்படும். போக்குவரத்துக் கழகங்களை சீரமைத்து, அவற்றை இலாபத்தில் இயங்கச் செய்ய பல்வேறு நிர்வாக சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. அவற்றின் விவரம்:

**அ. தமிழ்நாட்டில் முதற்கட்டாக 2,000 மின்சாரப் பேருந்துகள் வாங்க கடந்த 2021ஆம் ஆண்டில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. நடப்பாண்டின் இறுதிக்குள் அந்தப் பேருந்துகள் வாங்கப்பட்டு, போக்குவரத்துக் கழகங்களில் சேர்க்கப்படும்.**

**ஆ. கூடுதலாக 2,000 மின்சாரப் பேருந்துகள் வாங்க நடப்பாண்டில் ஆணை பிறப்பிக்கப்படும். அதிக எண்ணிக்கையில் மின்சாரப் பேருந்துகளை இயக்குவதன் மூலம், எரிபொருள் மற்றும் பராமரிப்பு செலவு மிச்சமாகும்.**

**இ. பேருந்துகளை மிகச் சிறப்பான முறையில் பராமரிப்பதன் மூலம் ஒரு லிட்டர் டீசலுக்கு 5.5 கி.மீ முதல் 6.00 கி.மீ வரை இயங்கச் செய்வது உறுதி செய்யப்படும். இதனால் போக்குவரத்துக் கழகங்களின் எரிபொருள் செலவு 25% வரை மிச்சப்படுத்தப்படும்.**

**ஈ. அரசுப் பேருந்துகளும், தனியார் பேருந்துகளும் ஒரே வழித்தடத்தில் இயங்காத வகையில் பார்த்துக்கொள்ளப்படும். அரசுப் பேருந்துகளுக்கென குறிப்பிட்ட வழித்தடங்களும், தனியார் பேருந்துகளுக்கென குறிப்பிட்ட வழித்தடங்களும் ஒதுக்கப்படும்.**

## 90. கோவையில் ரூ.9,424 கோடியில் 144 கி.மீக்கு மெட்ரோ தொடர் வண்டி

**330. கோவை மாநகரில் 144 கிலோ மீட்டர் தொலைவுக்கு ரூ.9,424 கோடியில் பெருநகர தொடர்வண்டித் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. அதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.**

331. கோவையில் முதல்கட்டமாக கீழ்க்கண்ட வழித்தடங்களில் பெருநகர தொடர்வண்டித் திட்டம் செயல்படுத்தப்படும்.

கணியூர் – உக்கடம் பேருந்து நிலையம் (26 கி.மீ.)
உக்கடம் – பிளிச்சி (24 கி.மீ.)
காரணம்பேட்டை – தண்ணீர் பந்தல் (42 கி.மீ.)
கணேசபுரம் – காருண்யா நகர் (44 கி.மீ)
உக்கடம் – கோவை பேருந்து நிலையம் (8 கி.மீ.)

332. கோவை பெருநகர தொடர் வண்டித் திட்டத்திற்கான முன்னேற்பாடுகள் அனைத்தும் நிறைவடைந்துவிட்ட நிலையில், நடப்பாண்டில் கட்டுமானப் பணிகள் தொடங்கும்.

333. மதுரை, சேலம், திருச்சி, திருநெல்வேலி ஆகிய மாநகரங்களில் மெட்ரோ இரயில் திட்டங்களை தொடங்குவதற்கான சாத்தியக்கூறு ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

## 91. சென்னை மெட்ரோ ரயில் – கிளாம்பாக்கம் வரை நீட்டிக்கப்படும்

334. சென்னைப் பெருநகர தொடர் வண்டித் திட்டத்தின் 2ஆம் கட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு, மொத்தம் 3 வழித்தடங்களில் 118.9 கிலோ மீட்டர் தொலைவுக்கு மெட்ரோ ரயில் திட்டத்தை செயல்படுத்தும் பணிகள் ரூ.63,246 கோடியில் நடைபெற்று வருகின்றன.

335. மாதவரம் – சிறுசேரி சிப்காட் இடையே 45.813 கி.மீ. தொலைவுக்கு முதல் பாதை, மாதவரம் – சோழிங்கநல்லூர் இடையே 47 கிமீ தொலைவுக்கு இரண்டாவது பாதை, சென்னை கடற்கரை கலங்கரை விளக்கம் – வடபழனி – பூந்தமல்லி பேருந்து நிலையம் வரை 26 கிமீ தொலைவுக்கு 3ஆவது பாதை அமைக்கப்படும். இந்தப் பணிகள் நிர்ணயிக்கப்பட்ட வேகத்தில் நடைபெற்று வருகின்றன. 2025ஆம் ஆண்டில் கலங்கரை விளக்கம் – பூந்தமல்லி இடையிலான வழித்தடத்தில் போரூர் – பூந்தமல்லி இடையே போக்குவரத்து தொடங்கப்படும்.

336. கிளாம்பாக்கத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பேருந்து முனையத்திற்கு சென்னை மாநகரில் இருந்து போதிய அளவு பொதுப் போக்குவரத்து வசதி இல்லாத சூழலில் அதை சரிசெய்யும் வகையில், சென்னை விமான நிலையம் – கிளாம்பாக்கம் இடையே 15.3 கிமீ தொலைவுக்கு பெருநகர தொடர்வண்டிப் பாதை அமைக்கப்படவுள்ளது. இதற்கான பணிகள் இந்த ஆண்டு இறுதிக்குள் தொடங்கும்.

## 92. சென்னைப் போக்குவரத்து

337. சென்னையில் மாநகரப் பேருந்துகளின் எண்ணிக்கை நடப்பாண்டில் 6,000ஆக உயர்த்தப்படும். மாநகரப் பேருந்துகளில் அனைவரும் பயணச் சீட்டு இல்லாமல் இலவசமாக பயணிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

338. சென்னையில் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தும் வகையில், குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் இருப்பதுபோன்று, அதிவிரைவு பேருந்து பாதை அமைப்பு (Bus Rapid Transit System - BRTS) அமைக்கப்படும். இதன் மூலம், தடையற்ற தனிப்பாதையில் பேருந்துகள் இயக்கப்படும் என்பதால், ஒரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எளிதாகவும், விரைவாகவும் செல்லமுடியும்.

339. தொடர்வண்டி முறைக்கும் பேருந்துகளுக்கும் இடையே ஒருங்கிணைப்பு ஏற்படுத்தப்படும். (எடுத்துக்காட்டாக – அனைத்துத் தொடர்வண்டி நிலையங்களில் பேருந்து நிறுத்தங்களை அமைத்தல், ஒரே பயணச்சீட்டில் இரண்டிலும் பயணித்தல் போன்றவை).

340. சென்னையின் சாலைகளில் வாகன நிறுத்த சாத்தியமான பகுதிகளைத் தெரிந்தெடுத்து, அங்கு மட்டுமே கட்டணத்துடன் வாகனங்களை நிறுத்த அனுமதிக்கப்படும். இலவசமாக வாகனம் நிறுத்த சென்னையில் ஓர் இடம்கூட இல்லை என்ற நிலை உருவாக்கப்படும். இதனால், மகிழுந்துகள் தேவையின்றி சாலைக்கு வருவது – குறிப்பாக ஒரு மகிழுந்தில் ஒரே ஒருவர் பயணிப்பது தடுக்கப்படும். இதில் கிடைக்கும் வருவாயைக் கொண்டு நடைபாதைகளில் நடந்து செல்வோருக்கு சிறப்பு வசதிகள் செய்து தரப்படும்.

341. சென்னையில் கலங்கரை விளக்கம் முதல், சாத்தியமாகக்கூடிய தொலைவுவரை கடலில் படகுப் போக்குவரத்தை தொடங்குவதற்கான வாய்ப்புகள் குறித்து ஆராயப்படும். சென்னை ஐ.ஐ.டி. மூலம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படும்.

342. சென்னையின் நீர்வழிகளைப் பாதுகாக்கவும், பராமரிக்கவும் ''சென்னை நீர்வழிகள் ஆணையம்'' என்ற தனி அமைப்பு உருவாக்கப்படும்.

**343. தமிழ்நாட்டின் தொடர் வண்டித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி, அவற்றை உரிய காலத்தில் செயல்படுத்துவதற்கு போதுமானது அல்ல என்றாலும் கூட, நீண்ட காலத்திற்குப் பிறகு நிதி ஒதுக்கப்பட்டிருப்பது, அத்திட்டங்களை செயல்படுத்தியதில், மத்திய அரசு ஆர்வம் காட்டுவதையே உணர்த்துகிறது. தமிழ்நாட்டின் தொழில்துறை மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சர்கள் தலைமையிலான குழு விரைவில் தில்லி சென்று மத்திய நிதியமைச்சர் மற்றும் தொடர் வண்டித் துறை அமைச்சர்களைச் சந்தித்து, தமிழ்நாட்டிற்கான தொடர் வண்டித் திட்டங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கும்படி கோரும்.**

**344. தமிழ்நாட்டிற்கான தொடர்வண்டித் திட்டங்களை செயல்படுத்துவதற்கான செலவில் 50%–ஐ தமிழக அரசு ஏற்றுக்கொள்ளும். இதற்காக நடப்பு நிதியாண்டில் ரூ.6,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

## 93. மின்சாரம் – கட்டணம் குறைக்கப்படும்

**345. இரு மாதங்களுக்கு ஒருமுறை மின்கட்டணம் வசூலிக்கும் முறை கைவிடப்பட்டு, மாதம் ஒருமுறை மின்கட்டணம் வசூலிக்கும் நடைமுறை அறிமுகப்படுத்தப்படும். தமிழ்நாடு மின்சார வாரியம் 2023ஆம் ஆண்டு மின்சாரக் கட்டணத்தை உயர்த்தியுள்ள நிலையில், மாதம் ஒருமுறை வசூலிக்கப்படும் போது, மின் கட்டணம் 47.32% வரை மிச்சமாகும்.**

**346. மின்பயன்பாடு இரு மாதத்திற்கு ஒருமுறை கணக்கிடப்பட்டால், 1000 யூனிட் பயன்படுத்தும் ஒரு வீட்டிற்கு ரூ.6,550 மின் கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும். மாறாக, மாதத்திற்கு ஒருமுறை மின் பயனீட்டு அளவு கணக்கிடும்போது ஒரு மாதத்திற்கு 500 யூனிட் பயன்படுத்தினால் ரூ.1,725 மட்டுமே கட்டணம் செலுத்த வேண்டி வரும். அதன்படி பார்த்தால், இரு மாதங்களுக்கு ரூ.3,450 கட்டணம் செலுத்த வேண்டி வரும். இது முந்தைய முறைப்படி செலுத்த வேண்டிய கட்டணத்தில் 47.32% குறைவு என்பது குறிப்பிடத்தக்கது.**

**347. 2022ஆம் ஆண்டில் வீட்டு இணைப்புகளுக்கும், 2022, 2023 ஆகிய ஆண்டுகளில் தொழில் நிறுவனங்களுக்கும் மின்கட்டணம் உயர்த்தப்பட்டதால், அனைத்து தரப்பினரும்**

**கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் பாதிப்பை போக்கும் வகையில், மின்சாரக் கட்டணம் குறைக்கப்படும். அடுத்த சில ஆண்டுகளுக்கு மின்கட்டணம் உயர்த்தப்படாது.**

348. தலா 4,000 மெகாவாட் திறன்கொண்ட கடலாடி, செய்யூர் மின்திட்டங்கள், 1320 மெகாவாட் திறன் கொண்ட உடன்குடி மின்திட்டம், 1320 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் சிறப்பு பொருளாதார மண்டல மின்திட்டம், 660 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் அனல்மின் நிலையம் உட்பட 17,340 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின்திட்டங்களில் எவை, எவையெல்லாம் பொருளாதார அடிப்படையில் சாத்தியம் என்பது ஆய்வு செய்யப்பட்டு, அந்த அனல்மின் திட்டங்கள் மட்டும் அடுத்த 5 ஆண்டுகளில் செயல்படுத்தி முடிக்கப்படும்.

## 94. புதிய எரிசக்தி – புதிய அமைச்சகம்

**349. அனல்மின் நிலையங்களால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதைத் தடுக்கும் வகையில், 2030ஆம் ஆண்டுக்குப் பிறகு புதிதாக அனல் மின் நிலையங்களைத் தமிழக அரசு அமைக்காது. இப்போது பயன்பாட்டில் உள்ள அனைத்து அனல்மின் நிலையங்களும், அதன் வாழ்நாள் காலம் முடிவடைந்த பிறகு செயலிழக்கச் செய்யப்படும். அவற்றுக்குப் பதிலாகக் காற்றாலை மற்றும் சூரியஒளி மின்சார உற்பத்தித் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.**

**350. அடுத்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் 10,000 மெகாவாட் அளவுக்கு சூரியஒளி மின்திட்டங்கள் செயல்படுத்தப்படும்.**

**351. காற்றாலை மின்உற்பத்தி, சூரியஒளி மின்உற்பத்தி ஆகிய இரண்டையும் ஒரே இடத்தில் மேற்கொள்ளும் கலப்பின மின்உற்பத்தித் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.**

**352. தமிழ்நாடு நீண்ட கடலோரத்தைக் கொண்டுள்ள நிலையில், கடல் அலைகளில் இருந்து மின்சாரம் தயாரிப்பதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து ஆராயப்படும்.**

**353. தமிழ்நாட்டில் காற்றாலை மின் திட்டங்கள், சூரியஒளி மின் திட்டங்கள் ஆகியவற்றை விரைந்து செயல்படுத்த வசதியாக, புதிய மின்சக்தி அமைச்சகம் (**Ministry of New Energy**) என்ற புதிய அமைச்சகம் தோற்றுவிக்கப்படும்.**

**ஊராட்சிகள் தோறும் சூரியஒளி மின்நிலையங்கள்**

**354. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் தலா ஒரு மெகாவாட் திறன் கொண்ட சூரியஒளி மின்நிலையங்கள் அமைக்கப்படும். இதில் கிடைக்கும் மின்சாரத்தைக் கொண்டு, அந்த ஊராட்சிகளில் உள்ள வீடுகளுக்கு மட்டும் மின்சாரம் வழங்கப்படும். இது 10 ஆண்டு நீண்டகாலத் திட்டமாக செயல்படுத்தப்படும். இதற்கான செலவை அரசே ஏற்கும். பராமரிப்புக்காக மட்டும் ஒவ்வொரு வீட்டிற்கும் மாதம் ரூ.50 வசூலிக்கப்படும்.**

**355. வீடுகள், வணிகக் கட்டடங்கள் உள்ளிட்ட அனைத்திலும் மேற்கூரைகள் மீது சூரியஒளி மின்உற்பத்தி தகடுகளைப் பொருத்தி, சூரியஒளி மின்சாரம் தயாரிப்பது ஊக்குவிக்கப்படும். இதற்காக மானியம் வழங்கப்படும். பகல் நேரங்களில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தில் வீட்டுப் பயன்பாட்டுக்குப் போக மீதமுள்ள மின்சாரத்தை மின்தொகுப்பில் இணைக்கலாம். அதற்கான கட்டணம் கணக்கிடப்பட்டு, மாதாந்திர மின்கட்டணத்தில் கழிக்கப்படும்.**

## 95. மின்வாரியத்தை லாபத்தில் இயக்க சிறப்புத்திட்டம்

356. தமிழ்நாட்டில் 2022ஆம் ஆண்டில் மின் கட்டணத்தின் உயர்த்தப்பட்டதால், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 2022–23ஆம் ஆண்டில் ரூ.23,863 கோடி கூடுதல் வருவாய் கிடைத்தது. ஆனாலும், மின்சார வாரியத்தின் இழப்பு அதற்க முந்தைய ஆண்டின் இழப்பைவிட அதிகமாக ரூ.9,192.25 கோடி இழப்பை சந்தித்துள்ளது. மின்சார வாரியம் உற்பத்தி செய்யும் மின்சாரத்தைவிட, 3 மடங்கு மின்சாரம் வெளியில் இருந்து அதிக விலை கொடுத்து வாங்கப்படுவதுதான் இதற்குக் காரணம் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

357. மின்சார வாரியத்தை இலாபத்தில் இயக்குவதற்கு கட்டண உயர்வு தீர்வல்ல; மின்சார வாரிய சீர்திருத்தங்கள் தான் தீர்வு என்று அரசு நம்புகிறது. அதற்காக கீழ்க்கண்ட திட்டங்களை அரசு செயல்படுத்தும்.

அ. தனியாரிடமிருந்து அதிகவிலை கொடுத்து மின்சாரம் வாங்கும் வழக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும். இந்த ஒற்றை நடவடிக்கையின் மூலமாக மட்டுமே மின்வாரியத்தின் இழப்பில் பெரும்பகுதியை குறைக்க முடியும்.

ஆ. நிலுவையில் உள்ள மின்திட்டங்களில் 7,540 மெகாவாட் மின்திட்டங்கள் அடுத்த 3 ஆண்டுகளில் முடிக்கப்பட்டு, தமிழகம் மின்மிகை மாநிலமாக மாற்றப்படும். இதன் மூலம் தமிழ்நாடு மின்வாரியம் லாபம் ஈட்டும் நிறுவனமாக மாற்றப்படும்.

இ. தமிழ்நாடு மின்வாரியத்தின் மின் இழப்பு தற்போது சுமார் 27% ஆக உள்ளது. இதை 8%–க்கும் கீழ் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஈ. மேற்குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளின் மூலம் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் இழப்பு தடுக்கப்படுவதுடன், மின்வாரியம் ஆண்டுக்கு ரூ.15,000 கோடி இலாபம் ஈட்டும் நிலையை எட்டும். இந்த நிதியைக் கொண்டு உதய் திட்டத்தின்கீழ் தமிழக அரசுக்கு செலுத்தவேண்டிய கடனை மின்வாரியம் அடுத்த 10 ஆண்டுகளில் அடைக்கும். தமிழ்நாடு மின்வாரியத்தின் கடன்கள் படிப்படியாக திருப்பி செலுத்தப்படும்.

## 96. சுற்றுலாத் துறை

358. சுற்றுலாத் துறையில் இந்தியாவின் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. சேவைத் துறையில் அதிக வேலைவாய்ப்பை வழங்குவது சுற்றுலாத் துறைதான் என்பதால், இத்துறையை மேம்படுத்துவதன் மூலம் வேலைவாய்ப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

359. சென்னை முதல் புதுச்சேரி வரையிலான கிழக்குக் கடற்கரை சாலை பொழுதுபோக்கு சுற்றுலா வழித்தடமாக மாற்றப்படும்.

360. சிங்கப்பூரில் உள்ள Gardens by the Bay போன்று மின்னொளியில் மிளிரும் அற்புதத் தோட்டம் கிழக்குக் கடற்கரை சாலையில் அமைக்கப்படும். இந்தத் தோட்டத்தில் மின்னொளிக்காக அமைக்கப்படும் செயற்கை மரங்களை இணைத்து நடைபாதை அமைக்கப்படும். செயற்கை மரங்களுக்கு மத்தியில் 70 அடி உயரத்தில் உணவகம் அமைக்கப்படும். செயற்கை மரங்களை இணைத்து அமைக்கப்படும் நடைபாதைகளுக்குச் செல்ல மின்தூக்கிகள் அமைக்கப்படும். இத்திட்டத்திற்கு முதல்கட்டமாக ரூ.200 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

361. சென்னை, கோவை நகரங்கள் மருத்துவச் சுற்றுலா நகரங்களாக மாற்றப்படும்.

362. கன்னியாகுமரி மாவட்டத்தில் பனிப்பொழிவு தவிர, கடல், நீர்வீழ்ச்சி, ஆறுகள், ரப்பர் காடுகள், தென்னை தோட்டங்கள் உள்ளிட்ட இயற்கை அளித்த கொடைகள் நிரம்பி கிடக்கின்றன. இதைப் பயன்படுத்திக்கொண்டு, கன்னியாகுமரி மாவட்டம் பசுமை சுற்றுலா மையமாக மாற்றப்படும்.

363. இயற்கை எழில் கொஞ்சும் மற்ற மாவட்டங்களிலும் பசுமை சுற்றுலா திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

## 97. திரைத்துறை

364. கொரோனா வைரஸ் பரவல் காரணமாக, தமிழ்த் திரையுலகில் பல்லாயிரம் கோடி ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படாமல் முடங்கிக் கிடக்கும் 1,500 படங்களை குறிப்பிட்ட கால இடைவெளிக்குள் வெளியிட அரசு உதவி செய்யும்.

365. தமிழ்நாட்டில் வலிமையுள்ள சிலர் சிண்டிகேட் அமைத்துக் கொண்டு, திரையரங்குகள் மீது ஆதிக்கம் செலுத்தும் நிலைக்கு முடிவு கட்டப்படும்.

366. திரையரங்குகளில் பெரிய பட்ஜெட் திரைப்படங்களுக்கும், சிறிய பட்ஜெட் திரைப்படங்களுக்கும் சமவாய்ப்பு வழங்கப்படுவதை அரசு உறுதி செய்யும்.

367. திரைப்படங்களுக்கு தனித் தமிழில் பெயர் வைக்கப்பட்டால், 8% கேளிக்கை வரி செலுத்துவதில் இருந்து முழுமையான விலக்கு அளிக்கப்படும். இதனால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்படும் இழப்பை அரசே ஈடுகட்டும்.

368. சென்னையில் இப்போது உள்ள திரைப்பட நகரம் பொலிவிழந்துவிட்ட நிலையில், சென்னை புறநகர்ப் பகுதியில் தனியார் பங்களிப்புடன் மிகப்பெரிய திரைப்பட நகரம் அமைக்கப்படும்.

## 98. தமிழ் வளர்ச்சி

369. தமிழ்நாட்டில் இருந்து இடம் பெயர்ந்து சென்று உலகம் முழுவதும் சுமார் 150 நாடுகளில் வாழும் தமிழர்களின் குழந்தைகளுக்கு தமிழ் கற்பிப்பதற்காக தொடங்கப்பட்ட தமிழ்ப் பரப்புரை கழகம் இணையவழிக்கு மாற்றாக, நேரடியாக செயல்படுத்தப்படும். இதற்காக, ஒவ்வொரு நாட்டிலும் தமிழ்ப் பரப்புரை கழகத்தின் கிளைகள் தொடங்கப்படும்.

370. தமிழ் பரப்புரைக் கழகத்தின் கிளைகள் மூலமாக, ஒவ்வொரு நாட்டிலும் தேவையான இடங்களில் தமிழ் ஆசிரியர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டு, அவர்கள் மூலம் தமிழ் கற்பிக்கப்படும். பரப்புரைக் கழகம் மூலமாக நேரடித் தேர்வுகள் நடத்தப்பட்டு, அதற்கான சான்றிதழ்களும் வழங்கப்படும்.

371. **உலகில் உள்ள முன்னணி பல்கலைக் கழகங்கள் அனைத்திலும் தமிழ் ஆய்வுக்கு தனி இருக்கைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.**

372. **மழலை வகுப்பிலிருந்து 8ம் வகுப்பு வரை தமிழ் வழிக் கல்வி முறை கட்டாயமாக்கப்படும்.**

373. **பனிரெண்டாம் வகுப்பு வரை தமிழ் வழியில் படித்தவர்களுக்கு மட்டுமே அரசு வேலை வழங்கப்படும்.**

374. தமிழ் வழியில் படித்தவர்களுக்கு உயர் கல்வியில் 30% இடஒதுக்கீடு வழங்கப்படும்.

375. தமிழை தேசிய ஆட்சி மொழியாகவும், சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு மொழியாகவும் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஆலயங்களின் வழிபாட்டு மொழியாக தமிழ் கட்டாயமாக்கப்படும்.

376. அரசின் அனைத்துத் துறைகளின் கோப்புகளிலும் குறிப்பாக தலைமைச் செயலக கோப்புகள் அனைத்தும் தமிழ்மொழியிலேயே செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

377. வணிக நிறுவனங்கள், அங்காடிகள், தொழிற்சாலைகள் போன்றவற்றின் பெயர்ப் பலகைகள், விளம்பரங்கள், விலைப் பட்டியல் செய்தி, ஏடுகள் உள்ளிட்ட ஊடகங்கள், திரைப்படம், தொலைக்காட்சி அனைத்திலும் தமிழ்தான் என்ற நிலை உருவாக்கப்படும்.

378. பள்ளி ஆசிரியர்களுக்குத் தமிழ் ஒலிப்பு மற்றும் எழுத்து முறைகள் பற்றிய புத்தொளிப் பயிற்சி நடத்தப்படும். தமிழ் மரபுகள், தமிழ்ப்பண்பாட்டு நுட்பங்கள் தொடர்பான பிறமொழிப் பதிவேடுகள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுத் தமிழ் வளர்ச்சியில் மேம்பாடு காணப்படும். துறைவாரியான கலைச்சொல் அகராதிகள் உருவாக்கப்படும்.

## 99. அரசு ஊழியர்கள் நலன் – பழைய ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்படும்

379. இந்தியாவில் முதன் முறையாக ராஜஸ்தான் மாநிலத்தில் தொடங்கி, மேற்குவங்கம், ஜார்க்கண்ட், சத்தீஸ்கர், ஹிமாச்சல்பிரதேசம், பஞ்சாப், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் பழைய ஓய்வூதியத் திட்டம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதேபோல், தமிழ்நாட்டிலும் புதிய ஓய்வூதியத் திட்டம் இரத்து செய்யப்பட்டு, 2003ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தமிழ்நாடு அரசுப் பணியில் சேர்ந்தவர்களுக்கு பழைய ஓய்வூதியத் திட்டம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும்.

380. 01.06.2006 அன்று பணிநிலைப்பு செய்யப்பட்ட 45,000 ஆசிரியர்கள் அதற்குமுன் தொகுப்பூதிய அடிப்படையில் பணியாற்றிய 23 மாதங்கள் அவர்களின் பணிக்காலமாக சேர்க்கப்படும். இக்காலத்திற்கான ஊதிய நிலுவையும் வழங்கப்படும்.

381. தமிழ்நாடு அரசுப் பள்ளிகளில் ரூ.10 ஆயிரம் தொகுப்பூதியத்தில் பணியாற்றி வரும் 12,483 பகுதிநேர ஆசிரியர்களுக்கு பணிநிலைப்பு வழங்கப்படும்.

382. அரசு மருத்துவர்களின் ஊதிய முரண்பாடுகள் களையப்படும். அவர்களுக்கு 05, 09, 11, 12 ஆகிய ஆண்டுகளில் காலம் சார்ந்த ஊதிய உயர்வு வழங்கப்படும்.

383. இடைநிலை ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் முதுநிலை பட்டதாரி ஆசிரியர்களின் ஊதிய விகிதங்களில் நிலவும் முரண்பாடுகள் களையப்படும்.

384. அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு ஒரு பதவி உயர்வு கிடைப்பது உறுதி செய்யப்படும்.

## 100. இந்து சமய அறநிலையத்துறை

385. தமிழ்நாட்டில் அனைத்துக் கோயில்களிலும் தமிழிலும் குடமுழுக்கு செய்யப்படும்.

386. இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கோவில்களில் பணியாற்றும் தற்காலிக பணியாளர்கள் அனைவரும் பணிநிலைப்பு செய்யப்படுவார்கள்.

387. இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமான கோவில்களின் நிலங்களை ஆக்கிரமிப்பாளர்களின் பிடியிலிருந்து மீட்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. அதனடிப்படையில் ஆக்கிரமிப்பில் உள்ள நிலங்களை மீட்க இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் தலைமையில் குழு அமைக்கப்படும்.

388. பழங்கால கோவில்களை சீரமைக்கவும், கோவில் குளங்களை தூர்வாரி மேம்படுத்தவும் 2024–25 ஆம் ஆண்டில் ரூ.500 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

## 101. ஊரக வளர்ச்சி – உள்ளாட்சிகளுக்கு உண்மையான அதிகாரம்

389. இந்திய அரசியல் சட்டத்தின் 73–ஆவது சட்டத் திருத்தத்தின் மூலம் பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள் உருவாக்கப்பட்டதன் நோக்கமே அவை உண்மையான சுயாட்சி அமைப்பாக திகழ வேண்டும் என்பது தான். ஆனால், உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிய அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. இந்த நிலையை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

390. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 11ஆவது அட்டவணையில் உள்ளவாறு, உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட வேண்டிய 29 வகையான அதிகாரங்களும் வழங்கப்படும்.

391. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 243ஜி பிரிவின்படி பொருளாதார மேம்பாடு மற்றும் சமூகநீதிக்கான திட்டங்களை வகுத்து செயல்படுத்துவதற்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் அளிக்கப்படும்.

392. 2024–2025ஆம் ஆண்டில் இந்திரா வீட்டுவசதித் திட்டத்தின்கீழ், ஒன்றரை லட்சம் வீடுகளும், பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் ஒரு லட்சம் வீடுகளும் கட்டித்தரப்படும். பசுமை வீடுகளுக்கான நிதியுதவி ரூ.3 லட்சமாகவும், இந்திரா வீட்டுவசதி திட்ட வீடுகளுக்கான நிதியுதவி ரூ.2 லட்சமாகவும் உயர்த்தப்படும்.

### சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி

393. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி தற்போதுள்ள 3 கோடி ரூபாயிலிருந்து ரூ.5 கோடியாக உயர்த்தப்படும்.

## 102. நகராட்சி நிர்வாகம்

394. தமிழகம் வேகமாக நகர்ப்புற மயமாகி வருகிறது. அண்மையில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி, தமிழக மக்கள் தொகையில் 54% நகர்ப்புறங்களில் வாழ்கின்றனர். அவர்களுக்குத் தேவையான வசதிகளை செய்து தர வேண்டுமானால் நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். எனவே, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 12வது அட்டவணையில் உள்ளவாறு, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட வேண்டிய 18 வகையான அதிகாரங்களும் வழங்கப்படும்.

395. நகர்ப்புற நிர்வாக முறையின் (Urban Governance) அனைத்து முக்கிய அம்சங்களும் நகராட்சி நிர்வாகத்தின் அங்கங்களாக்கப்படும்.

396. அனைத்து நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் தூய்மையான, சுவையான குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். போதிய அளவில் விளையாட்டுத் திடல்களும், பூங்காக்களும் அமைக்கப்படும்.

## 103. நகர்ப்புற வீட்டுவசதி

397. அனைத்துக் குடும்பங்களுக்கும் தலா ஒரு வீடு கிடைப்பதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். முதல்கட்டமாக, நடப்பு ஆண்டில் நகர்ப்புற பகுதிகளில் உள்ள நடுத்தர, குறைந்த வருவாய்ப் பிரிவினர் மற்றும் பொருளாதார அடிப்படையில் நலிவடைந்த பிரிவினருக்கு 25 ஆயிரம் வீடுகள் கட்டித்தரப்படும்.

398. நகர்ப்பகுதிகளில் அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் வீட்டுமனைகளின் விலையை முறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

399. வீட்டுவசதி வாரியம் மூலம் உயர் வருவாய் பிரிவினருக்கே அதிக எண்ணிக்கையில் வீடுகள் கட்டித்தரப்படுகின்றன. இந்த நிலையை மாற்றி, நடுத்தர மற்றும் சாதாரண மக்களுக்கும் அதிக எண்ணிக்கையில் வீடுகள் கட்டித்தருவதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்கும்.

400. தனியார் அடுக்குமாடி குடியிருப்புக் கட்டிடங்கள் கட்டப்படும்போது, அதில் 20% வீடுகள் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்காக ஒதுக்கப்படுவதும், அந்த வீடுகளுக்கான விலை லாப நோக்கின்றி நிர்ணயிக்கப்படுவதும் உறுதி செய்யப்படும்.

401. வளர்ச்சியின் பெயரால் குடிசைவாழ் மக்கள் நகருக்கு வெளியே குடியமர்த்தப்படுவது அடியோடு கைவிடப்படும். நகரில் வாழும் உரிமை (Right to the City) என்கிற அடிப்படையில் பெருநகரங்களுக்கு உள்ளேயே தரமான வாழ்விட வசதிகள் ஏற்படுத்தப்படும்.

## 104. குடிநீர்– தண்ணீர் பெறும் உரிமை

402. தண்ணீர் ஒரு அடிப்படை மனித உரிமை என ஐநா அவை அறிவித்துள்ளது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் அளிக்கப்பட்டுள்ள உயிர்வாழும் உரிமை என்பதில் 'தண்ணீருக்கான உரிமையும் அடங்கியுள்ளது' என இந்திய நீதிமன்றங்கள் உறுதி செய்துள்ளன. இத்தகைய சூழலில் குடிநீரை விலைக்கு வாங்கி குடிக்கும் நிலை காணப்படுவது மிகப்பெரிய அவலம் என்று அரசு கருதுகிறது. இந்நிலையை மாற்ற தமிழக அரசு நடவடிக்கை எடுக்கும்.

403. சுகாதாரத்திற்கு அடிப்படை தண்ணீர். தூய்மையான குடிநீர் வழங்கப்படாவிட்டால் மக்களை நோயிலிருந்து பாதுகாக்க முடியாது. எனவே, தூய்மையான, ஊட்டச்சத்தும் தாதுச் சத்தும் நிறைந்த சுவையான தண்ணீர் அனைத்து குடிமக்களுக்கும் இலவசமாக வழங்கப்படுவதை தமிழக அரசு உறுதி செய்யும். இதற்காக 'தண்ணீர் உரிமைத் திட்டம்' செயல்படுத்தப்படும். தண்ணீர் உரிமைத் திட்டம் செயல்பாட்டுக்கு வந்த பிறகு குடிநீருக்காக எவரும் ஒரு காசு கூட செலவிடத் தேவையில்லை என்ற நிலை உருவாக்கப்படும்.

404. அரசு / உள்ளாட்சி அமைப்பால் தூய்மையான குடிநீர் வழங்கப்படாத நிலையில் அல்லது வழங்கப்பட்ட குடிநீர் தூய்மையாக இல்லாத நிலையில், பொதுமக்கள் எவரேனும் பணம் கொடுத்து தண்ணீர் வாங்கும் நிலை உருவானால், அதை நிரூபிக்கும் பட்சத்தில் அவர்கள் குடிநீருக்காக செலவிட்டதைப் போன்று 10 மடங்குத் தொகை அவர்களுக்கு இழப்பீடாக வழங்கப்படும்.

## 105. காலநிலை செயல்திட்டம் (TN Climate Action Plan)

405. காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் கரியமிலவாயு வெளியாகும் அளவை அடுத்த சில ஆண்டுகளுக்குள் மிக வேகமாக குறைத்தாக வேண்டும்; காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் தகவமைப்பு நடவடிக்கைகளை உடனடியாக துரிதப்படுத்த வேண்டும் என்று ஐநா அறிவியலாளர்கள் குழு எச்சரித்துள்ளது.

406. இந்த இலக்கினை அடைய வேண்டும் என்றால் உலகின் ஒவ்வொரு நாடும், ஒவ்வொரு நகரமும், ஒவ்வொரு ஊரும் அனைத்து சமூகங்களும், அனைத்து பிரிவினரும் போர்க்கால அடிப்படையில் காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்தவும், சமாளிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த வகையில், தமிழக நகரங்களுக்கான காலநிலை செயல்திட்டம் (TN Urban Areas Climate Action Plan) உடனடியாக உருவாக்கப்பட்டு, செயல்படுத்தப்படும்.

407. பேருந்து போக்குவரத்தை மேம்படுத்துதல், நடைபாதைகளை உருவாக்குதல், வளர்ச்சிக்கான போக்குவரத்து முறையை உருவாக்குதல் (Transit Oriented Development (TOD), காற்று மாசுபாட்டை காட்டுப்படுத்துதல், ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் ஒழிப்பு, வீடுவீடாக குப்பை சேகரிப்பு மற்றும் திடக்கழிவு மேலாண்மை, கட்டட ஆற்றல் கொள்கையை உருவாக்கி செயல்படுத்துதல், நகரங்களுக்கான தகவமைப்பு திட்டம் நகரங்களுக்கான பேரிடர் திட்டம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இத்திட்டம் செயல்படுத்தப்படும். அதே போன்று, ஊரகப் பகுதிகளில் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக தமிழக கிராமப்புற உள்ளாட்சிகளுக்கான காலநிலை செயல்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 106. தமிழ்நாடு மரங்கள் பாதுகாப்பு சட்டம்

408. தமிழ்நாடு அரசின் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் (ம) வனத்துறை அரசாணையின் படி மாநில மற்றும் மாவட்ட பசுமைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. பொது இடங்களில் உள்ள மரங்களை காப்பதற்காக அமைக்கப்பட்ட இக்குழுக்களால் குறிப்பிடத்தக்க பயன் ஏதுமில்லை. இவை முறையாக செயல்படவும் இல்லை. எனவே, சென்னை உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியது போன்று, புதுதில்லி மாநிலம், மராட்டிய மாநிலம் போன்ற பல்வேறு மாநிலங்களில் உள்ளது போன்று ‘தமிழ்நாடு மரங்கள் பாதுகாப்பு சட்டம்‘ எனும் தனி சட்டம் இயற்றப்பட்டு, அதன் கீழ் அதிகாரமிக்க மரங்கள் ஆணையம் அமைக்கப்படும்.

409. தமிழ்நாட்டில் சதுப்புநிலங்களை கணக்கெடுத்து, அவற்றை பாதுகாப்பதற்காக மாநில சதுப்புநில ஆணையம் (State Wetland Authority) அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆணையத்தின் செயல்பாடுகள் அதிகார வரம்பு மற்றும் மாவட்ட சதுப்புநில மேலாண்மைக் குழுக்கள் உள்ளிட்ட விவரங்கள் அடங்கிய அரசாணை வரும் சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் முடிவடைந்தவுடன் வெளியிடப்படும்.

410. தமிழ்நாட்டில் உயிர்பன்மயத்தை (Biodiversity) பாதுகாக்கும் நோக்குடன் உயிர்பன்மய மேலாண்மைக் குழுக்கள் அமைக்கப்படும்.

## 107. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன்

411. பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான கிரிமிலேயர் முறையை நீக்க வேண்டும். இடைக்கால ஏற்பாடாக கிரிமிலேயருக்கான வருவாய் வரம்பை தற்போதுள்ள ரூ.8 லட்சத்திலிருந்து ரூ.16 லட்சமாக உயர்த்த வேண்டும் என மத்திய அரசிடம் தமிழக அரசு வலியுறுத்தும்.

412. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கான திட்டங்களை மேற்கொள்வதற்கான நிதி ஒதுக்கீடு 2024–2025 ஆம் ஆண்டில் ரூ.2,000 கோடியாக உயர்த்தப்படும்.

413. பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ–மாணவியருக்கு கல்வி உதவித்தொகை வழங்குவதற்கான நிதி ஒதுக்கீடு ரூ.500 கோடியாக உயர்த்தப்படுகிறது.

## 108. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நலன்

414. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான சிறப்புக்கூறு திட்டம் மிகச் சிறப்பான முறையில் செயல்படுத்தப்படும்.

415. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மாணவ–மாணவியர்கள் கல்வி உதவித்தொகைக்கான நிதி ஒதுக்கீடு 50% அதிகரிக்கப்படும்.

416. அட்டவணை இன மக்களுக்கான சிறப்புக் கூறுத்திட்டம், பழங்குடியினர் உட்கூறுத் திட்டம் ஆகியவை சிறப்பாகச் செயல்படுத்தப்படும்.

417. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மாணவ–மாணவியர்கள் கல்வி உதவித் தொகைக்கான நிதி ஒதுக்கீடு ரூ.1,200 கோடியாக உயர்த்தப்படுகிறது.

418. அருந்ததியர் நலனைக் காப்பாற்ற அருந்ததியர் நலவாரியம் ஏற்படுத்தப்படும்.

## 109. மகளிர் மற்றும் குழந்தைகள் நலன்

**காவல்துறையிலும் மகளிருக்கு இடஒதுக்கீடு**

419. தமிழ்நாட்டில் அரசு வேலைவாய்ப்புகளில் மகளிருக்கு வழங்கப்படும் இடஒதுக்கீடு 30 விழுக்காட்டிலிருந்து, 40%ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனாலும், காவல்துறையில் மகளிருக்கு இடஒதுக்கீடு வழங்கப்படுவதில்லை. அரசுப் பணிகளில் மகளிருக்கு வழங்கப்படும் 40% இடஒதுக்கீடு காவல்துறைக்கும் நடப்பாண்டு முதல் நீட்டிக்கப்படும்.

420. பள்ளி மற்றும் கல்லூரி மாணவிகள் மற்றும் வேலைக்குச் செல்லும் பெண்கள் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காகச் சென்னையைப் போன்று பிற மாவட்டங்களிலும் மகளிர் மட்டும் பேருந்துகள் இயக்கப்படும்.

421. பெண்களுக்கான திருமண வயதை 21ஆக உயர்த்துவதற்கான சட்டமுன்வரைவை விரைவாக நிறைவேற்றும்படி, மத்திய அரசை தமிழ்நாடு அரசு கேட்டுக்கொள்ளும்.

422. தமிழக அரசுத் திட்டங்களில் குழந்தைகள் நலன் மற்றும் மேம்பாட்டுக்காகச் செலவிடப்படும் நிதியின் அளவு 23.43% என்ற அளவில் இருந்து குழந்தைகளின் மக்கள் தொகைக்கு ஏற்ப 39% ஆக உயர்த்தப்படும்.

**திருநங்கையர்கள் நலன்**

423. தமிழகத்தில் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் திருநங்கையர்களுக்கு தனியாக குறிப்பிட்ட விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்று தமிழ்நாடு அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. அதை தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொள்ளும்.

424. தமிழ்நாட்டில் திருநங்கையர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர். அப்பட்டியலில் இருந்து அவர்கள் நீக்கப்பட்டு, திருநங்கையர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களுக்கு தனி இடஒதுக்கீடு வழங்கப்படும்.

425. திருநங்கையர்கள் மீது சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினரும் அன்புகாட்டி அரவணைக்க வேண்டியதன் அவசியம் குறித்து மக்களிடம் விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் செய்யப்படும்.

426. குடும்பத்தைப் பிரிந்து வாடும் திருநங்கையர்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கு வசதியாக விடுதிகள் அமைத்துத் தரப்படும்.

## 110. பெண் குழந்தைகளுக்கு ரூ.5 லட்சம் நிதியுதவித் திட்டம்

427. தமிழ்நாட்டில் பெண் குழந்தைகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வருவதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. 2016ஆம் ஆண்டு நிலவரப்படி, தமிழகத்தில் 1000 ஆண் குழந்தைகளுக்கு இணையான பெண் குழந்தைகளின் விகிதம் 840ஆக குறைந்துள்ளது. குழந்தைகள் பாலின விகிதம் இந்த அளவுக்கு குறைந்திருப்பது மிகவும் கவலை அளிக்கிறது. இதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க தமிழக அரசு தீர்மானித்துள்ளது.

428. பெண் குழந்தைகளை பெற்றோர் சுமையாகக் கருதுவதுதான் பாலின விகிதம் குறைவதற்குக் காரணமாகும். இந்த மனநிலையை மாற்றும் நோக்குடன் பெண் குழந்தைகள் 18ஆவது வயதைப் பூர்த்தி செய்யும்போது அவர்களின் கல்வி மற்றும் எதிர்கால செலவினங்களுக்காக ரூ.5 லட்சம் கிடைக்கும் வகையில், ஒரு குறிப்பிட்ட தொகை அவர்கள் பிறந்தவுடன் வங்கியில் வைப்பீடு செய்யப்பட்டு, அதற்கான சான்றிதழ் பெற்றோரிடம் வழங்கப்படும். ஆண்டுக்கு 2 லட்சம் ரூபாய்க்கும் குறைவான குடும்ப வருமானம் கொண்டவர்களின் குழந்தைகள் இத்திட்டத்தின் கீழ் பயனடைவார்கள்.

## 111. சத்துணவுத் திட்டத்திற்கு ரூ.4,000 கோடி நிதி

429. காலை நேர உணவு வழங்கும் திட்டம் அனைத்துப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டிருப்பதை கருத்தில் கொண்டு, சத்துணவுத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு நடப்பாண்டில் ரூ.4,000 கோடியாக உயர்த்தப்படும்.

430. சத்துணவு உட்கொள்ளும் அனைத்துக் குழந்தைகளுக்கும் மாலையில் பால் மற்றும் ரொட்டி வழங்கப்படும்.

**ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்**

431. ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு திட்டத்திற்கான நிதிஒதுக்கீடு 2023–24ஆம் ஆண்டில் ரூ.2,200 கோடியாக உயர்த்தப்படும்.

432. சென்னை, வேலூர், விழுப்புரம், நாகை உள்ளிட்ட 10 மாவட்டங்களில் மட்டும் செயல்படுத்தப்பட்டு வரும் அங்கன்வாடி குழந்தைகளுக்கு வண்ண ஆடைகள் வழங்கும் திட்டம் நடப்பாண்டு முதல் தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

## 112. முதியோர், ஆதரவற்றோர் மற்றும் ஒடுக்கப்பட்டோர் நலன்

433. 60 வயதான அனைவருக்கும் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்படும்.

434. கணவனை இழந்த பெண்களுக்கும், ஆதரவற்ற அனாதைகளுக்கும் உடல் ஊனமுற்ற வேலை செய்ய இயலாதவர்களுக்கும், இதேபோல மாதம் ரூ.3,000 ஒய்வூதியமாக வழங்கப்படும்.

## 113. மாற்றுத்திறனாளிகள் நலன்

435. கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் மாற்றுத் திறனாளிகளுக்குரிய 4 விழுக்காடு இடஒதுக்கீடு கண்டிப்பாக செயல்படுத்தப்படுவது உறுதி செய்யப்படும்.

436. மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக 2024–25ஆம் ஆண்டில் ரூ.500 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

437. மாற்றுத்திறனாளிகள் எந்த வகையிலும் அவமதிக்கப்படவோ, இழிவுபடுத்தப்படவோ கூடாது என்பதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. அரசியல் மேடைகளிலும், பொது இடங்களிலும் மாற்றுத் திறனாளிகளை இழிவுபடுத்தும் வகையில் பேசுவது குற்றமாகக் கருதப்பட்டு, உரிய தண்டனை அளிக்கும் வகையில் தேவையான சட்டத்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

## 114. சிறுபான்மையினர் நலன்

438. தமிழ்நாட்டில் குடியுரிமை சட்டத்திருத்தம் (Citizenship (Amendment) Act, 2019) செயல்படுத்தப்படாது.

439. இன்றைய மக்கள் தொகை விகிதாச்சாரத்தின் அடிப்படையில் சிறுபான்மையினருக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு கிடைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

440. கிறித்தவர்கள், இஸ்லாமியர்கள் உள்ளிட்ட மத சிறுபான்மையினரின் நலன் மற்றும் உரிமைகளைப் பாதுகாக்கப்படும்.

441. சிறுபான்மையினர் நலனுக்கு ஒரு சிறப்புக் கூறுத் திட்டத்தை (Special Component Plan) அரசு செயல்படுத்தும். அவர்களுடைய திறன் மேம்பாட்டிற்காகத் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம், தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் பயிற்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

## 115. தொழிலாளர்கள் நலன்

442. அனைத்து தொழிலாளர்களுக்கும் ஓய்வூதியம் கிடைக்கும் வகையில் சட்டத்திருத்தம் செய்யப்படும்.

443. அமைப்புசாரா தொழிலாளர்கள் அனைவருக்கும் சமூகப் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

444. பனைத் தொழிலாளர்களுக்கு பனைத் தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் பல்வேறு சலுகைகள் வழங்கப்படும்.

## 116. ஓய்வூதியர் நலன்

445. அரசு ஊழியர்கள் ஓய்வுபெறும் நாளன்றே அவர்களுக்கான அனைத்து ஓய்வூதியப் பயன்களும் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

446. ஓய்வூதியதாரர்களை இழந்து தவிக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் உதவித் தொகையின் அளவு ரூ.50,000–லிருந்து ரூ. 75,000 ஆக வழங்கப்படும்.

## 117. பத்திரிகையாளர்கள் நலன்

447. தமிழ்நாட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பத்திரிகையாளர்கள் நல வாரியத்திற்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படும்.

448. தமிழ்நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகையாளர்கள் அனைவருக்கும் 90% மானியத்தில் மடிக்கணினி வழங்கப்படும். ஒரு மடிக்கணினிக்காக பத்திரிகையாளர்கள் அதிகபட்சமாக ரூ.5,000 செலுத்தினால் போதுமானது.

449. பத்திரிகையாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதில் அரசு உறுதியாக உள்ளது. அரசு சார்பில் ஊடகங்களுக்கு வழங்கப்படும் விளம்பரங்களின் மொத்த மதிப்பில் 3% பத்திரிகையாளர் நல நிதிக்கு வழங்கப்படும். இந்த நிதியைக் கொண்டு பத்திரிகையாளர்களுக்குத் தேவையான உதவிகள் வழங்கப்படும்.

450. பத்திரிகைத் துறையில் 20 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வுபெற்ற, நலிந்த பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் ரூ.20,000ஆக உயர்த்தப்படும்.

451. பணியின் போது உயிரிழந்த பத்திரிகையாளர்கள் குடும்பத்திற்கு வழங்கப்படும் நிதியுதவி ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.10 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

## 118. வணிகர் நலன்

452. சில்லரை வணிகத்தில் ஈடுபடுபவர்களுக்குக் கடன் வழங்கும் திட்டத்தை அரசு சரியான முறையில் செயல்படுத்தும். அவர்களுக்குக் கடன் அட்டைகள் வழங்கப்படும். மேலும், வணிகர்களிடையே சுயஉதவிக்குழுக்களை அமைத்துக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக சிறு வணிகர்களுக்கு ரூ.50 கோடி கடன் வழங்கப்படும்.

453. 1983ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தமிழ்நாடு அரசாணையின்படி, பெயர்ப் பலகைகளை தமிழ் மொழியை முதன்மைப்படுத்தி வைக்கும் கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு ஊக்கப் பரிசாக ரூ.1,000 வழங்கப்படும்.

## 119. நடப்பு நிதியாண்டின் (2024 – 2025) ஒட்டுமொத்த நிதிநிலை

454. 2024–2025 ஆம் ஆண்டிற்கான பாட்டாளி மக்கள் கட்சியின் வரவு–செலவுத் திட்டத்தின் நிதிநிலை பற்றிய விபரங்கள் கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை

### 2024 – 2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம்


(ரூபாய் கோடியில்)

| வரிசை எண் | இனம் | 2022–23 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட திருத்த மதிப்பீடு* | 2023 – 24ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீடு* | 2024 – 25ஆம் ஆண்டு வரவு செலவு திட்டமதிப்பீடு |
|---|---|---|---|---|
| 1. | வருவாய் வரவுகள் (1.1. to 1.4.) | 3,06,480.00 | 3,18,471.00 | 5,12,617.00 |
| 1.1 | வரி வருவாய் | 2,15,780.00 | 2,24,515.00 | 2,40,870.00 |
| 1.2 | வரி அல்லாத வருவாய் | 17,370.00 | 18,940.00 | 2,00,180.00 |
| 1.3 | மத்திய வரி வசூலில் பங்கு | 39,740.00 | 40,560.00 | 36,714.00 |
| 1.4 | மத்திய அரசிடம் இருந்து பெறும் மானியம் | 33,950.00 | 34,456.00 | 34,853.00 |
| 2. | மாநிலத்தின் மொத்தச் செலவு (2.1 & 2.2) | 3,10,810.00 | 3,23,940.00 | 5,28,971.00 |
| 2.1 | வருவாய்க் கணக்கில் செலவு | 2,58,640.00 | 2,65,317.00 | 4,51,514.00 |
| 2.2 | மூலதனக் கணக்கில் செலவு | 52,170.00 | 58,623.00 | 77,457.00 |
| 3 | நிதி பற்றாக்குறை / உபரி (1–2) | (–) 4,330.00 | (–) 5,469.00 | (–) 16,354.00 |
| 4 | வருவாய் கணக்கில் உபரி / பற்றாக்குறை (1 – 2.1) | (+) 47,840.00 | (+) 53,154.00 | (+) 61,103.00 |

* பாட்டாளி மக்கள் கட்சியின் மதிப்பீடு

# மூன்று ஆண்டிற்கான மொத்த வரவு - செலவு

(ரூபாய் கோடியில்)




* பாட்டாளி மக்கள் கட்சியின் மதிப்பீடு

455. தமிழக அரசின் 2022–23 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்திருத்த மதிப்பீடும்; 2023–24ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன. பாட்டாளி மக்கள் கட்சியின் மதிப்பீட்டின்படி, நடப்பு நிதியாண்டில் (2024–25) தமிழ்நாடு அரசின் வருவாய் வரவுகள் ரூ.5,12,617 கோடியாக இருக்கும். கடந்த ஆண்டின் வருவாய் வரவான ரூ.3,18,471 கோடியைவிட ரூ.1,94,146 கோடி அதிகமாக இருக்கும். இந்த ஆண்டில் ஏற்படக்கூடிய வருவாய்ச் செலவினங்கள் ரூ.4,51,514 கோடியாக இருக்கும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டின் வருவாய்ச் செலவான ரூ.2,65,317 கோடியைவிட ரூ.1,86,097 கோடி அதிகமாக இருக்கும். இந்த ஆண்டின் வருவாய் வரவுகள், வருவாய்ச் செலவைவிட ரூ.61,103 கோடி அதிகமாக இருப்பதால், அது இந்த ஆண்டின் வருவாய் உபரியாக இருக்கும். நடப்பாண்டில் வரியல்லாத வருவாய், கலால்வரி மூலமான வருவாய் ஆகியவை அதிகரித்திருப்பதாலும், பல்வேறு துறைகளுக்கு அதிக நிதி ஒதுக்கியுள்ள போதிலும், அரசின் செலவுகள் குறைக்கப்பட்டிருப்பதால் வருவாய் உபரி இந்த அளவுக்கு அதிகரித்திருக்கிறது.

456. நடப்பு ஆண்டின் வருவாய் செலவினங்களான ரூ.4,51,514 கோடியில் ரூ.50,000 கோடி நிலுவையில் உள்ள கடனை அடைப்பதற்காக அசலாக செலுத்தப்படும். இதன்படி, அடுத்த 10 ஆண்டுகளில் தமிழக அரசின் தற்போதைய கடன் கட்டுக்குள் கொண்டுவரப்படும். வளர்ச்சித் திட்டங்களுக்காக புதிதாக வாங்கப்படும் கடன் மிகமிக குறைந்த அளவிலேயே இருக்கும்படி பார்த்துக்கொள்ளப்படும்.

457. நடப்பு ஆண்டின் வருவாய் உபரி ரூ.61,103 கோடியாக இருக்கும். இது சென்ற ஆண்டின் வருவாய் உபரியான ரூ.53,154 கோடியைவிட அதிகமாகும். கனிம வளங்களை திறம்பட மேலாண்மை செய்ததால், தமிழக அரசின் வரியில்லாத வருவாய் ரூ. 2,00,180 கோடியாக அதிகரித்ததன் பயனாகவே, கடனுக்காக ரூ.50,000 கோடி செலுத்திய பிறகும், இந்த அளவுக்கு வருவாய் உபரி சாத்தியமானது.

458. வருவாய் வரவுகள், மாநிலத்தின் சொந்த வருவாயாகவும், மத்திய வரி வசூலில் இருந்து கிடைக்கப்பெறும் பங்காகவும் பெறப்படும். தமிழகத்தின் வரி வருவாய் கடந்த ஆண்டின் அளவான ரூ.2,24,515 கோடியிலிருந்து, 7.28 விழுக்காடு அதிகரித்து, இந்த ஆண்டில் ரூ.2,40,870 கோடியாக இருக்கும்.

459. மத்திய அரசிடம் இருந்து கிடைக்கும் வருவாய், மத்திய வரி வசூலின் பங்காகவும், மத்திய அரசிடமிருந்து பெறும் மானியங்களாகவும் இருக்கிறது. நடப்பு ஆண்டில், மத்திய அரசின் வரி வசூலிலிருந்து தமிழகத்திற்கு ரூ.36,714 கோடி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது சென்ற ஆண்டின் பங்கைவிட ரூ.3,846 கோடி குறைவாக இருக்கும். அதேபோல், மத்திய அரசிடம் இருந்து பெறும் மானியங்கள், சென்ற ஆண்டின் மானியத் தொகையான ரூ.34,456 கோடியில் இருந்து ரூ.34,853 கோடியாக உயரும். அதாவது ரூ.397 கோடி கூடுதலாக இருக்கும்.

460. ஒட்டுமொத்தமாக மாநிலத்தின் மொத்த வருவாயையும், மொத்தச் செலவையும் கணக்கில் எடுத்துப் பார்க்கும்போது, இந்த ஆண்டு ரூ.16,354 கோடி நிதிப் பற்றாக்குறையாக இருக்கும். மூலதனக் கணக்கில் ரூ.77,457 கோடி செலவிடப்படும்.

## 120. நிறைவுரை

461. தமிழகத்தின் அனைத்துத் தரப்பு மக்கள் மத்தியில் தமிழக அரசின் நிதிநிலை குறித்த விழிப்புணர்வை உண்டாக்கும் வகையிலும் அனைத்து தரப்பினரின் கருத்துக்களை உள்ளடக்கியதாகவும், இன்றைய பொருளாதார சூழ்நிலை, மக்களின் அவசிய அத்தியாவசியத் தேவைகள், எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒட்டுமொத்த சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ளது.

462. நடப்பாண்டின் தேவைகளையும், வளர்ச்சிப் பணிகளையும் நிறைவேற்றுவதோடு நீடித்த, நிலைத்த, தொலைநோக்குத் திட்டங்களையும் உள்ளடக்கியுள்ளது.

463. இவ்வாறு ஒவ்வொரு ஆண்டின் அரசு நிதிநிலை அறிக்கையால் எல்லோருக்கும் எல்லாமும் கிடைத்து வாழ்க்கைத்தரம் உயரும், வாழ்வு மகிழ்ச்சி நிறைந்ததாக அமையும் என்ற நம்பிக்கையோடும் இந்த நிழல் நிதிநிலை அறிக்கை தமிழக அரசுக்கும், பொது மக்களுக்கும் பெரிதும் பயனுள்ளதாக இருக்கும் என்ற மிகுந்த எதிர்பார்ப்போடு முன் வைப்பதில் பாட்டாளி மக்கள் கட்சி பெருமையடைகிறது.

************